கோகுலம்

GOKULAM

செப்டம்பர் 84 ரூ 2





அறிஞர் அண்ணா

பிறந்த நாள்: 15-9-1909 மறைந்த நாள்: 2.2.1969



கோகுலம்

மலர்—2 இதழ்—8

1984 செப்டம்பர் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ 2/-

ஆண்டுச் சந்தா ரூ. 24/-

அருமைச் சிறுவர் சிறுமியரே,

மாதா, பிதா, குரு — தெய்வம்

தாய், தந்தைக்கு அடுத்தபடியாக நாம் தெய்வம்போல் மதித்துப் போற்றப்பட வேண்டியவர் குரு — அதாவது ஆசிரியர் என்று கூறியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

ஆசிரியரை நீங்கள் தெய்வமாக மதித்து நடந்தால், மிகவும் நல்லது. அப்படி இல்லாது போனாலும், 'நம் ஆசிரியர் நம்மைவிட வயதில் மூத்தவர்; நம்மைக் காட்டிலும் நன்கு படித்தவர். நமக்குக் கல்வி கற்றுக் கொடுத்து, ஏணியாக நின்று நம்மை மேலே மேலே ஏற்றிவிடும் உத்தமமான பணியைச் செய்து வருபவர்' என்ற எண்ணம் இருந்தாலே போதும். ஆசிரியரை மதிக்காதவர்கள், கிண்டல் செய்தவர்கள், எதிர்த்துப் பேசியவர்கள் எவரும் பெருமைக்கு உரியவராகப் பிற்காலத்தில் விளங்கியதாகத் தெரியவில்லை.

'ஆசிரியர்கள் நல்வாழ்வு பெற வேண்டும்; அவர்கள் செய்து வரும் கல்வித் தொண்டு சிறக்க வேண்டும்; அவர்களில் சிறந்தவர்களை விருதுகள் வழங்கிப் பாராட்ட வேண்டும்' — என்றுதான் ஆண்டு தோறும் செப்டம்பர் 5—ஆம் தேதியை '**ஆசிரியர் தினம்**' என்று நாடெங்கும் கொண்டாடுகிறார்கள். ஆசிரியராயிருந்து, நம் பாரத நாட்டின் ஜனாதிபதியாக உயர்ந்த 'உலகம் போற்றும் தத்துவமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளைத்தானே இவ்வாறு கொண்டாடுகிறோம்?


இந்த ஆண்டு பொன்விழாக் காணும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், இந்த இதழில் எழுதியுள்ள கதையில்கூட, ஆசிரியரின் பெருமையை அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

புதுமைப் போட்டியை அறிவிக்கும்போதே, ஆயிரக்கணக்கானவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டு, எங்களைத் திணறடிக்கப் போகிறார்கள் என்றுதான் எதிர்பார்த்தோம். எதிர்பார்த்தபடி தினந்தோறும் நூற்றுக்கணக்கான விடைகள் வந்து குவிந்துள்ளன. பரிசிலனை செய்து, விரைவில் போட்டி முடிவை அறிவிக்க முயன்று வருகிறோம்.

அழ. வள்ளியப்பா



இந்த இதழ் எழுத்தாளர்கள்


அ. க. முனுசாமி


மா. கமலவேலன்



குடந்தை புகழேந்தி


வசந்தா கோவிந்தன்


பானுசந்திரா

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


ஆர். சிதம்பரம்



ஏ எல். ராமு


மீனு ராமச்சந்திரன்


பிருந்தாவனக் கலைஞர்கள்


என். செந்தில் குமார்


அ. சுமதி


இல. கல்பனா


நெ. அன்புச் செழியன்



விஜயவர்மன் குப்த நாட்டு அரசன். கல்வி அறிவு மிகுந்தவன். தெய்வ பக்தி மிக்கவன். மிகுந்த பலசாலி. அவனுடைய வலிமைக்கு அஞ்சி, பல அரசர்கள் மிகுந்த அடக்கத்துடன் நடந்து வந்தார்கள்.

ஸ்ரீராமபட்டர் என்பவர் அவனுடைய ராஜகுருவாக விளங்கினார். இவன் அவரிடம் பணிவுள்ளவனாக நடந்து கொண்டான். வல்லவனாக இருந்த அவனை நல்லவனாக விளங்கச் செய்தார்.

ராஜகுரு இராமேஸ்வர யாத்திரை செய்ய விரும்பினார். விஜயவர்மன் தக்க பாதுகாப்புடன் அவரை அனுப்பி வைத்தான். அரசகுரு நாட்டில் இல்லாத காலத்தில், அடங்கிக் கிடந்த துர்மந்திரி ஒருவன் அரசனைக்கெடுக்க முற்பட்டான்.

அவன் அரசனிடத்தில் பின்வருமாறு கூறத் தொடங்கினான்:

''அரசர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள். தெய்வத்தின் பிரதிநிதிகள். கண்கண்ட தெய்வம் போன்றவர்கள். ஆகவே, மக்கள் அனைவரும் அவரைத் தெய்வமாக வணங்க வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் அரசருடைய சிலைகள் அமைத்து வழிபாடு செய்ய வேண்டும்''

அரசன் மந்திரியினுடைய துர்புத்தியைக் கேட்டு மகிழ்ந்தான். தன்னுடைய சிலைகளை நாடெங்கும் அமைத்தான். அவைகளுக்கு வழிபாடுகள் நடக்க ஏற்பாடு செய்தான். தலைநகரில் பிரதான வீதியில் ஒரு மண்டபம் கட்டி, அதில் தன்னுடைய சிலையை அமைத்தான். அந்த மண்டபத்துக்கு அருகில் யாரும் வாகனங்களிலும் யானை, குதிரை போன்றவைகளிலும் ஏறிச் செல்லக் கூடாது என்று உத்தரவிட்டான். அவ்வழியாகப் போகிறவர்கள் அச்சிலைக்கு எல்லா விதமான



வழிபாடுகளையும் செய்தனர். செய்யாதவர்கள் அரசனிடம் அழைத்துச் செல்லப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள்.

மூன்று ஆண்டுகள் சென்ற பிறகு ராஜகுரு நாடு திரும்பினார். நாடு முழுவதும் காணப்படும் அரசனின் சிலைகளைக் கண்டு வியந்தார்.

தலைநகரில் பிரதான வீதியில் அவருடைய பல்லக்கு வந்துகொண்டு இருந்தது. அந்த மண்டபத்திற்கு அருகில் பல்லக்கு வந்தவுடன் அங்கிருந்த காவல் வீரர்கள் அவரைத் தடுத்தார்கள். அரசனுடைய சிலைக்கு அவரை வணக்கம் செலுத்தச் சொன்னார்கள். அவர் மறுத்து விட்டார். அவரை அரசனிடம் அழைத்துச் சென்றார்கள்.


தான் தெய்வத்தினுடைய பிரதிநிதி என்றும், தன்னை வணங்குவது தெய்வத்தை வணங்குவதற்குச் சமம் என்றும் அரசன் வாதிட்டான். ராஜகுரு அவனை நல்வழிப்படுத்த மெதுவாகக் கூறத் தொடங்கினார். ''அரசனே, கடவுள் ஒருவரே சிருஷ்டிக்கும் வல்லமை வாய்ந்தவர். அவருடைய ஆற்றலை இயற்கையில் அறிய முடியும். மண்ணை உண்டாக்கினார். அதில் மரம் செடி, கொடிகளை உண்டாக்கினார். அவைகளுக்கு நீர் கொடுத்தார். படைக்கப்பட்ட கோடிக் கணக்கான பொருள்களும் வித்தியாசமானவை. ஒன்று போல் ஒன்று இல்லை. மனிதன் ஒருவனே தன்னுடைய உணவைத் தானே தேடிப் பக்குவப் படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டவன். மற்ற ஜீவராசிகளுக்கு இறைவன் உணவூட்டுகிறார். உதாரணமாக, தேன் உண்ணும் வண்டுகளுக்குப் பல புஷ்பங்கள் படைக்கப்பட்டுள்ளன. பகலில் மலரும் பூக்கள் பல வண்ணம் கொண்டவை. அவை வண்டுகளைக் கவர்ந்து தேன் கொடுக்கின்றன. இரவில் மலரும் பூக்கள் வெள்ளை நிறமாகவும் மணம் உடையதாகவும் இருந்து வண்டுகளுக்கு வழி காட்டுகின்றன. இயற்கைப் பொருள்களே சிருஷ்டி ரகசியங்களுக்குச் சாட்சியாக விளங்குகின்றன. சிருஷ்டி கர்த்தாவாகிய பகவானைவிட உயர்ந்தவன் எவனுமில்லை. ஆகவே, அரசனாகிய நீயும் கடவுளை உணர்ந்து அடக்கமாக இருக்க வேண்டும்.''


ராஜகுருவின் பொன்மொழிகளைக் கேட்ட அரசன் வெட்கித் தலைகுனிந்தான்.

ஒருவர் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் கர்வம் கொள்ளக் கூடாது. கரை கடக்காமல் நிற்கும் கடலும், நிதானமாக உலவி வரும் காற்றும், உணவுப் பொருள் முதல் மருந்துப் பொருள் வரை தந்துதவும் இயற்கையும் பகவானின் சொரூபத்தைக் காட்டுகின்றன. இயற்கையைப் பார்த்துத் தெய்வத்தைத் தெளிய வேண்டும்.


காந்தி மணிமொழி:

மனிதன் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ள முடியும் என்பது அரைகுறையான உண்மையாகும். கடவுள் நம் செயல்களில் நமக்கு எந்த அளவு அதிகாரம் அளிக்கிறாரோ அந்த அளவுக்குத்தான் நம் வாழ்வை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்.




மாலியும் ஜூலியும் 6
கருத்து: எம்.ஆர்.ராஜன்
என்னடா மாலி, 'நாய் ஜாக்கிரதை'ன்னு ஒரு போர்டு கதவிலே இருக்குமே! எங்கே காணோம்?
மூந்நாம் நாள் பெயிண்ட் அடிச்ச போது கழற்றி வச்சோம். இனிமேல் நான் திரும்ப மாட்டேனும்!
மாமா, அந்த போர்டைப் பத்திப் பேசினதை ஜூலி கேட்டுக்கிட்டே இருந்தா, இதோ போர்டை எடுத்து வர ஓடுது!
மாமா, நான் சொன்னபடியே எடுத்து வந்தது, ஜூலி, அதை எங்கிட்டே கொடு!
பாருங்க மாமா, எங்கிட்டே கொடுக்காதாம். உங்க கிட்டே கொடுக்குது!
நிஜமாவே ஜூலி புத்திசாலி தாண்டா! இது 'நாய் ஜாக்கிரதை' போர்டு இல்லே! நான் கேட்டைத் திறந்து வச்சிட்டேனம். 'கேட்டை மூடி விட்டு வரவும்' என்கிற போர்டை எடுத்து வந்து கொடுக்குது!
கேட்டை மூடி விட்டு வரவும்

சார் தபால்!



● இலக்கியத் திலகம் அமரர் கல்கி அவர்களின் 'மோகினித் தீவு' கதையினை வண்ணப் படங்களுடன் படிக்க நேர்ந்த நாங்கள் உண்மையில் பாக்கியசாலிகள்!
—திருமதி விஜயா ரங்கநாதன், டொம்பிவிலி.

● உங்களுக்கு ஞாபகமறதி அதிகமோ? ஜூலை 15—ம் தேதி பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் என்பதை மறந்துவிட்டீர்களா? பெருந்தலைவர் படத்தைப் போடாமல் விட்டுவிட்டீர்களே!

(ஆர். சேதுரத்தினம், மு. களத்தூர். கோகுலம் அக்டோபர் 1983 இதழில் சிரித்த முகத்துடன் வணக்கம் செலுத்தும் பெருந்தலைவர் படம் வந்திருக்கிறதே. பார்க்கவில்லை போலும்!
—ஆசிரியர்)

● பிருந்தாவனக் கதைகளும் கவிதைகளும் மிகவும் அருமை. எதிர்கால இந்தியாவின் இளைய எழுத்தாளர் தலைமுறைக்கு நல்ல ஊக்கம் தரும் பகுதி.
குமுதவல்லியரசு, நீடாமங்கலம்.

● கம்ப்யூட்டர் வித்தகன் குஹன் பற்றிய விவரங்களைப் படித்த போது அடைந்த வியப்புக்கு அளவே இல்லை.
—எம். எச். சாதிக்பாட்சா (544), நீடூர்.

● ஒலிம்பிக்ஸ் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் எழுதிய 'குண்டுமணி', அவர்களுக்கு என் உள்ளம் கனிந்த பாராட்டு.
—என். சந்திரன் (4785), பாவட்டக்குடி.

● புதுமைப்போட்டி சொன்னபடியே புதுமையாக உள்ளது. இதுபோன்ற போட்டிகளை அடிக்கடி நடத்துங்கள்.
—ஜி.ராதாகிருஷ்ணன்,(5356)மயிலாடுதுறை

● நீர் யானையின் கதை மிக அருமை. அது போல் மற்ற மிருகங்களைப் பற்றியும் ஒவ்வொரு இதழிலும் வெளியிடலாமே!
—பி. எஸ். முத்துராமகிருஷ்ணன் (2587), சங்கரன் கோவில்.

● மாவீரர் மங்கள பாண்டேயின் முடிவைப் படித்ததும், என்னை அறியாமல் என் கண்கள் குளமாயின.
—தா. சிந்துகுமார் (4764), திருவட்டார்.

● மங்களபாண்டேயின் புகைப்படத்தையும் வெளியிட்டிருந்தால், இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.
—இரா.லோகநாதன்(4117), அனுப்பம்பட்டு

[பல இடங்களில் கேட்டுப் பார்த்தும் கிடைக்கவில்லை அவரது புகைப்படம். ஆயினும், முயற்சியைக் கைவிடவில்லை. கிடைத்தால், நிச்சயம் வெளியிடுவோம். —ஆசிரியர்.]

● 'கிளைடர் விமானமும், ஒரு கரடியும்' படிக்கப் படிக்கச் சிரிப்பாக இருந்தது. விஞ்ஞானமும் வேடிக்கையும் கலந்த எம். சோலையன் அவர்களின் கதைகள் என்னையும் என் நண்பர்களையும் மிகவும் கவர்ந்து வருகின்றன.
—எஸ். முரளீதரன், திருப்பத்தூர்(வ. ஆ.).

● கவிஞர் இளையவன் பாடல் 'உயர்வும் தாழ்வும்' உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அதற்குப் போட்டிருக்கும் படங்களும் அருமை.
—வி. ஸ்வர்ணலதா, பேராவூரணி.

● நான் சிறுவனாக இருந்த போது 'அணில்' பத்திரிகையை மிகவும் ஆர்வமாகப் படிப்பேன். 'தமிழ்வாணன்' போன்ற பலரைத் தமிழகத்துக்கு உருவாக்கித் தந்தவை. கோவிந்தன் அவர்களைத் தமிழ்ப் பற்றுடையவர்கள் மறக்கவே கூடாது. அவரைப் பற்றி இன்றைய சிறுவர் சிறுமியருக்கு அறிமுகப்படுத்தியது மிகவும் பாராட்டத்தக்க செயல்.
—அ. அண்ணாமலை, கொரட்டூர்.

● 'கேள்வி இங்கே:பதில் எங்கே?' பகுதியை ஒரு முழுப் பக்கத்தில் வெளியிட்டு, பதில்களை வேறொரு பக்கத்தில் வெளியிட்டால், இன்னும் உதவியாக இருக்கும்.
—தே. கமலக்கண்ணன், சென்னை—5.


● உலகச் சிறுவர் கதைகளுக்கு மிகவும் சிறப்பாகப் படங்கள் போடும் 'கல்பனா' ஆணா, பெண்ணா?
—வி. மனோகர், கருங்குழி
(அது பரம ரகசியம்! —ஆசிரியர்)

● ரத்தினச் சுருக்கமாகவும், சித்திரப் பெருக்கமாகவும் சிறப்பு முத்திரை பெறுகிறது, அமரர் கல்கியின் 'மோகினித்தீவு'' இதேபோல், அவரது மற்ற வரலாற்று நவீனங்களையும் தொடர்ந்து பல கதைகளாக வழங்க முயற்சி செய்யுமாறு வேண்டுகிறேன்.
—கலைமாமணி புத்தனேரி சுப்பிரமணியம்,
—சென்னை—18.

● ஹ ஹா... ஹ ஹ ஹா! ஹ ஹ ஹா! என்ன விழிக்கிறீர்கள்? 'பீம் புஷ்லி' கதைக்கு நாங்கள் கொடுக்கும் விமர்சனம்தான் இது!
—எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

அட்டையில் கொலுக்காட்சி:

வண்ணப்படம்: உத்ரா



குழந்தைக் கவிஞர்

பழைய கதை : புதிய பாடல்

தரும சங்கடம் — குழந்தைக் கவிஞர்—

மண்ணால் பாண்டம் செய்கின்ற
மாணிக்கம்ஒரு மாப்பிள்ளை;
மண்ணை உழுது பயிர்செய்யும்
மன்னாரும்ஒரு மாப்பிள்ளை.

பெரிய சாமி தம்முடைய
பெண்கள் இருவரை அவர்களுக்குத்
திருமணம் செய்து கொடுத்திருந்தார்;
தினமும் அவர்களை நினைத்திருந்தார்.

புதல்விகள் ஊரோ வெவ்வேறும்.
போனார் அவர்களைக் காண்பதற்கே.
முதல்மகள் வீட்டில் சிலநாட்கள்
மிகவும் மகிழ்ந்தே இருந்தனராம்.

புறப்படும் போது மகளிடத்தில்,
''போகிறேன் தங்கை வீட்டிற்கு.
விரும்புவ தென்ன? உனக்காக
வேண்டிக் கொள்வேன்'' எனக்
கேட்டார்.

''உழைத்துச் செய்த பானைகளை
உலர வைத்தோம். ஆதலினால்
மழையே பெய்யா திருப்பதற்கு
மனத்தால் வேண்டுக'' எனச்
சொன்னாள்.

இன்னொரு மகளின் வீட்டினிலே
இருந்தார் சிலநாள். அதன்பின்னர்,
''என்னதான் உனது விருப்பமம்மா?
இறைவனை வேண்டுவேன்'' எனச்
சொன்னார்.

''உழைத்தோம்; விதைத்தோம் பயிர்
வளர.
ஒருதுளி கூட மழையில்லை.
மழையை வேண்டுக''எனச்சொன்னாள்.
மனந்தடு மாறினார் தந்தையுமே.

''ஒருமகள் 'வேண்டாம்' மழையென்றாள்
ஒருமகள் 'வேண்டும்' மழையென்றாள்
இருவர் சொல்வதும் நியாயம்தான்.
எனக்கோ தரும சங்கடந்தான்!''



பிருந்தாவனக் கதையரங்கம்



தேவகியின் தங்கை

மாங்குடியில் பார்வதி என்று ஒரு சிறுமி இருந்தாள். அவள் யாருமில்லாத அனாதை. அவள் அவ்வூரில் உள்ள செல்வந்தர் வாசுதேவனிடம் வேலை செய்து வந்தாள். வாசு எதற்கெடுத்தாலும் பார்வதியைத்தான் அழைப்பார். அந்த அளவிற்குப் பார்வதியிடம் அவருக்கு அன்பு, பாசம். அதனால், அவரது ஒரே மகள் தேவகி, பார்வதியிடம் அளவு கடந்த வெறுப்பும், பொறாமையும் கொண்டிருந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வாசுதேவன் குளித்து, சாப்பிட்டு வெளியே புறப்பட்டார். வாசலுக்குச் சென்றவர் சாவியை மறந்து விட்டார். உடனே ''பார்வதி, பார்வதி'', எனப் பார்வதியை அழைத்தார்.

புல்வெளியில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த தேவகி, ''என்ன வேண்டும் அப்பா?'' என்று கேட்டாள்.

''நீ சும்மாயிரம்மா, நான் பார்வதியைக் கூப்பிடுகிறேன்'' என்று மேலும் பார்வதியைக் கூப்பிட்டார்.

''என்ன வேணும் ஐயா?'' என்று கேட்டவாறே பார்வதி உள்ளிருந்து வந்தாள். ''நான் சாப்பாட்டு மேஜையருகே சாவியை வைத்துவிட்டேன். அதை எடுத்துக் கொண்டு வா'' எனக் கூறினார். உடனே பார்வதி சாவியை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்ட வாசுதேவன், வெளியே சென்று விட்டார்.

தேவகி ஆத்திரமாய்ப் பார்வதியிடம் வந்து, ''பார்வதி, இனி அப்பா எதைக் கேட்டாலும் நான்தான் எடுத்துத் தருவேன். நீ தரக்கூடாது. புரிகிறதா?'' என்று கடுமையாக முகத்தை வைத்துக்கொண்டு சொன்னாள்.

பார்வதி நடுங்கியவாறே, ''அக்கா, ஐயா என்னிடம் கேட்டதால்தானே நான் எடுத்துக் கொடுத்தேன். இதில் என்னக்கா தவறு?'' எனக் கேட்டாள்.

அதற்குத் தேவகி, ''அக்காவாம் அக்கா! நீ என்ன, என் தங்கையா? செய்கிறதையும் செய்துவிட்டு என்ன தவறு என்று கேட்கிறாயா? உன்னைப் பழிக்குப் பழி வாங்கினால்தான் என் ஆத்திரம் தீரும்'' எனக் கத்தியவாறே உள்ளே சென்று விட்டாள்.

பார்வதி அழுதுகொண்டு தன்னிடத்தில் படுத்து விட்டாள்.

மறுநாள் திங்களன்று தேவகி தந்தையின் ஸ்கூட்டரில் பள்ளி சென்றாள். எப்போதும் காலையில் செல்லும்போது தந்தையின் ஸ்கூட்டரில் சென்று விடுவாள். சாயந்திரம் திரும்பும்போது பார்வதியின் துணையோடு சைக்கிள் ரிக்‌ஷாவில் வீடு திரும்புவாள். ஏனென்றால், பள்ளி தேவகியின் வீட்டிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது.

அன்று சாயந்திரம் பார்வதி சைக்கிள் ரிக்‌ஷாவில் தேவகியை அழைத்து வரச் சென்றாள். அங்கு தேவகி பள்ளி வாசலில் கடுகடு என்று முகத்தை வைத்துக் கொண்டு நின்றிருந்தாள். பார்வதி நடுங்கிக் கொண்டே இறங்கி, ''அக்கா, ஏறிக் கொள்ளுங்கள்'' என்றாள்.

''எனக்கு ஏறிவரத் தெரியும். நீ உன் வேலையைப் பார்'' எனப் பதிலளித்தவாறே தேவகி ரிக்‌ஷாவில் ஏறிக் கொண்டாள்.

வழக்கம்போல் பார்வதி ஏறப் போகும் போது, ''நில், இன்று நீ நடந்துதான் வர வேண்டும்'' என்று தேவகி கூறிவிட்டு ரிக்‌ஷாக்காரனை நோக்கி,

''ரிக்ஷாவை வீட்டுக்கு விடு'' எனக் கூறினாள். பார்வதி திகைத்து நின்றாள்.

சைக்கிள் ரிக்ஷா நகர்ந்தது. பார்வதி திடுக்கிட்டவாறு ரிக்ஷாவின் பின்னாலேயே ஓடினாள். சைக்கிள் ரிக்ஷா மிக வேகமாகச் சென்றது. வெகு தூரத்தில் சென்று விட்டது. பார்வதி களைத்துப் போய் ஒரு குத்துக்கல்லில் உட்கார்ந்தாள்.

அப்போது அந்தச் சாலையில் ஒரு ஸ்கூட்டர் வந்தது. அது பார்வதியின் முன் நின்றது. அதிலிருந்து வாசுதேவன் இறங்கி, ''எங்கேயம்மா தேவகி? பள்ளியில் அவளைக் காணவில்லையே! நீ ஏன் இங்கு அமர்ந்திருக்கிறாய்?'' என்று பதற்றத்துடன் கேட்டார். பார்வதி கேவியவாறே நடந்ததையெல்லாம் சொன்னாள்.

உடனே அவர், ''பார்வதி, நீ ஸ்கூட்டரில் ஏறிக் கொள். ரிக்ஷா அதிக தூரம் போயிருக்காது'' என அழைத்தார். பார்வதி கண்களைத் துடைத்துக் கொண்டு ஸ்கூட்டரின் பின்னால் ஏறிக் கொண்டாள். அதற்குள் ரிக்ஷா பள்ளியிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரம் சென்று விட்டது. சென்று கொண்டிருந்த ரிக்ஷா திடீரென நின்றது. தேவகி, ''ரிக்ஷாவில் என்ன கோளாறு?'' எனக் கேட்டாள்.

''மறுபேச்சுப் பேசாமல் உன் கழுத்திலுள்ள சங்கிலி, தோடு முதலியவற்றைக் கழற்றிக் கொடு'' என்று ரிக்ஷாக்காரன் கையில் கத்தியோடு மிரட்டினான். அப்போது சிறிது தூரத்தில் ஸ்கூட்டர் வரும் சத்தம் கேட்டது. உடனே ரிக்ஷாக்காரன் ரிப்பேர் செய்வது போலப் பாசாங்கு செய்தான்.

ஸ்கூட்டர் ரிக்ஷாவின் அருகில் வந்து நின்றது. வாசுதேவன் ஸ்கூட்டரில் இருந்து இறங்கி ரிக்ஷாக்காரனிடம் சென்று, ''என்னப்பா வண்டியில் கோளாறு?'' எனக் கேட்டார். ரிக்ஷாக்காரன் ''திரு, திரு'' வென விழித்தான்.

தேவகி அழுதவாறே, ''அப்பா, இவன் என் சங்கிலி, தோடு எல்லாவற்றையும் கொடு என மிரட்டினான். அப்போதுதான், பார்வதியை அழைத்து வராதது எவ்வளவு பெரிய தவறு என்று நான் உணர்ந்தேன்.'' என்று கூறினாள்.

வாசுதேவன் கோபத்தோடு ரிக்ஷாக்காரனிடம், ''டேய், கன்னத்தில் இரண்டு அறை கொடுத்தால்தான் சரியாய் வரும். இப்படியா செய்தாய்? இனி மிரட்டி நகை பறிப்பாயா?'' என அதட்டினார்.

ரிக்ஷாக்காரன் அலறியவாறே, ''மாட்டேன், மாட்டேன்'' எனக் கூறி அவர் காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டான்.

வாசுதேவன், ''தேவகி, ஏன் பார்வதியை ஏற வேண்டாம் என்று சொல்லி விட்டாய்?'' என்று கோபமாய்க் கேட்டார்.

''அப்பா, பார்வதிமேல் உள்ள பொறாமையால் அப்படிச் சொல்லி விட்டேன். என்னை மன்னியுங்கள்'' என்றாள் தேவகி. ''பார்வதி, நீயும் என்னை மன்னித்து விடு'' என்று அழுதவாறே கூறினாள்.

''அழாதீர்கள் அக்கா! அதனால் என்ன, பரவாயில்லை!'' என்று பார்வதி கூறினாள். தேவகி, ''ஆமாம். நான் உனக்கு அக்காதான், நீ எனக்குத் தங்கைதான்'' என மகிழ்ச்சியாகக் கூறினாள்.

வாசுதேவன், ''அப்பாடா! இப்பொழுதாவது உனக்குப் புத்தி வந்ததே!'' என்று கூறிச் சிரித்தார். அவ்விருவரையும்வாசுதேவனோடுஏற்றிக் கொண்டு ஸ்கூட்டர் விரைந்தது!

—ஆர். ஸ்ரீநிவாஸன், (5325)மதுரை—1.



நீள்காது மகாராஜா!

மகிழ்புரம், மகிழ்புரம் என்ற ஊரை முன்பு ஒரு 'மகாராஜா' ஆண்டுவந்தார்.

அவரது பெயரே அவருக்கு மறந்து விட்டது!

ஏனெனில்,

அவர் காதுகள் சற்று நீளமாக இருந்தன!

அதனால் அவர் 'நீள்காது மகாராஜா' என்று அழைக்கப்பட்டார்.

அவரது கட்டளைகள் இரண்டு:

1. தன்னைப் பார்த்து - முக்கியமாய்த் தன் காதுகளைப் பார்த்து யாரும் சிரிக்கக் கூடாது!

2. ஒரு கண்ணாடி கூட அரண்மனை யில் இருக்கக் கூடாது!

மகாராஜா சற்று பயந்தாங் கொள்ளி.

அதனால், பவனி வரும்பொழுது குதிரை, யானை, இவற்றின் மீது ஏறப் பயந்து 'கழுதை' மீதுதான் ஏறிவருவார்.

அப்பொழுது, தன் காதுகளை யாரும் பார்த்து விடாதிருக்க முக்கா டிட்டுக் கொண்டு வருவார்.

கழுதையையும் முக்காடிட்ட ராஜா வையும் பார்க்கப் பார்க்கச் சிரிப்பாய் வரும் மக்களுக்கு.

சிறைக்குப் பயந்து சிரிக்க மாட் டார்கள்! ராஜா தன் காதுகளைப் பற்றியே கவலைப் பட்டதால், நாட்டு மக்களைக் கவனிக்க அவருக்கு நேரமே இல்லை.

அவ்வூரில் ஓர் ஏழைச் சிறுவன் இருந் தான்.

தந்தை தாயற்ற அநாதை. கிடைத்த வேலையைச் செய்து கிடைத்த உணவை உண்பான்.

சிறுவன் கழுதை மேல் சென்ற ராஜாவைத் தெருவில் கண்டான். உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவன் தன்னுடைய இரண்டு காதுகளின் மீதும் இரண்டு சதுரத் துணிகளை வைத்து ஒட்டினான். காதுகள் தெரியாமல் நன்முகமறைத்துக் கொண்டான். நடுவே ஒரு சிறு ஓட்டை மட்டும் போட்டுக் கொண் டான். அரண்மனையை நோக்கி நடந் தான்.

சிறுவன் மிகவும் சிறியவனாக இருந்த படியால் சுலபமாக அரண்மனைக்குள் நுழைந்து விட்டான்.

நீள்காதுமகாராஜா 'பவனி' வந்த 'களைப்பு'த் தீர ஓய்வு எடுத்துக்கொண் டிருந்தார்.

சிறுவன் அவர் அருகில் போனான்.

ராஜா அவனைப் பார்த்தார்!

''அடேய் சின்னப்பயலே! ஏனடா இங்கு வந்தாய்? காரணத்தைச் சொல்'' என்றார்.

''மகாராஜா, என் குறையை நீங்கள்தான் தீர்க்க வேண்டும்'' சிறு வன் பரிதாபமாய்க் கெஞ்சினான்.

''என்ன குறை? சொல்!''

''மகாராஜா, எனக்குக் காதே இல்லை! என்னை எல்லோரும் கேலி செய்கிறார்கள். அதனால் துணியை வைத்து மறைத்துக் கொண்டிருக் கிறேன்.''

ராஜா திடுக்கிட்டார்.

காதில்லாச் சிறுவன்!

''ஏன்? உன் காது என்னவாயிற்று?''

''ஒருவேளை, என் காதையும் சேர்த்துக் கடவுள் உங்களுக்கு வைத்து விட்டார் போலும்!'' என்றான் சிறுவன் சிரிக்காமல்!

ஆனால், ராஜா சிரித்து விட்டார்.

அக்கணமே முக்காட்டைத் தூக்கி எறிந்தார்!

காதே இல்லாதவனைக் காட்டிலும் நீளமோ, குட்டையோ காதிருப்பது நல்லதுதானே!

—ஆர். சிதம்பரம் (2505), திருச்சி—17.



முத்து செய்த முடிவு?

சேட்டு கடையைத் தாண்டி அங்குள்ள பால்கோவாவைப் பார்த்த வாறு நடந்து சென்றான் முத்து. அவன் வாயில் எச்சில் ஊறியது. அதை அவன் வாங்கிச் சாப்பிட வேண்டும் என்று நெடுநாளாக ஆசை. ஆசைப்பட்டு என்ன செய்வது? அவ னிடம் காசு இல்லையே! அவனோ பரம ஏழை.

முத்து தீப்பெட்டித் தொழிற்சாலை யில் வேலை செய்பவன். அங்கு அவன் அச்சுக்களில் தீக்குச்சியைப் போட வேண்டும். அவனால் ஒரு நாளைக்குப் பத்து அச்சுக்கு மேல் போட முடி யாது. அதற்கு அவனுக்கு 2 ரூபாய் தான் கிடைத்தது.

அவனுடைய அப்பா அதே தீப் பெட்டித் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்திலே இறந்து விட்டார். அவன் அம்மா சில வீடுகளில், வீட்டு வேலை செய்து சம்பாதித்து வந்தாள். இவர்கள் இருவருடைய ஊதியத்தில் தான் அவன், அம்மா, மூன்று சகோ தரிகள் அடங்கிய குடும்பம் எப்படியோ காலத்தை ஓட்டி வந்தது. இந்நிலையில், ஆசைப்பட்டதை நம்மால் வாங்கிச்

சாப்பிட இயலுமா? என்று யோசித்தவாறு வீடு சென்றான்.

மறுநாள் முத்து வழக்கத்தைவிட 2 மணி நேரம் முன்னதாகவே புறப்பட்டு விட்டான். நேரம் சென்றது. மாலை 4 மணி ஆகிவிட்டது. அவன் 12 அச்சுகளை நிரப்பிவிட்டான். அன்று வேலை முடிந்து அனைவரும் சென்று விட்டனர். முத்து மட்டும் 5 மணி வரை வேலைபார்த்து மேலும் 3 அச்சுகளை நிரப்பினான்.

அன்று அவனால் நகரக் கூட முடியவில்லை. அவ்வளவு அசதி. சிறிது நேரம் கழித்துத் தனக்குச் சேரவேண்டிய 3 ரூபாயை வாங்கிக்கொண்டு, சேட்டு கடைக்குச் சென்றான். அங்கு 50 கிராம் பால்கோவாவை 1ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டு சாப்பிட நினைத்தான். அப்போது அவனுடைய அம்மா, சகோதரிகளை நினைத்தான். அதனால் அவர்களுக்குக் கொடுத்துச் சாப்பிட எண்ணித் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு நடந்தான். நடந்து சென்ற போது அவன் மனம் அலைபாய்ந்தது.

பால்கோவாவைத் தனக்கும் தன் தாய் மற்றும் மூன்று சகோதரிகளுக்கும் பங்கு வைத்தால் அவனுக்கு ஒரு சிறிய பாகம் மட்டுமே கிடைக்கும். ஆதலால் அவர்களுக்குத் தெரியாமல் சாப்பிட எண்ணினான். ஆனாலும், மனம் வரவில்லை. அவனுக்கு நடந்து வந்ததே தெரியவில்லை. அவன் ஊர் வந்து விட்டது. கோயிலில் 6 மணிக்கான பூஜை நடந்து கொண்டிருந்தது. கோயிலில் எழுந்தருளியுள்ள முருகனுக்கு, தனக்குப் பால்கோவா கிடைத்ததற்காக அவன் நன்றி செலுத்தினான்.

தன் குடிசைக்குள் நுழைந்தான். வழக்கம் போல் 2 ரூபாயை அம்மாவிடம் கொடுத்துவிட்டு, யாருக்கும் தெரியாமல் மூலையிலிருந்த ஒரு மண் சட்டியில் பால்கோவாவை வைத்து இன்னொரு தட்டால் மூடினான்.

காலையில் எழுந்ததும், மெல்ல அந்த மண் சட்டியின் அருகில் சென்றான். யாரும் பார்க்காதபோது மேலே இருந்த தட்டைத் தூக்கி உள்ளே கைவிட்டான். கையில் எதுவுமே தட்டுப்படவில்லை. பரபரப்புடன் அந்தச் சட்டியை உற்றுப் பார்த்தான். பால்கோவாவில் ஒரு துளிகூட இல்லை! 'இது சனியன் பிடித்த எலியின் வேலையாகத்தான் இருக்கும். மூடியைத் தள்ளிவிட்டு,பால்கோவாவை விழுங்கிவிட்டது!' என்று பரிதவித்தான்.

முத்து கடினமாக உழைத்தது தப்பில்லை; சம்பாதித்த பணத்தில் பால்கோவா வாங்கியதும் தப்பில்லை: கோவில் முருகனுக்கு நன்றி செலுத்தியதும் தப்பில்லை. ஆனால், அவன் தன் சகோதரிகளுக்கும் தாய்க்கும் கொடுத்தால் தன் பங்கு குறைந்துவிடும் என்று நினைத்தானே, அதுதான் தப்பு!

'ஐயோ, அம்மாவுக்கும் தங்கைகளுக்கும் தெரியாமல் பால்கோவாவை நானே தின்ன நினைத்தேன். எனக்குத் தெரியாமல் எலி தின்றுவிட்டதே!' என்று வருந்தினான்.

'இன்றைக்கும் நான் வெகுநேரம் வேலை பார்த்து அதிகமாகச் சம்பாதிப்பேன். பால்கோவா வாங்கி வீட்டிலுள்ள அனைவருக்கும் கொடுப்பேன்'' என்று மனத்துக்குள் கூறிக் கொண்டு வேலைக்குக் கிளம்பினான்.

—ஏ. எல். ராமு (3674), மதுரை.



மணி கேட்ட மன்னிப்பு

''அய்யோ! அப்பா! வெயில் என்னமாக் கொளுத்துது! சனியன்! இந்தச் செருப்பு வேறே அறுந்து போச்சுது! ம்? இப்ப என்ன செய்யலாம்?'' என்று யோசித்தவாறே நடந்து வந்து கொண்டிருந்தான்மணி.

'நல்லவேளை! பணமாவது இருக்கு! இதோ, இந்தச் செருப்பை அந்தக் குப்பைத் தொட்டியிலே போட்டுட்டு, வேற செருப்பு வாங்கலாம்' என்று நினைத்து, செருப்பை வீசினான். அருகிலேயே ஒரு கிழவரின் மிகச் சிறிய செருப்புக் கடை இருந்தது! அதனுள் நுழைந்து, அச்செருப்புக்களைப் பார்வை இட்டான்.

பிறகு அவனுக்கு மிகப் பிடித்த ஒரு ஜோடியைச் சுட்டிக் காட்டி, ''யோவ் கிழவா! அந்த ஜோடி என்ன விலை?'' என்று கேட்டான்.

''அதுவா தம்பி? அது ஜோடி 10 ரூபா'' என்றார் கிழவர்.

''என்னது! பத்து ரூபாயா? அம்மாடியோவ்! வேணுமின்னா ஒரு ஏழு ரூபா தர்றேன்!'' என்றான் மணி.

''என்னா தம்பி இது! தோல் விக்கிற விலைக்கு 10 ரூபாய் கம்மியாச்சே! வாங்கிட்டுப் போப்பா!'' என்றார் கிழவர்.

''இந்தா பாரய்யா! ஏழு ரூபாய்க்கு மேல ஒரு பைசாக் கூடத் தரமாட்டேன்! நீ அந்தச் செருப்பைத் தராட்டிப் போயேன்! நான் அதோ தெரியுதே! அந்தப் பெரிய கடையிலேருந்து இதைவிட நல்லதா ஒரு செருப்பு வாங்கிக்கறேன்!'' என்று கூறிவிட்டு நகர்ந்தான் மணி.

''தம்பி, இங்கே 10 ரூபாய்க்கு வாங்குகிற செருப்பு அங்கே 30 ரூபா ஆகும். தரமும் எப்படி இருக்குமோ? இந்தச் செருப்பைப் பொறுத்தவரை நீண்ட நாளைக்கு உழைக்கும். நம்பி வாங்கிக்கோ'' என்றார் கடைக்காரர்.

''என்ன கிழவா, உன் கடைச் செருப்புத்தான் உசத்தியா? உன்னைப் போலச் சின்னக் கடைக்காரங்கதான் உள்ளே அட்டையை வச்சு எங்களை ஏமாத்திடுவாங்க. பெரிய கடையிலே இப்படியெல்லாம் செய்ய மாட்டாங்க'' என்றான் மணி.

''இந்தச் செருப்பிலே முழுக்க முழுக்கத் தோல்தான். அட்டையே கிடையாது. தம்பி, உனக்கு வேண்டாம்னா இப்படியெல்லாம் பேசாதே. உன் இஷ்டம் போல் அந்தப் பெரிய கடையிலேயே வாங்கிக்கோ'' என்றார் கிழவர்.

மணி அங்கிருந்து குளிர்சாதனம் செய்யப்பட்ட பெரிய கடைக்குச் சென்றான். 35 ரூபாய் கொடுத்து ஒரு ஜோடி செருப்பை வாங்கித் திருப்தியோடு வீட்டிற்குத் திரும்பினான்.

இது நடந்து ஒரு வாரம் இருக்கும். காலை நேரம். செருப்புக் கடைக்காரக் கிழவர் குளித்துவிட்டு, அங்குள்ள சுவாமி படங்களுக்குக் கற்பூர ஆரத்தி எடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது வாசலில், ''ஐயா!'' என்ற குரல் கேட்டது. கடைக்காரர் திரும்பிப் பார்த்தார். மணி அங்கே நின்று கொண்டிருந்தான்.

''ஐயா, என்னை ஞாபகமிருக்கா?'' என்று கேட்டான். ''ஓ ஞாபகமிருக்கு தம்பி. என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

''உங்களை நம்பாமல் அந்தப் பெரிய கடைக்குப் போய் 35 ரூபாய் கொடுத்து ஒரு ஜோடி செருப்பு வாங்கினேன். ஆனால், அதுக்குள்ளே அட்டை வச்சுத் தச்சிருக்கிறான். இரண்டு நாளாப் பெய்த மழையிலே, அடிப்பாகம் தனியா வந்துடுச்சு. நல்லா ஏமாத்திட்டான். சின்னக் கடையிலேதான் ஏமாத்துவாங்க, பெரிய கடையிலே அப்படியெல்லாம் இருக்காதுன்னு தவறா நினைச்சுட்டேன்... ஐயா, நான் அன்னிக்கு உங்களை நம்பாமப் பேசிட்டேன். என்னை மன்னிச்சுடுங்கோ. இப்போ அன்னிக்குப் பார்த்தேனே அதே செருப்பை வாங்க வந்திருக்கிறேன். நீங்க சொன்ன விலையைத் தந்திடுறேன்'' என்று சொல்லி ஒரு பத்து ரூபாய்த் தாளை நீட்டினான்.

ஆனால், அந்தக் கடைக்காரரோ, ''தம்பி, நீ என்னை நம்பி மறுபடியும் வந்திருக்கிறாயே, அதனாலே 10 ரூபாய் மதிப்புள்ள இந்த ஜோடியை உனக்கு 7 ரூபாய்க்கே தருகிறேன்'' என்று கூறினார். மணி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தான். அங்கிருந்த ஸ்வாமி படங்கள் அவனைப் பார்த்து ஓர் அர்த்தமுள்ள புன்னகையை வீசின!

-மீனு ராமச்சந்திரன் (158), சென்னை-2.





ஒலிம்பிக்ஸ் துணுக்குகள்

❋ ஒலிம்பிக் தொடக்க நாள். 125 டிரம்பட் வாத்தியங்கள் முழங்கின. 960 இனிய குரல்கள் இசை பாடின. 1065 உயர்நிலைப்பள்ளி மாணவிகள் பகலவனின் ஒளியில் நர்த்தனமாடினர். மந்திரமோ தந்திரமோ என்று சொல்லும்படி மக்கள் கொடிகளாக மாறினர். பாண்ட் வாத்தியம் அமெரிக்க பூகோளப்படமாக உருவெடுத்தது. பலூன்கள் மைதானத்தைச் சுற்றிப் பறந்து ஒலிம்பிக் ஸ்டேடியத்தை மாயா லோகமாக உருவெடுக்க வைத்தன.

❋ லாஸ்ஏன்சேல்ஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 140. இது ஒரு ரிகார்டு. சோவியத் யூனியனும் அதனைச் சார்ந்த பதினாறு நாடுகளும் மட்டும் ஒலிம்பிக்கில் பங்கேற்க முன்வரவில்லை.

❋ அமெரிக்கத் தபால் இலாகா 24 விசேஷத் தொடர் ஸ்டாம்புகளை ஒலிம்பிக் நினைவாக வெளியிட்டுள்ளது. இந்த ஸ்டாம்புகளை உருவாக்கித் தந்தவர் பரிசு பெற்ற ஓவியர் பாட்பீக்.

❋ அமெரிக்க மல்யுத்த வீரர் ஜெப் ப்ளாட்னிக் ஸ்விடனைச் சேர்ந்த மல்யுத்த வீரர் ஜோசால்லனைத் தோல்வியடைய வைத்துத் தங்கப் பதக்கம் சூடினார். இவர் இரண்டு வருஷங்களுக்கு முன் புற்றுநோயால் அவதிப்பட்டு ஆபரேஷன் செய்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கப் பதக்கம் சூடிய ஜெப் ப்ளாட்னிக் தாம் இனி மல்யுத்தப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறப் போவதில்லை என்று கூறியிருக்கிறார். இவரது சகோதரர் கார் விபத்தில் மரணமடைந்து விட்டார். அவர் இவரது சாதனையைக் கண்டிருந்தால் எத்தனை மகிழ்ந்திருப்பார் என்று கூறி நெக்குருகினாராம் தங்கப் பதக்கம் சூடிய மல்யுத்த வீரர் ப்ளாட்னிக்.

❋ 1904—ம் வருஷத்திலிருந்து ஒலிம்பிக்கில் 'டிமான்ஸ்டிரேஷன் விளையாட்டுக்கள்' என்று சில விளையாட்டுக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1904—ம் ஆண்டுதான் கூடைப்பந்து 'டிமான்ஸ்டிரேஷன்' விளையாட்டாக ஒலிம்பிக்கில் இடம் பெற்றது. 1972 மியூனிச்சில் பாட்மின்டன் ஒலிம்பிக்கில் டிமான்ஸ்டிரேஷன் ஆட்டமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. லாஸ் ஏஞ்ஜெல்ஸ் ஒலிம்பிக்கில் அவ்வாறு இடம் பெற்ற விளையாட்டுக்கள் பேஸ்பால், டென்னிஸ் ஆகியவை.

❋ ஒலிம்பிக் பிரதிக்ஞை எடுப்பது 1920—ம் ஆண்டு ஆன்ட்வெர்ப் ஒலிம்பிக்கில் தொடங்கப்பட்டது. 1895 ஒலிம்பிக் சட்டம் 63 கூறுவதாவது: ஒலிம்பிக் போட்டி நடத்தும் விருந்துபசார நாட்டு ஒரு விளையாட்டுக் கொடியை இடது கைவிரல் பற்றிக் கொண்டு, வலது கையை உயர்த்திப் பிரதிக்ஞை எடுப்பார்: ''போட்டியாளர்களின் சார்பில் இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் நாங்கள், சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, மரியாதை செலுத்தி, 'ஸ்போர்ட்ஸ் மென்ஷிப்' உத்வேகத்தோடு பாடுபட்டு, எங்கள் கோஷ்டிகளின் பெருமையையும் விளையாட்டுக்களின் புகழையும் நிலைநிறுத்துவோம்!'' லாஸ் ஏஞ்ஜெல்ஸ் ஒலிம்பிபிக்கில் இந்த ஒலிம்பிக் பிரதிக்ஞை எடுத்த விளையாட்டுக் கலைஞர் எட்வின் மோஸஸ்.

- பி. எஸ்- மணி



2-வது அட்டையில் அறிஞர் அண்ணா

சிலர், தமிழிலே மிக அழகாகப் பேசுவார்கள். ஆனால், ஆங்கிலத்தில் அப்படி அழகாகப் பேச மாட்டார்கள். இன்னும் சிலர், ஆங்கிலத்தில் மிக அழகாகப் பேசுவார்கள், அவர்களுக்குத் தமிழிலே பேச வராது. தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் மிக அழகாகப் பேசுவதோடு, மிக அழகாகவும் எழுதக் கூடிய ஆற்றல் பெற்றவர் சி. என். அண்ணாதுரை அவர்கள். அவர் பேச்சிலே அழகு மட்டுமன்று; இனிமையும் இருக்கும்; தெளிவும் இருக்கும்; ஆழமான கருத்துக்களும் அடங்கியிருக்கும். அதனால்தான் அவருக்கு 'அறிஞர் அண்ணா' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது.

இளம் வயதிலே அவர் பள்ளிப் பாடங்களை ஒருமுறை கேட்பார்; அல்லது படிப்பார். உடனே அவை அவர் உள்ளத்திலே நன்கு பதிந்து விடும். பள்ளியில்லாத நேரங்களில் நூலகத்திற்குச் சென்று அறிவை வளர்க்கும் நூல்களையெல்லாம் படிப்பார். கல்லூரியில் படிக்கும்போது, கல்லூரி நூல் நிலையத்தில் இல்லாத நூல்களைக்கூட அவர் மற்ற நூலகங்களுக்குச் சென்று தேடிப் பிடித்துப் படிப்பார். அதனால்தான் அவரை 'நடமாடும் நூல் நிலையம்' என்று பலரும் போற்றினார்கள்.

'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதே நம் தமிழ்நாட்டிற்கு முன்பு இருந்த பெயர். அதை, 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றியவர் அறிஞர் அண்ணா. இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டைச் சென்னையில் மிகச் சிறப்பாக நடத்திய பெருமையும் அவருக்கு உண்டு. அப்போது வைக்கப் பெற்றவைதான் சென்னையிலுள்ள பல தமிழ்ப் பெரியார்களின் சிலைகள்.

இவர் பேச்சாலும், எழுத்தாலும் மட்டுமன்றி, நாடகங்கள் எழுதியும் சமூகத்தைச் சீர்திருத்த முயன்றார். பேராசிரியர் கல்கி அவர்கள், இவர் எழுதிய 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்துவிட்டு, 'தமிழ்நாட்டு பெர்னாட்ஷா' என்று பாராட்டி எழுதினார்.



3-வது அட்டையில் கப்பலோட்டிய தமிழர்

கப்பலோட்டிய தமிழர் என்று வ. உ. சிதம்பரனாரை அழைக்கிறோம். அப்படியென்றால்...?

தூத்துக்குடி ஒரு துறைமுகப் பட்டினம். அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சரக்குகளை ஏற்றிச் செல்ல வெள்ளைக்காரர்கள் ஒரு கப்பல் கம்பெனியை நடத்தி வந்தார்கள். அவர்கள் இந்திய வியாபாரிகளைக் கேவலமாக நடத்தியது கண்டு மனம் கொதித்தார் சிதம்பரனார். பங்குக்கு 10 ரூபாய் விதம் 10 லட்ச ரூபாய் சேர்த்து, 'சுதேசிக் கப்பல் கம்பெனி'யைத் துவக்கினார். பம்பாயிலிருந்து 'லாவோ', 'காலியா' என்ற இரண்டு கப்பல்களை வாங்கினார். சரக்குகளை அனுப்ப மட்டும் அவர் கப்பல்களை வாங்கவில்லை; வெள்ளையரை வெளியேற்றவும், அவர்களின் ஆதிக்கத்தைக் கப்பல் ஏற்றவும் அக்கப்பல்கள் பயன்படும் என நினைத்தார். முதல் முதலாக இந்தியருக்குச் சொந்தமான கப்பல் கம்பெனியைத் துவக்கியதால், 'கப்பலோட்டிய தமிழர்' எனப் பெயர் பெற்றார்.

கோயமுத்தூர் சிறையில் இருந்த போது, இவரை மிகவும் கொடுமைப் படுத்தினார் ஒரு வெள்ளைக்காரச் சிறையதிகாரி. தீவிர தேச பக்தராகிய இவர், கல் உடைப்பதையும் செக்கு இழுப்பதையும் கண்டு அங்கிருந்த கைதிகள் ஆத்திரங்கொண்டு கலகம் செய்தார்கள். அதுகண்டு அந்த அதிகாரி மிரண்டு போனார்.

சிறையில் இருந்த போது இவர் பல நூல்களை எழுதினார். இவர் ஒரு நல்ல கவிஞர். 'சுய சரிதை' என்ற பெயரில், தம்முடைய வரலாற்றைச் செய்யுள் நடையிலே எழுதியிருக்கிறார்.

ஒருசமயம் தூத்துக்குடிப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அப்போது அவர்கள் பல வழிகளில் துன்பப்பட்டார்கள். அவர்களின் துன்பத்தைப் போக்க, இவர் தமது மனைவியின் நகைகளை விற்றும், ஊரில் நிதி திரட்டியும் உதவினார்.

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

1852. க. சுந்தர ராமன், 3 49, அய்யப்ப நகர், திருச்சி—21.

1853. சா. விஜயவாத விநாயகி, பிளாட் எண்:10, சீனிவாசநகர், கோயம்பேடு போஸ்ட்) சென்னை—600 107.

1854. சா. மீனாட்சி, பிளாட் எண்:10, சீனிவாசநகர், கோயம்பேடு (போஸ்ட்) சென்னை —600 107.

1855. ச. சுந்தரேச சுவாமி, 30, ஸ்ரீராம்பேட், ஈஸ்ட் வி.ஜி.டி. நகர், சென்னை—35.

1856. க. சுரேஷ்குமார், டோர் எண்:15, 2—வது மெயின் தெரு, இல்லை கங்கா நகர், நங்கைநல்லூர், சென்னை— 61.

1857. ச. ஹரிணி, 8, 46—வது தெரு, நங்கைநல்லூர், சென்னை—61.

1858. என். ஆர். வந்தனா, 11, 'ஓம்நிவாஸ்' முதல் குறுக்குத் தெரு, வெங்கடேசபுரம் காலனி, சென்னை—23.

1859. பி. சங்கரநாராயணன், 3—பி. எஸ். சுந்தரம் ரோடு, Tiruar. 638 601, கோவை மாவட்டம்.

1860. ஜி. விஸ்வநாதன், 17, சுப்பிரமணியபுரம், திருத்தணி, 631 209 செங்கல்பட்டு மாவட்டம்.

1861. எம். சிவசங்கர், 144, பி—1 துர்காப்பேட்டை அஞ்சல், செங்கம் (வ.ஆ.மா.)606709

1862. என். சங்கரநாராயணன், 36, மேல ரங்கநாதபுரம், தூத்துக்குடி—628 002.

1863. வி. நாராயணி 4—12—12A/1, மேலமந்தைத் தெரு, வத்தலக்குண்டு—624 202.

1864. செ. சீனுவாசன், 32, வடக்கு வீதி, அரகண்டநல்லூர்—605 752.

1865. கே. சண்முகப்பிரபா, த/பெ. எம். கிருஷ்ணசாமி, ஆசிரியர், நடுநிலைப்பள்ளி, (செலக்கரிச்சல் போஸ்ட்) (காரடிபோளி (வழி) — 638 675.

1866. டி. மீனுக்குமாரி, த பெ. கே. தங்கராஜ், காரட்டூர், பூங்கமுத்தூர், அ. நி., உடுமலை வட்டம்—638 207.

1867. டி. கார்த்திகேஸ்வரி, த பெ. கே. தங்கராஜ், காரட்டூர், பூங்கமுத்தூர், அ. நி., உடுமலை வட்டம்—638 207.

1868. எஸ். ஆனந்தராஜன், 10, சப்பாணி கோவில் கிழக்குச் சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை—625 001.

1869. ஆர். வெங்கடேஷ், 118, ஆர். கே. மடம் ரோடு, மந்தைவெளி,சென்னை—28.

1870. த. சிவராமகிருட்டிணன், த/பெ. ஆர். நடராஜன், வார்டன், ஆசிரியர் காலனி, குல்லூர் சந்தை—626 053, இராமநாதபுர மாவட்டம்.

1871. கே. செங்கோட்டுவேலன், 1/28, மாரியம்மன் கோவில் தெரு, தாதம்பட்டி அஞ்சல், சேலம்—14.

1872. வி. வள்ளி, த பெ. டி. வீரவேங்கடாசலம், பேரூர், பாளையங்கோட்டை வழி, காட்டுமன்னார்குடி— 608 701.

7873. மா. சே. சரவணன், 33, பிள்ளையார் கோவில் தெரு, கோரிப்பாளையம், மதுரை —625 002.

1874. மு. பட்டு கீதா, 25—ஏன், சிந்துபூந்துறை, மேலத்தெரு, திருநெல்வேலி—1.

1875. சி. சேதுராமலிங்கம், 25, ஜீவானந்தம் ரோடு, கவுண்டன்குளம், பழனி—624 501.

1876. ஜெ. வெங்கடேஷ், 119, சின்ன எல்லைசந்து, ரங்கே கவுடர் வீதி, கோவை—1.

1877. ஜி. ரவி, த/பெ. எம்.வி. கோபாலகிருஷ்ணன், தெரு உயர்நிலைப் பள்ளி, புத்தனாம் பட்டி, திருச்சி மாவட்டம்.

1878. எம். உமா, 423, 26—வது தெரு, 5—செக்டர், கே. கே. நகர், சென்னை—78.

1879. எம். எஸ். சுப்பிரமணியன், 68, யாதவாள் தெரு, ஆதம்பாக்கம், சென்னை—88.

1880. டி.சாந்தலட்சுமி, 29, கொத்தவால் சாவடித் தெரு, சைதாப்பேட்டை, சென்னை—15

1881. கவுத்தம் எம். கோத்தாரி, 36—சி, தேவாங்கபுரம், திருப்பூர், 638 602,

1882. Mayura, 106/31, First Floor, Tenth Main, Malleswaram, Bangaloe'-560003

1883. டி. வி. ஆராவமுதன், 2, ராஜம்மாள் காலனி, புதிய அஞ்சல வீதி, நங்கவரம்

1884. என். சத்தியமூர்த்தி, 65—ஏ, ராஜேஸ்வரி தெரு, கோகுலபுரம், செங்கற்பட்டு —603 001.

1885. சொ. தெய்வானை, 61, அம்மன் கோவில் வீதி, ஆ. முத்துப்பட்டணம், ஆத்தங்குடி-623 101, இராமநாதபுரம் மாவட்டம்.

1886. பொ. சரவணன், 5—ஏ, விருப்பாட்சிபுரம், கம்மாளத்தெரு, பாளையம்பஜார், உறையூர், திருச்சி—3.

1887. ஏ. ரத்தினகுமார், சி—90, என். ஜி. ஜி. 5—வது கிராஸ், தில்லைநகர், திருச்சி—620 018

1888. ச. நாகப்பன், த/பெ. என். சத்தியமூர்த்தி,மானேஜர், ஐ.ஓ.பி. உச்சிப்புளி, முகவை மாவட்டம்

1889. கே. எஸ். ஹரிகணேசன், 22, முடுக்குவிநாயகர் கோவில் தெரு, தென்காசி-627 811

1890. பா. கவிதா, 4—ஏ, வலையமாபுரம்,வலங்கைமான்—612 804, தஞ்சை மாவட்டம்.

1891. எம். டி. இம்தியாஸ், என்—21, 11—வது மெயின் ரோடு, திருவள்ளுவர் நகர், எருக்கஞ்சேரி, சென்னை—51.

1892. ச. சரவணகுமாரி, 15, தென்கல்லத் தெரு, முசிறி, திருச்சி—621 211:
1893. எஸ். பத்ரிநாராயணன், 4, பள்ளிதெரு, ராதாநகர், குரோம்பேட்டை, சென்னை—44
1894. வெ. மாலதி, 10—ஏ, இரண்டாவது அவின்யூ, இந்திராநகர், அடையாறு, சென்னை—
—600 020.
1895. வீ. ரமேஷ், 196, செயிண்ட் மேரிஸ் ரோடு, அபிராமபுரம், சென்னை—18.
1896. ச. பொன்னையா, 3/78, வி. அய்யாத்துரைத் தெரு, பரமக்குடி—623 707, இராம
நாதபுரம் மாவட்டம்.
1897. எல். சீனிவாசன், 36, பெரிய சாலியத் தெரு, கூறைநாடு—2, மயிலாடுதுறை,—
609 002.
1898. ச. சங்கரி, 247/5,எச். ஐ. ஜி. ஃபிளாட், 7—வது அவென்யு, பயோனியர் காலனி,
அண்ணாமேற்கு, சென்னை—101.
1899. ஆர். தேவிஸ்ரீ, 10—-பி—3, டவுன்ஹால் 3—வது தெரு, அரக்கோணம்—631 001.
1900. ஆர். ரேவதி, 10—பி—3—டவுன்ஹால் 3—வது தெரு, அரக்கோணம்—631 001.
1901. ஆர். ஜெ. நாகராஜன், 8, ரெட்கிராஸ் ரோடு, ஷண்முகபுரம், பழனி.
1902. இரா. பிரேம்குமார், 7,பத்தர் காலனி, நெய்வேலி மெயின் ரோடு, வடலூர்—607303
1903. டி. எஸ். மிருணாளினி, 64, இரண்டாவது தெரு, கெயிட் காலனி, எழும்பூர்—600008
1904. ஆர்..பத்மா, எக்ஸ்—5, ஹவுசிங் யூனிட், சாலை ரோடு, திருச்சி—3.
1905. இ. இரா. பிருந்தா, 35, ஆசூரி தெரு, திருவள்ளூர்—602 001.
1906. என். பாலாஜி, 29, தென்கோட்டை வீதி, விருத்தாசலம்—606 001.
1907. ரம்யா ஸ்ரீராமன், 19/4, காஜாமலை காலனி, திருச்சி—20.
1908. ஆர். சுகரா, 24, பண்டரிநாதன், கோவில் தெரு, துறையூர்—621 010.
1909. கே. முருகேசன், பள்ளப்பட்டி மேல்நிலைப்பள்ளி, பள்ளப்பட்டி அஞ்சல், திருச்சி
மாவட்டம்.
1910. ஆர். திருமூர்த்தி, 1—ஏ, நடுவீதி, சிறுமுகை, அஞ்சல், கோவை, —641 302.
1911. ஜெ. சபாநாயகம், த/பெ. செயராமன், இளநிலைப் பொறியாளர், (கொள்முதல்)
தமிழ்நாடு மின்சார வாரியம், மின்பாறை,பொள்ளாச்சி வழி642116.
1912. கே. மணிவண்ணன், த/பெ. ஆர். கொண்டசாமி, 4, நம்பூரார்வீதி, பூளைமேடு,
கோவை—4.
1913. டி. சேகர், த/பெ. தெண்டபாணி, கச்சேரிவலசு, வெள்ளக்கோயில்—638 111.
1914. பி. நடராஜன், 16, அப்பர் தெரு, அம்பாசமுத்திரம்—627 401.
1915. டி.கீதா, 327, எக்செல்சியர் காட்டேஜ், ஸ்டோன்ஹவுஸ் அஞ்சல், உதகை—643002
1916. வி. விஜயஸ்ரீ, 101, வடக்கு அக்ரஹாரம், தென்கரை, பெரியகுளம், மதுரை
மாவட்டம்,
1917. மா. மருதவாணன், 'மதியகம்', ராமானுஜ இல்லம், வசந்தநகர் 3—வது தெரு,
மதுரை—3.
1918. எம். கல்பனா, 5, லோகநாதன் காலனி, மயிலாப்பூர், சென்னை—600 004.
1919. ஜோ. பத்மினி, 131, ஆர்ச் நெடுஞ்சாலை, சென்னை—112.
1920. ஜோ. சீனிவாசன், 131, ஆர்ச், நெடுஞ்சாலை, சென்னை—112.
1921. என். சூரியநாராயணன், காக்கையாடி, சாத்தனூர் அஞ்சல், கூத்தாநல்லூர் வழி,
தஞ்சைமாவட்டம்—614 101.
1922. ந. சிவகாமசுந்தரி, காக்கையாடி, சாத்தனூர் அஞ்சல், கூத்தாநல்லூர் வழி.
1923. கெ. குமாரவேல், 31, முக்தி விநாயகர் தெரு, மடப்புரம், திருவாரூர்—610 002.
1924. எல். சிவராம கிருஷ்ணன், 49/2, அண்ணாதெரு, திருவான்மியூர், சென்னை—600 041
1925. சி. ஆர். ஸ்ரீகிருஷ்ணன், 37, வால்மீகி தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை—59.

1926. என். வெங்கடசுப்பிரமணியன், 49/2, அண்ணாதெரு, திருவான்மியூர், சென்னை—41.
1927. என். சுப்பிரமணியன், 5, பாலாஜி தெரு, சென்னை—15.
1928. எஸ். அகிலா; 72, ஏரிக்கரைத் தெரு, மேற்குமாம்பலம், சென்னை—600 033.
1929. கே.எம். பிரமீளா, 24, காதிஅலி தெரு, 2—வது சந்து,திருவல்லிக்கேணி, சென்னை—
600 005.
1930. எஸ். ஆண்டவன், இருப்பாளி, அஞ்சல், இடைப்பாடி வழி, சேலம்மாவட்டம்.
1931. ஆர். மணிமேகலை, 68, ஸ்டேட் பாங்க் காலனி, விருகம்பாக்கம்—600 092.
1932. உ. முருந்தன், 32, செட்டித் தெரு, அதிராம்பட்டினம்—614 701.
1933. மு. சதீஷ்குமார், 11—ஏ, முத்துசாமிபிள்ளை சந்து, பாளையங்கோட்டை, திருநெல்
வேலி—2.
1934. எஸ். குமார், பனையன்குளம், கோவைகுளம் அஞ்சல்—627 151.
1935. ஏ. ராஜ்குமார், மேலரதவீதி, கசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம்.
1936. திவ்யாராமகிருஷ்ணன், 1, ராமகிருஷ்ணாபுரம் முதல் தெரு, மேற்குமாம்பலம்;
சென்னை—600 033.
1937. ப. ச. மஞ்சு, ஏ. 74, அண்ணாநகர், செங்கை.
1938. பி. நந்தகோபால், 12, களக்கு பிள்ளையார் கோவில் தெரு, மணலூர்பேட்—605 754
1939. ஜி. அனிதா, 68, கும்பேஸ்வரன் தெற்கு வீதி, கும்பகோணம்—612 001.

(இன்னும்வரும்.)



மாவட்ட வினா விடை

லலிதா செல்லப்பா

கேள்வி கேட்பவர்: லலிதா செல்லப்பா
பங்கு பெறுவோர்: இரா. கோமதி,
நா. வித்யா,
சு. சிவகுமார்.

லலிதா செல்லப்பா: நமது வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு முடிவெடுத்துள்ளதே, அதைப் பற்றித் தெரியுமா?

கோமதி: ஓ... தெரியுமே! திருவண்ணாமலையைத் தலைநகரமாகக் கொண்டு சம்புவராயன் மாவட்டம் என்ற பெயரில் ஒரு மாவட்டம் வரப் போகிறதாம்.

லலிதா: சரியாகச் சொன்னாய். ஆர்க்காட்டைத் தலைநகரமாகக்கொண்டு ஆட்சிபுரிந்த நவாப்புகளின் வாயிலாகவே ஆங்கிலேயர்கள் ஆட்சி ஏற்பட்டது. அதனால், அந்தப் பெயரில் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு என இரண்டு மாவட்டங்கள் அமைக்கப்பட்டனவாம். நமது மாவட்டத்தில் நடந்த சரித்திரப் புகழ் பெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

சிவகுமார்: 1751—ல் நடந்த ஆர்க்காடு முற்றுகை. 1760—ல் நடந்த வந்தவாசிப்போர்.

லலிதா: பலே. நன்றாக நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாய். இந்த நிகழ்ச்சிகள் கர்நாடகத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சி வலுப்பெறப் பெரிதும் உதவின. அதே சமயம் ஆங்கிலேயரின் அடக்கு முறையை எதிர்த்து முதலில் கிளர்ச்சி செய்ததும் நமது மாவட்டம்தான். எப்படி, தெரியுமா?

வித்யா: 1806—ல் நடந்த வேலூர்க் கலகம் மூலமாகத்தானே?

லலிதா: ஆமாம். சரியாகச் சொன்னாய். 1857—ல் நடந்த சிப்பாய்க் கலகத்துக்கு அடிகோலிய சரித்திரப் புகழ் வாய்ந்த ராணுவப் புரட்சி நடந்தது நமது வேலூர்க்கோட்டையில்தான். நாம் பெருமைப்பட வேண்டிய விஷயம் இது. இதற்கு முன் நடந்த சரித்திர நிகழ்ச்சி ஒன்று உண்டு. 1767 முதல் 1782 வரை ஆங்கிலேயர்களுக்கும் ஐதர் அலிக்கும் போர் நடந்தது. திருவண்ணாமலையில்தான்! திருவண்ணாமலை என்றதும் என்ன நினைவுக்கு வருகிறது?

சிவகுமார்: கார்த்திகைத் தீபம், பெரிய கோவில், ரமணாஸ்ரமம்.

லலிதா: தமிழ்நாட்டில் உள்ள கோபுரங்களிலேயே உயர்ந்தது திருவண்ணாமலை ராஜ கோபுரம். 1516—ல் கிருஷ்ணதேவ ராயரால் கட்டப்பட்ட இதன் உயரம் 217 அடி. இங்கு உள்ள இறைவன் அண்ணாமலையார். இறைவி உண்ணாமுலை அம்மன். ஆண்டுதோறும் நடக்கும் கார்த்திகைத் தீபம் சிறப்பானது. அப்போது நடக்கும் மாட்டுச் சந்தை மிகப் பெரியது. மலையையே இறைவன் வடிவமாக வணங்குகின்றனர். ஏராளமான பக்தர்கள் மலையைச் சுற்றிவந்து வழிபடுவார்கள். உங்களில் யாராவது மலையைச் சுற்றி இருக்கிறீர்களா?



இரா. கோமதி



சு. சிவகுமார்



நா. வித்யா

வித்யா: ஓ... மூன்று வருஷங்களுக்கு முன் குதிரை வண்டியில் மலையைச் சுற்றி இருக்கிறேன்.

லலிதா: கண்டிப்பாக அந்தக் குதிரைக்குப் புண்ணியம் உண்டு. ஆகஸ்ட் 15 என்றால் என்ன நினைவுக்கு வருகிறது?

சிவகுமார்: சுதந்திர தினம்.

வித்யா: அருணகிரி நாதர் விழா.

லலிதா: இரண்டும்தான். திருவண்ணாமலையில் வாழ்ந்து முருகன் அருள் பெற்றுத் தவம் செய்த அருணகிரி நாதர் விழா ஆகஸ்ட் 15–ல் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவர் அருளிய நூல்கள் என்ன என்ன தெரியுமா?

கோமதி: ஓ. தெரியுமே! திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி.

லலிதா: திருவண்ணாமலையில் உள்ள ரமணாஸ்ரமத்தில் மகான் ரமணர் வளர்த்த பசு, மான், காகம் இவைகளுக்கும் தனித்தனி சமாதிகள் உள்ளன. 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று பாரதி பாடினாரே அதை மெய்ப்பித்தவர் ரமணர். இவர் திருவண்ணாமலையில் ஞானம் பெற்று ஆன்மீகத்தை வளர்த்தவர். வெளிநாட்டவர்களிலும் பலர் இவருக்குச் சீடராக இருந்தனர். 1924–ல் திருவண்ணாமலையில் நடந்த 30–வது காங்கிரஸ் மகாநாட்டைத் தலைமை தாங்கி நடத்தியது யார்?

சிவகுமார்: மகாத்மா காந்தி.

லலிதா: தவறு. ஈ. வெ. ராமசாமிப் பெரியார்தான். 'படை இல்லாத கோட்டை' 'விக்ரகம் இல்லாத கோவில்' என்ற கிண்டல் பழமொழி எதைக் குறிப்பிடுகிறது?

சிவகுமார்: வேலூர்க் கோட்டையையும், அதில் உள்ள ஜலகண்டேசுவரர் கோவிலையும்தான்.

லலிதா: பலே. சரியாகச் சொன்னாய். கோட்டைக்குள் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோயிலில் மூலவிக்கிரகங்கள் இல்லாமலே இருந்தன. போர் நடந்த போது அகற்றப்பட்டு சத்துவாச்சேரி என்ற இடத்தில் அவை வைக்கப்பட்டிருந்தன. சமீப காலத்தில்தான் அதாவது 1981–ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீண்டும் ஐயன் ஜலகண்டேஸ்வரரையும் அன்னை அகிலாண்டேஸ்வரியையும் எழுந்தருளச் செய்து ஆராதனை செய்ய ஏற்பாடு செய்தார்கள் வேலூர் மக்கள். இக்கோயிலுக்கு யாரேனும் போயிருக்கிறீர்களா?

கோமதி: ஓ... போயிருக்கிறேனே! முதலில் காணப்படும் கல்யாண மண்டபம் சிற்ப வேலைப்பாடுகளுடன் மிக அழகாக இருக்கிறது.

லலிதா: ஆமாம். இங்குள்ள குதிரை வீரன் சிலை கலை நுணுக்கம் வாய்ந்தது. இந்தக் கலைப் பொக்கிஷத்தை கல்யாண மண்டபத்தையே —தங்களது நாட்டுக்குக் கொண்டு போய்விட பிரிட்டிஷார் தனியான — பிரத்தியேக — கப்பல் தயாரித்து வந்தனராம். இந்தியா வரும் வழியில் கடலில் கப்பல் கவிழ்ந்து விட்டதாம்! நமது கலைச் சின்னம் தப்பியது! வேறு தலங்களுக்குப் போய் இருக்கிறீர்களா?

கோமதி: வள்ளிமலை போயிருக்கிறேன்.

வித்யா: மகாதேவமலை போயிருக்கிறேன். திருக்கழுக்குன்றம் போலவே நடுப்பகலில் இங்கும் கழுகுகள் வந்து குருக்கள் கையில் உணவு உண்டு செல்கின்றனவாம்.

சிவகுமார்: அம்மையப்பனை வலம்வந்து மாங்கனி பெற்ற விநாயகர் கோவில் இருக்கும் திருவலம் போயிருக்கிறேன். இக்கோயில் இறைவனைப் போலவே நந்தியும் கிழக்கு நோக்கியிருக்கும்.

லலிதா: மேலும் இம்மாவட்டத்திலுள்ள வள்ளிமலையில் வள்ளியம்மை வாழ்ந்து தவம் செய்து முருகனை அடைந்ததாகக் கூறுகிறார்கள். வள்ளி மஞ்சள் அரைத்துக் குளித்த சுனை இங்கு உள்ளது. ரத்தினகிரி முருகன் கோவிலும், படவேடு மாரியம்மன்

கோயிலும் புகழ் பெற்றவை. குரங்கணில் முத்தம் என்றால் என்ன?

கோமதி: குரங்கு, அணில், முட்டம் (காகம்) இவைகள் இறைவனை வழிபட்ட தலம் ''குரங்கணில் முட்டம்.''

லலிதா: பலே. நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறாய். வேலூர் மத்தியச்சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்ட அரசியல் தலைவர்களில் மிகவும் முக்கியமானவர் யார் தெரியுமா?

சிவகுமார்: ராஜாஜி.

லலிதா: சரியாகச் சொன்னாய். சுதந்திரப் போராட்டத்தின் போது ராஜாஜியைச் சிறையிலே வைத்திருந்தார்களே, அந்த அறை வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்கப் பட்டு வருகிறது... அறிஞர் அண்ணாவும் வேலூர் சிறையில் இருந்திருக்கிறார். வேலூர்க் கோட்டையைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

கோமதி: 1274—83ல் பொம்மி ரெட்டி என்பவரால் கட்டப்பட்டது. இத்தாலியப் பொறியியல் வல்லுனர் உதவி பெற்று இதைக் கட்டியதாகக் கூறுகிறார்கள்.

லலிதா: பலே. சரித்திரத்தை நன்றாகப் படித்திருக்கிறாய். கோட்டையில் இப்போது என்ன என்ன இருக்கின்றன?

வித்யா: கலெக்டர் ஆபீஸ், கோர்ட், இதர அலுவலகங்கள் மருதி, கோவில், சர்ச்.

லலிதா: ஒன்றை மறந்து விட்டாயே?

வித்யா: போலீஸ் பயிற்சிக் கல்லூரி.

லலிதா: சரியான பதில். 1905—ல் போலீஸ் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. விரல் ரேகை நிலையம் சென்னையில் நிறுவப்பட்டுப் பின் இங்கு மாற்றப்பட்டது. போலீஸ் சுருக்கெழுத்து நிலையமும் உள்ளது. வேலூர் போலீஸ் சுருக்கெழுத்து நிலையத்தில் பணிபுரிந்த சீனுவாசராவ்தான் முதன் முதவில் தமிழ்ச் சுருக்கெழுத்து நூலை எழுதி வெளியிட்டார். தமிழ்ச்சுருக்கெழுத்தைக் கண்டுபிடித்தது நமது மாவட்டத்தில்தான் என்பதில் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். நமது ஜில்லாவில் ஏலகிரி, ஜவ்வாது மலைகள் உள்ளன. இந்த மலைவளத்தின் மூலம் அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. இங்குள்ள மலைஜாதியினர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்?

கோமதி: மலையாளிகள்.

லலிதா: பலே... கேரளாவில் உள்ளவர்கள் மட்டும் மலையாளிகள் இல்லை. நமது மாவட்ட மலையில் உள்ளவர்களும் மலையாளிகள்தான். ஆனால், இவர்கள் பேசுவது நம் தமிழ் மொழிதான். 'டில்லிகேட்' எங்கே இருக்கிறது?

வித்யா: ஆர்க்காட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

லலிதா: பலே. சரியாகச் சொன்னாய். கி. பி. 18—ம் நூற்றாண்டில் ஆர்க்காட்டில் வலிமையடைந்தகோட்டை இருந்தது. அதன் ஐந்து வாயில்களில் பாலாற்றங்கரையில் உள்ள டெல்லி வாயில் (gate) தான் தற்சமயம் மிஞ்சியுள்ளது. ராணிப்பேட்டை எப்படி உருவானது?

சிவகுமார்: தேசிங்கு ராஜா வீர மரணம் அடைந்ததும் உடன் கட்டை ஏறிய ராணியின் நினைவால் அமைக்கப்பட்டது.

லலிதா: சரியான பதில். 'பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து' என்ற பழமொழியைப் பொய்யாக்கியது நமது மாவட்டம். ராணுவத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களில் நமது மாவட்டத்தவர்தான் அதிகம். சமீபத்தில் அமிர்தசரஸ் பொற்கோயிலில் நுழைந்து வன்முறையாளர்களைப் பிடித்த சமயம் வீர மரணம் அடைந்த நமது மாவட்ட ராணுவ வீரர் யார் தெரியுமா?

கோமதி: செங்கத்தைச் சேர்ந்த குப்புசாமி.

லலிதா: பலே... பலே... செய்திகளை நன்றாகப் படித்திருக்கிறாய். இங்குள்ள தொழிற்சாலைகள் யாவை?

வித்யா: ஆம்பூர், வாணியம்பாடி, ராணிப்பேட்டை, விசாரம் பகுதிகளில் நானூறுக்கும் மேற்பட்ட தோல் தொழிற்சாலைகள் உள்ளன. விண்ணமங்கலத்தில் அரசு தோல் பதனிடும் தொழிற்சாலை உள்ளது. வாலாஜாவில் சித்திர வேலைப்பாடு உள்ள ரத்தினக்கம்பளங்கள் நெய்யப் படுகின்றன.

சிவகுமார்: ஆரணிப்பட்டு புகழ் பெற்றது. அரக்கோணத்தில் சிமெண்டுக் குழாய் செய்யும் தொழிற்சாலையும், ராணிப்பேட்டையில் பாரி உரக் கம்பெனியும் வேலூரில் இன்ஜினியரிங் பணிமனையும் அரக்கோணத்தில் தொடர் உருக்காலையும் உள்ளன.

கோமதி: துணி ஆலைகள் நான்கும், சர்க்கரை ஆலைகள் மூன்றும் உள்ளன. ஆம்பூரில் சர்க்கரை ஆலை உள்ளது.

பெல் நிறுவனம் ராணிப்பேட்டையில் உள்ளது.

லலிதா: நன்றாகச் சொன்னீர்கள். முக்கனிகளில் ஒன்றுக்கு நம் மாவட்டம் பேர் போனது.

வித்யா: அது மாம்பழம்.

லலிதா: ஆமாம். இங்கு மாம்பழம், சாற்றுக்குடி அதிகம் பயிரிடப்படுகின்றன. முல்லைப் பூவும் ஏராளம். இங்கு வேலூரிலும், திருப்பத்தூரிலும் வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. மேலாலத்தூரில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் உள்ளது. நம் மாவட்டத்தைசேர்ந்த புகழ் பெற்ற பெரியோர்கள் யார்?

கோமதி: அரசியல் அறிஞர் சி. பி. ராமசாமி ஐயர், கொடைவள்ளல் வி. எல். எத்திராஜ், தமிழ் அறிஞர் டாக்டர் மு. வரதராசனார், மருத்துவமேதை ஏ. எல். முதலியார், நகைச்சுவை எழுத்தாளர் சாவி: அப்பைய தீட்சிதர், பதஞ்சலி சாஸ்திரி.

லலிதா: முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் நம் மாவட்டத்தில் வேலூரில் உள்ள ஊரீஸ் காலேஜில் படித்த மாணவர் என்பதில் நமக்குப் பெருமை உண்டாகிறது. இங்குள்ள சுற்றுலாத் தலங்கள் எவை?

வித்யா: சாத்தனூர் அணை.

கோமதி: ஏலகிரிமலை, அமிர்தகாடு.

லலிதா: சாத்தனூர் அணை எந்த நதியில் கட்டப்பட்டது தெரியுமா?

கோமதி: தென் பெண்ணையில்.

லலிதா: பலே... நன்றாகச் சொன்னாய். நமது மாவட்டத்தில் பாலாறு, செய்யாறு, பொன்னியாறு, தென் பெண்ணையாறு ஆகியவை ஓடுகின்றன. மழைக்காலங்களில்தான் இவற்றில் தண்ணீர் ஓடும். நிலத்தடி நீரை நம்பித்தான் வேளாண்மை செய்கின்றனர். நமது தமிழ் நாட்டிலேயே தஞ்சைக்கு அடுத்தபடியாக நெல்விளைச்சலைக் கொண்டது நமது மாவட்டம்தான். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். நம் மாவட்டம் குறைவற்ற செல்வத்தை வழங்குகிறது. எப்படி?

வித்யா: சி. எம். சி. மருத்துவமனை மூலம்.

லலிதா: உண்மைதான். புகழ்பெற்ற சி. எம். சி. மருத்துவமனை 1902—ல் ஐடா ஸ்கட்டர் என்ற அமெரிக்கப் பெண்மணியால் நிறுவப்பட்டது. சரி, நமது மாவட்டத்தில் உள்ள ஊர்களுக்குச் சில விசித்திரமான பெயர்கள் உண்டு, தெரியுமா?

கோமதி: ஆணாய்ப் பிறந்தான்; நல்லாண்பிள்ளை பெற்றாள், சுமை தாங்கி.

லலிதா: பெண்பால் ஊர்கள் தெரியுமா?

மூவரும்.... மௌனம்

லலிதா: நானே சொல்கிறேன். 'டி' போட்டுக் கூப்பிடும் ஊர்கள் பெண்பால் ஊர்கள்தானே. மல்லவாடி, அருகில்வாடி, குளக்கரை வாடி, நத்தவாடி, அரட்டவாடி. கம்பர் இராமாயணம் எழுத உதவியது நமது மாவட்டம் தெரியுமா?


சிவகுமார்: அப்படியா! வேலூர்க் கடையிலே வால்மீகி எழுதிய ராமாயண புத்தகத்தைக் கம்பர் வாங்கியிருப்பாரோ?

லலிதா: குறும்புக்காரன். கம்பர் காஞ்சியிலிருந்து மதுராந்தகம் போகும் போது தூசி மாமண்டூர் என்ற ஊரில் தமது எழுத்தாணியைத் தீட்டிக் கொண்டாராம். நமது மாவட்டத்தில் தீட்டப்பட்ட எழுத்தாணியால் கம்பர் இராமாயணம் எழுதியிருக்கிறார். நமக்குப் பெருமையாக இல்லையா? நமது மாவட்டத்திலேயே முதலாவதாகவும், மாநிலத்தில் ஆறாவதாகவும் பிளஸ்டூ பரீட்சையில் தேறியது யார்? தெரியுமா?

கோமதி: ஓ... தெரியுமே. தண்டராம்பட்டைச் சேர்ந்த பள்ளி மாணவன் ரமேஷ்.

லலிதா: பலே... நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாய். படிக்க வேண்டும் என்ற ஆர்வம்தான் முக்கியம். கிராமப்புறப்பள்ளி, நகர்ப்புறப் பள்ளி என்ற உயர்வு தாழ்வு இல்லை என நிரூபித்து விட்டான் ரமேஷ். நீங்களும் வரும் தேர்வில் ரமேஷைப் போல முதலாவதாகத் தேற வேண்டும். நல்வாழ்த்துக்கள்!

கோமதி, வித்யா, சிவகுமார்: வணக்கம்!



மின் மினிக் கதைகள்

நீல நரி

காட்டிலிருந்த நரி, ஒருநாள் இரவு நகரத்திற்குள் இரை தேடி வந்தது. அப்போது நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டதால், அது திரும்பி ஓடியது. ஓடும் வழியில் இருந்த ஒரு தொட்டிக்குள் தொப்பென்று அது விழுந்து விட்டது.

அந்தத் தொட்டி நிறைய நீலவர்ணம் இருந்ததால், நரியின் உடல் முழுவதும் நீலமாகிவிட்டது. நரி சிரமப்பட்டுத் தொட்டிக்குள்ளிருந்து வெளியே வந்தது.

அது காட்டுக்குத் திரும்பிச் சென்றது. அங்கிருந்த சிங்கம், புலி, கரடி, குரங்கு முதலிய மிருகங்கள், நரியைப் பார்த்ததும், 'இது என்ன மிருகம்? நீல நிறத்தில் இருக்கிறதே! இதுவரை இப்படிப்பட்ட மிருகத்தைப் பார்த்ததே இல்லையே!' என்று நடுநடுங்கி ஒன்றுடன் ஒன்று பேசிக்கொண்டு ஓடத் தொடங்கின.


''ஏ மிருகங்களே, ஏன் என்னைப் பார்த்துப் பயப்படுகிறீர்கள்? உங்களுக்கு ஒரு நல்ல அரசன் வேண்டுமென்றுதான் தேவேந்திரன் என்னை அனுப்பிவைத்தார். இனி, உங்களுக்கு எந்தக் கவலையும் வேண்டாம். நான்தான் உங்கள் அரசன்'' என்று கூறியது நீல நரி.

மற்ற மிருகங்கள் அதன் பேச்சை நம்பி விட்டன.

சிங்கத்துக்கு மந்திரி வேலை, யானைக்கு எடுபிடி வேலை, சிறுத்தைக்கு வெற்றிலைப் பெட்டி தூக்கும் வேலை, குரங்குக்குக் குடை பிடிக்கும் வேலை என்று ஒவ்வொரு மிருகத்திற்கும் ஒரு வேலை கொடுத்தது.

ஒருநாள் இரவு. அரசனாகிய நீல நரி வயிறு முட்டத் தின்றுவிட்டு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தது. பக்கத்திலே சிங்கம், யானை, சிறுத்தை, குரங்கு யாவும் காவலுக்கு இருந்தன. அப்போது, பல நரிகள் ஒன்று சேர்ந்து ஊளையிடும் சத்தம் அருகில் கேட்டது. அந்தச் சத்தம் கேட்டு விழித்த நீல நரி, தன்னையும் அறியாமல் குதித்து எழுந்து, உரத்த குரலில் ஊளையிடத் தொடங்கியது.

''ஆ! இதுவும் ஒரு நரிதானா! நம்மை இத்தனை நாட்களாக ஏமாற்றி, அடிமைகளைப் போல வேலை வாங்கி விட்டதே!'' என்று ஆத்திரப்பட்டு நீல நரியின் மீது மற்ற மிருகங்கள் பாய்ந்தன. அப்புறம் நீல நரியின் கதி? அதோகதிதான்!





மூடருக்கு அறிவுரை

அப்போது நல்ல குளிர்காலம். குளிர் தாங்காமல் காட்டிலிருந்த சில குரங்குகள் நடுநடுங்கிக் கொண்டிருந்தன.


அப்போது, அந்தப் பக்கமாக ஒரு மின்மினிப் பூச்சி வந்தது. 'பளிச், பளிச்'சென்று அது மின்னுவதைக் கண்டதும், அதை நெருப்பு என்று நினைத்தது ஒரு குரங்கு. உடனே, அதைப் பிடித்துத் தரையில் போட்டு, அதன் மேல் சருகுகளைப் பரப்பியது. உடனே மற்ற குரங்குகளுடன் சேர்ந்து அது 'ஊ, ஊ' என்று ஊதியது. 'நன்றாக ஊதினால், இந்தச் சருகுகளுக்கு அடியில் இடக்கும் நெருப்பு, கொழுந்துவிட்டு எரியும்; அப்போது நன்கு குளிர் காயலாம்' என்று அவை நினைத்தன.

அப்போது ஊசி போன்ற முகத்தையுடைய 'சிசுமுகி' என்னும் பறவை பக்கத்திலிருந்த மரக்கிளையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அதற்குச் சிரிப்பு வந்து விட்டது. உடனே அது குரங்குகளின் அருகிலே பறந்து வந்து, "ஏன் இப்படி வீணாக ஊதிக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் நினைப்பது போல் அது நெருப்பு இல்லை. அது ஒரு மின்மினிப் பூச்சி! ஊதுவதை நிறுத்துங்கள்" என்றது.

அந்தப் பறவை சொன்ன வார்த்தைகளைக் குரங்குகள் கேட்கவில்லை. மேலும் மேலும் ஊதிக் கொண்டே இருந்தன. பறவையும் விடாமல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது.

இதனால் கோபம் கொண்ட ஒரு குரங்கு, "எங்களுக்குத் தெரியும். நீ வாயை மூடிக் கொண்டு போ" என்று கூறியது. அப்போதும் அந்தப் பறவை போகவில்லை. தொடர்ந்து, தான் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தது.

அந்தக் குரங்கின் கோபம் அதிகமாகியது. 'சட்'டென்று தாவி அப்பறவையைப் பிடித்து, அருகில் இருந்த கல்லிலே அடித்துக் கொன்றது! சாகும்போது, 'மூடர்களுக்கு அறிவுரை கூறப் போய், என் வாழ்க்கையை முடித்துக்கொண்டு விட்டேனே!' என்று அப்பறவை வருந்தியது.



காகம் சொன்ன இரகசியம்!

ஒரு குடியானவன், தன் வயலில் மிருகங்களைப் பிடிப்பதற்காக வலை விரித்து வைத்திருந்தான். அந்தப் ப்க்கமாக வந்த ஒரு மான் அதிலே சிக்கிக் கொண்டது. எவ்வளவோ முயன்றும் தப்ப முடியவில்லை.

மானின் நெருங்கிய நண்பனாக ஒரு காகம் இருந்தது. பொழுதுபட்ட பிறகும் மான் திரும்பி வராததால், காகம் அந்தக் காடு முழுவதும் மானைத் தேடி அலைந்தது. கடைசியாக, மான், வலைக்குள் சிக்கித் தவிக்கும் காட்சியைக் கண்டது.

மிகவும் வருத்தத்துடன் அதன் அருகிலே சென்று, ''ஐயோ! இப்படி அகப்பட்டுக் கொண்டாயே! இந்த வலையோ கெட்டியான நரம்புகளால் செய்யப்பட்டிருக்கிறது. என்னால் அறுக்க முடியாதே! ஆனாலும் நீ தப்புவதற்கு ஒரு வழி சொல்கிறேன்; கேள்'' என்று இரகசியமாக அதனிடம் ஏதோ கூறியது. மானும் மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டியது.

மறுநாள் காலையில் குடியானவன் ஒரு தடியுடன் வயலை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அதைக் கண்ட காகம், உடனே மான் இருக்கும் இடத்திற்குப் பறந்து வந்து, 'கா, கா' என்று கத்தியது. காகம் கத்தியதைக் கேட்டதும், மான் கால்களை விறைப்பாக நீட்டிக்கொண்டு செத்தது போலப் படுத்துக் கொண்டது.

குடியானவன், வலையிலே மான் சிக்கியிருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான். 'பாவம், இரவெல்லாம் துடிதுடித்து இறந்து போயிருக்கிறது' என்று நினைத்து, வலையிலிருந்து மானைத் தூக்கி வெளியிலே போட்டுவிட்டு, வலையைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

அப்போது காகம் திரும்பவும் 'கா, கா' என்று கத்தியது. மறுவினாடி, மான் எழுந்து, துள்ளிக் குதித்து ஓடித் தப்பிவிட்டது!

மான் தப்பிப் பிழைத்ததைக் கண்டு, காகம் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தது!



ஆடா? அரக்கனா?

யாகத்தில் பலி கொடுப்பதற்காகத் தானமாகப் பெற்ற ஓர் ஆட்டுக் குட்டியைத் தோளிலே போட்டுக் கொண்டு நடந்தார், ஒரு பிராமணர்.

அவர் வரும் காட்சியைக் கண்டார்கள் சிறிது தூரத்தில் நின்ற மூன்று திருடர்கள். உடனே அவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டார்கள். அதன்படி மூவரும் தனித்தனியாக ஓடி, அவர் வரும் வழியில் வெவ்வேறு இடங்களில் நின்று கொண்டார்கள்.

அவர் அருகிலே வந்ததும் ஒரு திருடன் அவரைப் பார்த்து, ''ஐயையோ! என்ன இது? நாயைத் தூக்கித் தோளிலே போட்டுக்கொண்டு வருகிறீர்களே! இது சரியா? இது முறையா?'' என்றான்.

'நீ என்ன குருடனா? ஆட்டைப் பார்த்து, நாய் என்கிறாயே!'' என்று கோபமாகக் கூறிவிட்டு அவர் நடந்தார்.

சிறிது தூரம் போனதும், மற்றொரு திருடன், ''அட அநியாயமே! செத்துப் போன கன்றுக்குட்டியை இப்படித் தோளிலா தூக்கி வருவது?'' என்று இண்டல் செய்தான்.


''உனக்கென்ன கண் அவிந்து போய் விட்டதா? உயிரோடு இருக்கிற ஆட்டைப் பார்த்து, செத்துப் போன கன்றுக்குட்டி என்கிறாயே!'' என்று சீறினார் பிராமணர்.

மேலும் சிறிது தூரம் சென்றதும், மூன்றாவது திருடன் அவரைப் பார்த்து ஒரேயடியாகச் சிரித்தார். சிரித்துக்கொண்டே அவர் அருகில் வந்து, ''சாமி, இது என்ன அநியாயம்! கழுதையைத் தோளிலே சுமந்து செல்ல, எப்படித்தான் உங்களுக்கு மனம் வந்ததோ? யாராவது கழுதையைச் சுமப்பார்களா?'' என்று கூறிக் கேலி செய்தான்.

உடனே பிராமணர் யோசிக்க ஆரம்பித்தார். 'நாம் யாகம் செய்வதைத் தடுக்க நினைத்திருக்கிறான் ஓர் அரக்கன். அவன்தான் ஆட்டுக்குட்டி உருவத்திலே எனக்கும், வெவ்வேறு உருவங்களிலே மற்றவர்களுக்கும் தோன்றுகிறான். இப்படிப்பட்ட அரக்கனை நான் ஏன் தோள்வலிக்கச் சுமக்க வேண்டும்?' என்று நினைத்து, ஆட்டுக்குட்டியை அங்கேயே இறக்கி விட்டுவிட்டு, வேகமாக வீட்டை நோக்கி நடந்தார்.

மூன்று திருடர்களும் ஆட்டுக் குட்டியைப் பிடித்துச் சென்று அதைக் கொன்று தின்று ஆனந்தம் அடைந்தார்கள்.

தீயவர்கள் பேச்சைக் கேட்டு ஏமாந்து போனார் பிராமணர்.



கழுதையின் சங்கீதம்!

ஒரு கழுதைக்கும் ஒரு நரிக்கும் நட்பு ஏற்பட்டது. இரவு நேரத்தில் கழுதையும், நரியும் வெள்ளரித் தோட்டங்களுக்குள் புகுந்து வேண்டிய அளவு வெள்ளரிக்காய்களைத் திருட்டுத்தனமாகத் தின்று வந்தன.

ஒருநாள் வழக்கம் போல் அவை இரண்டும் வெள்ளரிக்காய்களைத் தின்னும்போது, அளவுக்கு அதிகமாகக் கழுதை தின்று விட்டது. உடனே அது நரியைப் பார்த்து, ''வயிறு நிறைந்திருக்கிறது. வானத்தில் நிலவோ அழகாகக் காட்சி அளிக்கிறது. இந்த நிலையில் எனக்குப் பாட வேண்டும் போல் தோன்றுகிறது'' என்றது.

''ஐயையோ! நீ வேறு பாடித் தொலைக்காதே! உன் குரலைக் கேட்டாலே தோட்டத்துக்குச் சொந்தக்காரன் ஓடிவந்து விடுவான். ஆபத்து!'' என்று எச்சரித்தது நரி.

''நான் பாடத்தான் போகிறேன்'' என்று உறுதியாகக் கூறியது கழுதை.

உடனே நரி, ''சரி, நீ இன்னும் சிறிது நேரம் சென்று பாடு. நான் வேலிக்கு வெளியிலே போய் ஒரு பள்ளத்தில் பதுங்கிக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு, ஓடிச்சென்று ஒரு பள்ளத்தில் ஒளிந்து கொண்டது.

கழுதை தன் கரகரத்த குரலில் உரக்கப் பாட ஆரம்பித்தது. தோட்டத்திற்குள் கழுதை நிற்பதை அறிந்த தோட்டக்காரன், பெரிய குண்டாந்தடி ஒன்றை எடுத்துவந்து, அதை அடிஅடியென்று அடித்தான். அத்துடன் அதன் கழுத்தில் ஒரு கல் உரலையும் கட்டிவிட்டான்.

கல் உரலை இழுத்துக்கொண்டு தட்டுத் தடுமாறி வந்த கழுதையைப் பார்த்து, ''நண்பரே, இது உமது இசையைப் பாராட்டி அளித்த பரிசா?'' என்று கூறிப் பரிகாசம் செய்தது நரி.

-பஞ்ச தந்திரக் கதைகளிலிருந்து தொகுத்தவர்: **நம்பி**.

திருக்குறள் புதிர்










மேலே உள்ள இரு படங்கள் எந்த எந்தத் திருக்குறளை நினைவூட்டுகின்றன?

ஒரு தாளில் அந்தக் குறட்பாக்களை எழுதுங்கள். 30-ம் பக்கம் உள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். உங்கள் நினைவாற்றல் எப்படிப்பட்டது என்பதை உணரலாம்.



பாலனுக்குப் புகழ் மாலை

தணிகை உலகநாதன்

'கோகுலம்' இதழைப் படிக்கும் ஆயிரம் ஆயிரமான சிறுவர் சிறுமியர், செங்கற்பட்டில் பாலன் என்னும் சிறுவன் செய்துவந்த செந்தமிழ்த் தொண்டைப் படித்தார்கள்; வியப்படைந்தார்கள். அவன் ஓய்வு நேரங்களில் கடைக்காரர்களிடம் போய்த் தவறான விளம்பரங்களைத் திருத்திவருவதை அறிந்து மகிழ்ந்தார்கள். 'கோகுலம்' ரசிகர்களிடமிருந்து பாலனுக்குப் பல பாராட்டுக் கடிதங்கள் வந்தன.

கடிதம் எழுதியவருள் சிலர், தாமும் பாலன் வழியைப் பின்பற்றப் போவதாக எழுதினர். 'பாலன் சேவை பைந்தமிழுக்குத் தேவை', என்று கோகுலத்தைப் படிக்கும் பெரியவர்களும் அவனைப் பாராட்டினார்கள்.

கடிதம் எழுதியவர்களுள் சிலர், ''நினைக்கும்போதெல்லாம் இனிக்கும் பாலனே, உன் சீரிய செந்தமிழ்த் தொண்டைக் கோகுலம் வாயிலாகப் படித்து அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். நாங்களும் உன் வழியில் எங்கள் ஊரில் விளம்பரப் பலகைகளில் காணப்படும் தவறான சொற்களைத் திருத்த முயற்சிக்கிறோம். நீயும் ஒருமுறை எங்கள் ஊருக்கு வரவேண்டும். உன்னை நாங்கள் பொன்னாடை அணிந்து பாராட்டக் காத்திருக்கிறோம்'' என்று எழுதினர்.

ஒருவர், ''உன் தமிழ்ச் சேவையை அறிந்து இன்பம் அடைகிறேன். எங்கள் அச்சரபாக்கம் என்னும் ஊருக்கும் ஒருமுறை வந்து சேவை செய்ய வேண்டுகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார்.

மற்றொருவர், ''செல்வன் பாலனுக்கு இறைவன் அருளால் எல்லா நன்மைகளும் உண்டாகட்டும். கோகுலத்தின் வழியாக உந்தன் தமிழ்த் தொண்டைக் கண்டு தமிழன்னை பெருமைப்படுகிறாள். பாராட்டுகிறேன்; இப்படிக்கு - இரங்கசாமி'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

கோகுலத்தைப் படித்த பெரியவர் ஒருவர், ''அன்புச் சிறுவன் பாலனுக்குப் பாராட்டுக்கள். உனக்கு நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் கொடுத்துக் கடவுள் காப்பாராக!'' என எழுதினார்.

வேறொருவர், 'மானிலம் புகழும் மாண்புறு பாலனுக்கு, எங்கள் ஊரில் கோகுலச் சிறுவர் சங்கம் நிறுவப் போகிறோம். துவக்க விழாவுக்கு வந்து சங்கத்தைத் துடங்கி வைக்க வேண்டுகிறோம்'' என்று வேண்டினார்.

இப்படித் தமிழகத்தின் பல இடங்களிலுமிருந்து வந்த கடிதங்களைப் பாலன் படித்து மகிழ்ந்தான். ஆனால், ஒவ்வொரு கடிதத்திலும் ஒவ்வொரு விதமான பிழை இருந்ததைக் கண்டு மனம் வருந்தினான். உடனடியாகத் தனக்குக் கடிதம் எழுதியவர்களுக்கு நன்றி மடல் எழுதினான். அத்துடன் அவர்களின் கடிதங்களில் கண்ட பிழைகளைப் பக்குவமாகச் சுட்டிக் காட்டித் திருத்திக் கொள்ளச் செய்தான்.

முதல் கடிதத்தில் **முயற்சிக்கிறோம்** என்று எழுதியது தவறு எனவும், **முயல்கிறோம்** என்றே எழுத வேண்டுமெனவும் குறிப்பிட்டான். முயல் என்னும் வினைச்சொல் நிகழ்காலத்தில் வரும்போது முயல்கிறோம் என்றே வரும் என்பதை விளக்கிக் காட்டினான். முயற்சி என்பது ஒரு தொழில் பெயர். அது முயற்சிக்கிறோம் என வராது. மேலும் 'ற்' என்னும் எழுத்துக்குப்பின் 'ச்' வரக் கூடாது என்றும் குறிப்பிட்டான்.

இரண்டாம் கடிதத்தில் 'பொன்னாடை **அணிந்து**' என்பதற்குப் பதிலாகப் பொன்னாடை **போர்த்தி** என்று எழுத வேண்டும் எனத் தெரிவித்தான். **அச்சரபாக்கம்** என்னும் ஊரின் பெயர்

அச்சிறுபாக்கம் என்றே இருக்க வேண்டும். அச்சு+இறு+பாக்கம் = அச்சிறுபாக்கம். அச்சரபாக்கம் என்பதற்குப் பொருளே இல்லை. அச்சிறுபாக்கம் என்றே அவ்வூர்ப் பெயர் வரலாற்றில் இடம் பெற்றிருப்பதாக விளக்கி எழுதினான்.

மூன்றாம் கடிதத்தில் **இரைவன்** என்பது தவறு. **இறைவன்** என்பதே சரி. எங்கும் நிறைந்திருப்பவன் என்பது பொருள். **உந்தன்** என்பது **உன்றன்** என இருக்க வேண்டும். உன்+தன் என்பது உன்றன் என வரும் என்பதையும் பாலன் சுட்டிக்காட்டினான். **இரங்கசாமி** என்பது தவறு. **அரங்கசாமி** என்பதே சரி. இப்பெயர் திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் பெருமாளைக் குறிக்கும் பெயராகும். இரங்கசாமி என்றால் எல்லோரிடமும் இரக்கம் கொள்ளுகின்ற சாமி என்று சிலர் நினைத்துவிடக் கூடும்!

நான்காம் கடிதத்தில் **குரைவற்ற** என்பது **குறைவற்ற** என்று இருக்க வேண்டும். குரைவு என்பதற்குப் பொருளே இல்லை. கடவுள் **கார்ப்பாராக** என்பதும் தவறு. **காப்பாராக** என்றே இருக்க வேண்டும். காப்பாற்றுதல் என்பது தொழிற்பெயர். அது காப்பாராக என்றுதான் வரும் என்பதை விளக்கி எழுதினான்.

ஐந்தாம் கடிதத்தில் **மாளிலம்** என்பது தவறு. **மாநிலம்** என்றே எழுத வேண்டும். பெருமை பொருந்திய உலகம் என்பது பொருள். **நிருவுதல்** தவறு. **நிறுவுதல்** என்பதே சரி. துவக்க விழாவைத் தொடக்க விழா என்றும், துடங்கி, என்பதைத் தொடங்கி என்றும் எழுதுமாறு கேட்டுக்கொண்டான். இந்தக் கடிதத்தைக் கண்ட அன்பர் அவ்வாறே அச்சிட்டுப் பாலனுக்கு அழைப்பிதழ் அனுப்பினார்.

விழாவுக்குச் சென்ற பாலனுக்குக் கோகுலச் சிறுவர் சங்கத்தினர் பூமாலை சூட்டியதுடன் புகழ்மாலையும் சூட்டிப் பெருமைப்படுத்தினர்.



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினராகச் சேர விரும்புவோருக்கு

கோகுலம் சிறுவர் சங்கத்தில் இதுவரை 7000—க்கும் அதிகமான உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். மேலும், சேர வேண்டுமெனத் தினமும் பலர் கடிதங்கள் எழுதுகிறார்கள். அக்கடிதங்களிலே தங்களைப் பற்றிய விவரங்களைக் குறித்து அனுப்புகிறார்கள். இப்படி அனுப்புவதை எங்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

நீங்கள் உறுப்பினராக வேண்டுமானால்-

1. கோகுலத்தில் வெளிவரும் உறுப்பினர் மனுவைத் தனியாக எடுத்து, அதில் பெயர், பிறந்த தேதி, முகவரி ஆகிய விவரங்களைக் குறித்து, அடியில் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும்.
2. அனுப்பும் போது, முழுப் பக்கத்தையும் கத்தரித்துஅனுப்ப வேண்டும். கட்டத்தை மட்டும் தனியாக எடுத்து அனுப்பினால், அது சிறிதாக இருப்பதால், தொலைந்து போக வாய்ப்பு உண்டு.
3. 15 வயதுக்கு உட்பட்டவர்களே இச்சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம்.
4. தமிழ்நாட்டுக்கு வெளியில் இருப்பவர்கள் ஆங்கிலத்தில் தங்கள் முகவரியை எழுத வேண்டும்.
5. முகவரி தெளிவாக இருக்க வேண்டும். பின் கோட் எண்ணுடன் இருந்தால் மிகவும் நல்லது.

—ஆசிரியர்.

பொங்கி எழும் சிங்கங்கள் – 2



''வந்தவரை விருந்தினராய் வரவேற்போம், வரி செலுத்தி அடிமையராய்ச் சிறுமைப்படோம்'' என்று தென்னாட்டிலே 1792—ல் சுதந்திரச் சங்கெடுத்து முழங்கியவர் யார் தெரியுமா? வீரபாண்டிய கட்டபொம்மன் என்னும் பாஞ்சாலங்குறிச்சி அரசராவார்.

அக்காலத்தில் ஆங்கிலேயர்கள் வாணிபம் செய்வதற்காகவே முதலில் இந்தியாவிற்கு வந்தார்கள். அப்போது பாரத நாடு பலப்பல சிறிய, பெரிய அரசர்களால் ஆங்காங்கே ஆளப்பட்டு வந்தது. வாணிபம் செய்ய வந்தவர்கள் பார்த்தார்கள். அரசர்களுக்குள்ளும், மக்களிடையேயும் வேற்றுமையை வளர்த்தார்கள். தந்திரங்கள் பலவற்றைக் கையாண்டு குடிமக்களிடம் வரி வசூலிக்கும் அதிகாரிகளாயினர்.

பல குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்தனர்: அவர்கள் எல்லோருமே ஆர்க்காட்டு நவாபுக்கு உட்பட்டிருந்தனர். மன்னர்கள் நவாபுக்குக் கப்பம் செலுத்தி வந்தார்கள். ஆனால் மன்னர்கள் வாள் முனையிலேயே கப்பம் செலுத்தினர்.

நவாபுக்கு மன்னர்களிடம் கப்பம் வசூலிப்பதில் ஆங்கிலேயர் உதவினர். நவாபுக்கு உதவியதால், ஆங்கிலேயர்கள் வரி வசூலிக்கும் அதிகாரிகளாயினர். ஆங்கிலேயரிடம் பண வலிமை இருந்தது. அதோடு பீரங்கி, துப்பாக்கி முதலிய கருவிகள், படை எல்லாம் இருக்கவே சிற்றரசர்கள் அவர்களிடம் பயந்தனர். அயலானின் அன்பைப் பெற்று — தமக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டனர்.

பாளையக்காரர்கள் அனைவரையும் ஓரிடத்துக்கு ஆங்கிலேயர் வரவழைத்தார்கள். எல்லோரும் எவ்விதம் கப்பம் — வரி செலுத்த வேண்டும் என்று கூறினார்கள். பாளையக்காரரில்

ஒருவரான வீரபாண்டியன் மட்டும் கூட்டத்திற்கு வரவில்லை. ''வானம் பொழியுது, பூமி விளையுது, உனக் கெதற்கடா கப்பம் செலுத்துவது?'' என்று வீர முழக்கம் செய்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் வாள் வலியும் தோள் வலியும் மிக்கவர். எனவே ஆங்கிலேய அதிகாரிகள் அவரிடம் நயமாகவும், பயமாகவும் கூறிப் பார்த்தனர். வீரபாண்டியனை எவ்விதமேனும் அடிமைப்படுத்தவேண் டும் என்பதிலே அவர்கள் குறியாயிருந் தனர்.

முதல் சூழ்ச்சியாக, கலெக்டர் ஜாக்ஸன், தன்னை வந்து காணுமாறு வீரபாண்டியனுக்குக் கடிதம் எழுதினார். வெள்ளையரை வெறுப்பவர் இல்லையே வீரபாண்டியன்! எனவே கலெக்டரை மதித்து அவரைக் காணச் சென்றார். ஆனால், கலெக்டரோ வீரபாண்டியனைப் பல இடங்களில் அலைக்கழித்த பின்பு, முடிவில் இராமநாதபுரத்திலே கண் டார். கண்டதும் ஆணவத்தோடு, வீரபாண்டியனைவரவேற்காமல், ''கப்பம் செலுத்து; இல்லாவிடில் சிறையில் அடைப்போம்'' என்று கொக்கரித்தார்.

அதோடு மட்டுமா? ஆட்களைக் கூவி அழைத்து, கட்டபொம்மனைப் பிடிக்கச் சொன்னார். வாள் வலிமை மிக்க கட்டபொம்மன் வீரர்களை ஒரே நொடி யில் வெட்டி வீழ்த்தினார்.

எதிர்த்த தளபதியையும் கொன்று வீரபாண்டியன் உடனே பாஞ்சாலங் குறிச்சிக்குக் கிளம்பிச் சென்றார்.

தளபதி கிளார்க் இறந்ததும் ஜாக் ஸன் துரை வெளியேற்றப்பட்டார்: லூஷிங்டன் என்பவர் கலெக்டரானார். வீரபாண்டியனை முறியடிக்கத் தீர்மா னித்து மேஜர் பானர்மென் தலைமை யில் ஒரு படை திரட்டிப் பாஞ்சாலங் குறிச்சிக்கு அனுப்பினார். 1799—ஆம் ஆண்டு செப்டம்பர் 4—ம் நாள், பாஞ்சாலங்குறிச்சிப் படைகளும், ஆங்கிலப் படைகளும் மோதின. பீரங்கிகள் கோட்டை மீது குண்டு மாரி பொழிந்தன. ஏழு மணி நேரம் போர் நடந்தது. மேலும் பீரங்கிகள் வரவழைக்கப்பட்டன.

அன்றிரவு கோட்டையை விட்டு வீரபாண்டியன் தம் தம்பியருடன் வெளியேறினார். இச்செய்தி வெள்ளைப் படையிலே பரவியதுதான் தாமதம். எதிர்ப்பு எதுவுமின்றிக் கோட்டையைத் தகர்த்து விட்டுக் கொடியைப் பறக்க விட்டனர்.

வீரபாண்டியனையும் அவர் தம்பி யரையும் பிடிக்கக் குதிரைப் படை வீரர்களையும் நாலாபுறமும் ஏவி னார்கள்.

வீரபாண்டியன் சென்னை செல்லும் நோக்கம் கொண்டிருந்தார். இரவோடு இரவாக அவர்கள் கிளம்பினார்கள்.

திருக்குறள் புதிர் - விடை

புதிர்-27

நாண் அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று (1020)

உள்ளத்தில் நாணம் இல்லாதவர் உலகத்தில் எதற்குச் சமம்?

கயிற்றைக் கொண்டு ஆட்டும் போது உயிருள்ளது போல் தோன்றி நம்மை மயக்குகிறதே, அந்தப் பொம்மைக்குத்தான் சமம்.

புதிர்-28

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. (118)

தராசு முதலில் தன்னைச் சமன் செய்து கொள்ளுகிறது. பிறகு, தன்னிடம் வைக்கும் பொருள்களின் எடையைச் சமமாக அளந்து காட்டு கிறது. அதேபோல் எந்தப் பக்கமும் சாயாமல் நடுவு நிலைமையைக் கடைப் பிடித்தல் சான்றோர்க்கு அழகாகும்.

ஆசிரியர் தெய்வம்

—பாலுசந்திரா



கள்ளமிலாப் பிள்ளையுளம் கொண்டவர் — நாம்
கல்விபெற, சொல்லித்தர வந்தவர்
தன்னுயிரே. மாணவர்தாம் என்றவர் — நாம்
தங்கநிழல் தந்துதினம் நின்றவர்

அன்புமனம் கொண்டுநம்மைப் பேணுவார் — நாம்
அறிவுபெற்றுத் திகழஇன்பம் காணுவார்.
எந்தநிலை வந்தபோதும் இமயமாய் — நாம்
ஏற்றம்பெற வழியமைப்பார் சமயமாய்.



தந்தைபோல நமது துயர் ஆற்றுவார் — நாம்
தாரணிக்குப் பாடுபட மாற்றுவார்.
ஏணிபோல நின்றுநம்மை ஏற்றுவார் — நாம்
ஏறுவதைப் பார்த்து நாளும் போற்றுவார்.

ஆசிரியர் தெய்வமவர் நல்லவர் — நாம்
அன்புடனே வணங்கத்தரும் வல்லவர்.
மாசறியா ஆசிரியர் வாழட்டும் — நாம்
மகிழ்வுடனே வாழுவதைக் காணட்டும்!

வழியிலே புதுக்கோட்டையை அடைந்தார்கள்.

புதுக்கோட்டை மன்னர் வீரபாண்டியனின் நண்பர். எனவே அவரது மாளிகைக்குச் சென்று, சில நாள் தங்கலாம் என நினைத்த வீரபாண்டியன், அங்கே சென்றார்.

வெள்ளையரை எதிர்த்து மண்ணோடு மண்ணாவதை விட, வெள்ளையரோடு சேர்ந்து பொன்னோடும் பொருளோடு வாழ்வதே சிறந்தது என்ற கொள்கை புதுக்கோட்டை அரசருக்குப் பிடித்துப் போயிற்று போலும்!

வீரபாண்டியனை முகமலர்வோடு தான் வரவேற்றார். ஆனால், மறு நாளே கும்பினி அதிகாரிக்குத் தூது அனுப்பி வீரபாண்டியன், தம் மாளிகையில் உள்ள இரகசியத்தைக் கூறி வரச் செய்தார்.

காத்துக் கிடந்தவர்களாயிற்றே! விடுவார்களா! எதிர்த்து நின்ற ஒரே பாளையக்காரர் வீரபாண்டியன். அவர் கதை முடிந்தால் இனித் தென்னாட்டில் வெள்ளையன் ராஜ்ஜியம்தானே!

வீரபாண்டியனை அன்னியரிடம் காட்டிக் கொடுத்த துரோகி என்ற பெயரைப் பெற்றான் புதுக்கோட்டை அரசன். வீரபாண்டியன் கைது செய்யப்பட்டார். அக்டோபர் 10-ம் தேதி 1799-ல் நீதி விசாரணை நடந்தது. முடிவில் வீரபாண்டியனைக் குற்றவாளியாக்கி, கயத்தாறு என்னும் இடத்திலே தூக்கிலிட்டார்கள் வெள்ளையர்கள்.

வீரபாண்டியனைத் தூக்கிலிட்டதோடு வெள்ளையர் அமைதியுற முடிந்ததா? இல்லை. வீரபாண்டியனின் வீரத்தியாகம் கேட்பவரை வீரம் கொள்ள வைத்தது.

வடக்கே சிப்பாய்க் கலகத்துக்கு முன்பே தெற்கே 'சுதந்திரம், சுதந்திரம்' என்று முழங்கிய முதல் தென்னக அரசர் பாஞ்சாலங்குறிச்சியின் மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன்தான்!

தேருக்கு வடம் தந்தவர்

— அ. க. முனுசாமி



செந்தமிழ் மொழியில் இந்தியர் ஒன்றெனச்
செப்பிய பாவலர் யாரடா? — நல்ல
சிந்தனைக் கவிகளை வந்தனை செய்திடச்
சிந்திய பாரதி யாரடா.

வெள்ளையனை இந்த மண்ணில் இருந்தே
வெளியிலே போஎனச் சாடினார் — உடன்
உள்ளத்தில் விடுதலைத் தேவியை எண்ணியே
உணர்ச்சிகள் பொங்கிடப் பாடினார்.

பூனை உதாரணம் காட்டியே மக்களைப்
பூமியில் ஒன்றென நாட்டினார் — இங்கே
தானே உயர்ந்தவன் மற்றவர் தாழ்வெனும்
தருக்கினை நெஞ்சினில் ஓட்டினார்.

நித்தம் வளர்ந்திடும் பாப்பா மனத்தினில்
நீதிகளைச் சொல்லித் தூண்டினார் — வாழ்வில்
புத்தம் புதியநல் நெறிகளைக் காட்டியே
போற்றும் படிவாழ வேண்டினார்.

தெய்வம் பலவெனத் தெளிவு பெறுமலே
தேடிடும் வீணரைத் தூற்றினார் — நாளும்
ஐயமில் லாதநல் உண்மை நடத்தையில்
ஆண்டவன் இருப்பதைப் போற்றினார்.

பாரத நாட்டின் பெருமையைக் காத்திட,
பாரதி பாடலை நாடுவோம் — தினம்
பாரதத் தேருக்கு ஒருமை வடம்தந்த
பாரதி யார்புகழ் பாடுவோம்.



பிருந்தாவனம்


குளத்திலே முடியும் ஊர்கள்!

அல்லிக்குளம்,
அரவங் குளம்,
ஆலங் குளம்,
எலந்தைக் குளம்
கருங் குளம்,
கொக்கர குளம்,
செவல் குளம்,
தருவை குளம்,
சாத்தான் குளம்
வாகைக் குளம்

இவை எல்லாமே திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவை.

—வி. புவனா (3969) தூத்துக்குடி—2.





விருதுநகர், அருப்புக்கோட்டை விலை ஒரு ரூபாய்தான்!

'விருது நகர் ஒரு ரூபாய்' 'விருதுநகர் ஒரு ரூபாய்' என்று அருப்புக்கோட்டைப் பேருந்து நிலையத்திலும், 'அருப்புக் கோட்டை ஒரு ரூபாய்', 'அருப்புக் கோட்டை ஒரு ரூபாய்' என்று விருதுநகர்ப் பேருந்து நிலையத்திலும் பேருந்து ஊழியர்கள் கூவுவதைக் கேட்கலாம்.

விருதுநகரும் அருப்புக்கோட்டையும் அருகருகே அமைந்துள்ள நகரங்கள். அங்கு டவுன் பஸ்களுக்கும், ரூட் பஸ்களுக்கும் நடக்கும் போட்டியில், இப்படி இரு நிலையங்களிலும், அந்த நகர்களை விலை கூறி விற்பனை செய்வது போல் கூவுகிறார்கள்!

—கு. கணேசன் (537), பேரையூர்.


விடுகதைகள்:

1. மேகத்தின் பிள்ளை: தாகத்தின் நண்பன் — அது என்ன?
2. உடல் சிகப்பு: வாய் அகலம்; உணவு காகிதம் — அது என்ன?
3. தொட்டாலும் பிடிப்பான்; விட்டாலும் பிடிப்பான்; அவனுக்கு உயிரில்லை. அவன் யார்?
4. சினந்து சிவந்தவன்; சிதைந்து போனவன். அவன் யார்?

விடைகள்: 1. மழை, 2. தபால்பெட்டி, 3. நிழல், 4. தீ.

—க. செந்தில்குமார் (2123), வண்டலூர்.





இவர்கள் விரும்பும் இசைக் கருவிகள்

ஏழைகள் விரும்பும் இசைக் கருவி
—'கஞ்சி'ரா.
விவசாயி விரும்பும் இசைக் கருவி
—'வய'லின்
பெண்கள் விரும்பும் இசைக்கருவி
—புல்லாங் 'குழல்'
மாடு விரும்பும் இசைக்கருவி
—'புல் புல்' தாரா.
நகைக் கடைக்காரர் விரும்பும் இசைக்கருவி —மிரு'தங்கம்'.
பொதுப் பணித் துறையாளர் விரும்பும் இசைக்கருவி —கி'தார்'.


—எஸ். கிருஷ்ணமூர்த்தி (2918),
—வேலூர்-4.

அடிதடி சண்டையா?

"நீ அடிக்காவிட்டால் நான் அடிப்பேன்."
"இல்லை. நானே அடிக்கிறேன்."
"இன்னும் அஞ்சு நிமிஷத்திலே நீ அடிக்கணும். இல்லாது போனால் நான் அடிப்பேன்."

ரொம்ப சுவாரசியமாக, ஓர் அடிதடி சண்டையை ரசிக்கலாம் என்று உள்ளே நுழையாதீர்கள். இரண்டு டைப்பிஸ்டுகள் டைப் அடிப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அசடு வழிவீர்கள்!

—ஆர். குருராஜ் (1444), கரூர்.





என்னாலே முடியாது

விமானப் பயணி(விமானியிடம்): ஐயா, வியானத்தில் போதுமான அளவு எண்ணெய் ஊத்திட்டீங்களா?
விமானி: அதைப் பற்றி நீங்க ஏன் கேட்கிறீங்க?
விமானப் பயணி: எண்ணெயில்லாமே வழியிலே நின்னுட்டா, என்னாலே இறங்கித் தள்ள முடியாது.

—ஆர். ராஜேஷ் கண்ணு (3490),
புளியங்குடி.

ஏழரை அணா குறையுது!

எண்ணி எண்ணிப் பார்க்கும்போது
ஏழரை அணா குறையுது.
எடுத்த வங்க கொடுத்திடுங்க
எங்க பாட்டி வையுது.

—ஆர். எஸ். பானுப்ரியா (4242),
மதுரை-1.



அல்லாவிற்கு நன்றி

துருக்கி நாட்டில் நாஸிர் என்ற விகடகவி வாழ்ந்து வந்தார். அவரது கழுதை ஒருநாள் காணாமல் போய் விட்டது.


நாஸிர், ''ஏ அல்லா, என் கழுதை தொலைந்து போய் விட்டது. உனக்கு நன்றி... அல்லாவுக்கு நன்றி'' என்று உரக்கக் கூவினார்.

அக்கம்பக்கத்தார் நாஸிரைச் சூழ்ந்து கொண்டு, ''என்ன நாஸிர் இது! உன் கழுதை காணாமல் போனதற்குப்போய் அல்லாவுக்கு நன்றி சொல்கிறாயே!'' என்று கேட்டனர்.

''அல்லாவின் கருணையே கருணை. நல்லவேளை... அந்தக் கழுதையுடன் நான் இன்று இல்லை. இருந்திருந்தால், அதனுடன் நானும் 'அல்லவா சேர்ந்து தொலைந்திருப்பேன்...!'' என்றார் நாஸிர்.

இதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

—தி. அருள்சிவபாலன் (47), செங்கற்பட்டு.





நீலத் தண்ணீர்

''இந்த டம்ளரிலுள்ள தண்ணீரை ஒரு நூலின் உதவியால் நீல நிறமாக்க முடியுமடா?'' என்று கேட்டான் ராமன்.

''நீயே செய்து காட்டு'' என்றார்கள் அவன் நண்பர்கள்.

ராமன் கறுப்பு நிற நூல் ஒன்றை எடுத்தான். அதைத் தண்ணீரில் போட்டான். உடனே தண்ணீர் நீல நிறமாக மாறியது. நண்பர்கள் வியப்போடு பார்த்தார்கள்.

''இது ஒன்றும் பெரிய வித்தையல்ல. இந்தக் கறுப்பு நூலில் ஏற்கெனவே நான் பொட்டாசியம் பெர்மாங்கனேட்டைத் தடவி வைத்திருந்தேன். பொட்டாசியம் பெர்மாங்கனேட்டைத் தண்ணீரில் போட்டால்..''

''நீலநிறமாக மாறும் என்றுதான் பள்ளியில் படித்திருக்கிறோமே!'' என்று கூறி முடித்தான் ஒரு நண்பன்.

—வி. சுப்பிரமணியன் (5003), சென்னை—28.

கடல் அலையும் சிரிப்பு அலையும்

நாங்கள் திருச்செந்தூர் போயிருந்தபோது அங்கிருந்த கடலில் குளிப்பதற்காகக் கடற்கரை அருகிலே சென்றோம். முன்னும் பின்னுமாகக் கடல் அலைகள், வேகமாக வந்து போவதைக் கண்ட என் பாட்டி, வியப்புடன், ''அடியம்மா, தினமும் இப்படியா அலையடிக்கும்?'' என்றாள்.

உடனே என் தங்கை பவளம், ''இல்லே பாட்டி. ஞாயிற்றுக்கிழமை மட்டும் இருக்கு லீவு'' என்றாளே பார்க்கலாம். அந்தக் கடல் அலைகளுடன் எங்களது சிரிப்பு அலைகளும் சேர்ந்து ஓங்கி ஒலித்தன.


—எஸ். பாலமுருகன் (3645), மதுரை—1



ரம்... ரம்... ரம்...!

கையைக் குறிக்கும் கரம்
தலையைக் குறிக்கும் சிரம்
பூமாலையைக் குறிக்கும் ஆரம்
மனைவியைக் குறிக்கும் தாரம்
தொலைவைக் குறிக்கும் தூரம்
உறைப்பைக் குறிக்கும் காரம்
சுமையைக் குறிக்கும் பாரம்.

—ச. ஆழ்வார் ராஜா (4601), காளி அஞ்சல்.





சீட்டு வேணுமா?

கிராமத்தின் வழியாக டவுன் பஸ் சென்று கொண்டிருந்தது. கண்டக்டர், ''சீட்டு யாருக்கு வேணும்? கேட்டு வாங்கிக்கங்கோ?'' என்றார். அவர் குறிப்பிட்டது டிக்கெட்டை.

நின்று கொண்டிருந்த ஒரு வாலிபர் ''அப்பாடியா! கால் வலிக்குது. நான் முதலிலே உட்காருறேன்? சீட் (SEAT) எங்கே? எங்கே?'' என்று ஆவலாகக் கேட்டார்.

பஸ்ஸிலிருந்த அனைவரும் 'கொல்' லென்று சிரித்தனர்.

—பழ. சாந்தி (5939), இராயவரம்.

கராத்தே:

கராத்தேக் கலை இப்போது உலகெங்கிலும் பரவி, பலரும் விரும்பிப் பயிலும் கலையாகி விட்டது.

'கராத்தே' என்றால், கை என்று அர்த்தம். கைகளையே ஆயுதமாகக் கொண்டு எதிரிகளை வீழ்த்தும் சண்டையான கராத்தே முதன் முதலில் ஆறும் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது. பிறகு, ஜப்பானியர் இக்கலையை 1920—ஆம் ஆண்டு பல விதிமுறைகளுடன் நவீனப்படுத்தினார்கள்.

—எஸ். மாதவன் (204), திருச்சி—14.



எப்படிச் சாப்பிடுவது?



ஒரு கிராமத்துச் சிறுவன் டைனிங் டேபிளைப் பார்த்து, ''அம்மா, எதுக்கம்மா இம்மாம் பெரிய மேசை?'' என்று கேட்டான்.

''அதுதான் சாப்பிடற மேஜைடா''

''இதை எப்படி அம்மா சாப்பிடுவாங்க?''

—எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி—14.

திரும்பி வந்த குரங்கு



அழ. வள்ளியப்பா

சிவப்புத் துணியிலே மேல்சட்டை, நீலத் துணியிலே கால் சட்டை, பச்சைத் துணியிலே குல்லா — இப்படி வண்ண வண்ண உடையுடன் காட்சியளித்த அந்தக் குரங்கு, கோவிந்தசாமி சொன்னபடியெல்லாம் செய்யும்.

கோலை நீட்டினால் தாவும்; குட்டிக்கரணம் போடும்; மாடு மேய்ப்பவரைப் போலப் பிடரியிலே கோலை வைத்துக்கொண்டு நிற்கும்; தாத்தா மாதிரி தடியை ஊன்றித் தள்ளாடித் தள்ளாடி நடக்கும். பெரியவர்கள் சின்னவர்கள் எல்லோரும் சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

வித்தை முடியப் போகிற சமயம், ''ரங்கா, சுத்தி நிற்கிற புண்ணியவான்களெல்லாம் உன் வித்தையைப் பார்த்துட்டுச் சும்மா போக மாட்டாங்க. தாராளமாகக் காசு கொடுப்பாங்க. அவங்க தாரதைச் சலாம் போட்டு வாங்குடா ரங்கா'' என்பார் கோவிந்தசாமி.

உடனே ரங்கன் தகரக் குவளையை எடுத்துக்கிட்டுச் சலாம் போட்டபடி சுற்றிச் சுற்றி வரும். 'ஆஹா! ஓஹோ!' என்று வேடிக்கை பார்த்தவர்களில் பலர், மெல்ல நழுவி விடுவார்கள்; சில பேர்தான் காசு போடுவார்கள். அதுவும் பெரும்பாலும் ஐந்து பைசாவாகத்தான் இருக்கும்.

ஒரு நாளைக்குக் குவளையிலே விழுகிற சில்லறைகளையெல்லாம் சேர்த்து எண்ணிப் பார்த்தால், இரண்டு ரூபாய், மூன்று ரூபாய்தான் இருக்கும். ஒவ்வொரு நாளும் எவ்வளவு பணம் கிடைக்குமோ, அதிலே சரி பாதிக்குப் பொரி, கடலை, தேங்காய்க் கீற்று, வாழைப்பழம் — இப்படி ரங்கனுக்குப் பிடித்ததாகப் பார்த்து வாங்கிக் கொடுத்திடுவார் கோவிந்தசாமி. இன்னொரு பாதிப் பணத்திலே அவருக்குத் தேவையான சோறு, பலகாரம், டீ, வெற்றிலை பாக்கு வாங்கிக்கொள்வார். தனக்கென்று அதிகமாக எடுத்துக் கொள்ளவே மாட்டார்!

ரங்கனை அவர் சொந்தப் பிள்ளை மாதிரியே வளர்த்து வந்தார். சில சமயம் அதை இடுப்பிலே தூக்கி வைத்துக்கொண்டு, ''ரங்கா, இந்த வயசான காலத்திலே எனக்கு யாரு இருக்கிறாங்க? நீதான் நான் பெத்த பிள்ளை மாதிரி சம்பாதிச்சு என்னைக் காப்பாத்தறாய்'' என்று பாசத்தோடு கூறுவார்.

ரங்கனுக்கும் கோவிந்தசாமியிடத்திலே மிகுந்த பிரியம்தான். ஆனாலும் நடுநடுவே அதற்கு ஓர் ஆசை வந்துவிடும்!

தினமும், கடை வீதி வழியாகப் போகும்போது அங்கே கடைகளில் குவியல் குவியலாக இருக்கிற பொரி, பட்டாணிக் கடலை, பொட்டுக் கடலை, வேர்க்கடலை, தேங்காய், சீப்புச் சீப்பாகத் தொங்குகிற வாழைப்பழங்கள் முதலியவற்றையெல்லாம் பார்க்கும். உடனே நாக்கிலே எச்சில் ஊறும்.

''சே, என்ன பொழைப்பு? நான் தினமும்தான் வித்தை செய்கிறேன். குவளை நிறையக் காசு விழுந்தாலும், நான் ஆசைப்படுகிற பொருளை நினைச்ச நேரத்திலே நினைச்ச அளவு தின்ன முடிகிறதா? இவருகிட்டே இருக்கிற வரை இப்படியே இருக்க வேண்டியதுதான். இஷ்டம் போலச் சாப்பிட முடியாது'' என்று அடிக்கடி நினைக்கும்.

அன்று அமாவாசை. நல்ல இருட்டு. கோவிந்தசாமி, பிள்ளையார் கோயில் மண்டபத்திலே குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். பக்கத்திலே படுத்திருந்த ரங்கனுக்குத் தூக்கம் வரவில்லை. மெதுவாக இடத்தை விட்டு எழுந்தது. சத்தடியில்லாமல் காலை எட்டிப் போட்டது. கொஞ்சதூரம் போனதும், குடுகுடு என்று



ஓட்டம் பிடித்தது. அந்த ஊரை விட்டே ஓடிவிட்டது!

நடுவிலே இருந்த சின்னச் சின்ன ஊர்களைத் தாண்டி ஒரு நகரத்துக்கு வந்தது. அப்போது விடிந்து விட்டது. காலையிலேயே வெயில் மிகக் கடுமையாக இருந்ததால், கால் சட்டைப் பைக்குள்ளிருந்த குல்லாயை எடுத்துத் தலையிலே மாட்டிக்கொண்டது ரங்கன்.

நகரத்துக்குள்ளே நுழைகிற போது, அங்கே ஒரு பெரிய மாமரம் இருந்தது. அதிலே காய்களும், பழங்களும் ஏராளமாகத் தொங்கின. அத்துடன், அந்த மரத்திலே ஏழெட்டுக் குரங்குகள், குட்டிகளோடு இருந்தன. உடனே ரங்கனுக்குக் குஷி பிறந்துவிட்டது.

ஒரே தாவாகத் தாவி, அந்த மரத்திலே ஏறியது. சட்டையும்குல்லாயுமாக வந்த ரங்கனைக் கண்டதும், அதை யாரோ என்று நினைத்துவிட்டன அந்தக் குரங்குகள்! 'உர்...உர்.. உர்' என்று கத்தி, அதை அடித்து விரட்டி விட்டன.

'நானும் குரங்கு. அதுகளும் குரங்குகள். என்னைப் பார்த்ததும் ஏன் இப்படிக் கத்தணும்? ஓட ஓட விரட்டணும்?... ஓ! புரியுது. புரியுது. என் உடையைப் பார்த்துத்தான் விரட்டியிருக்கணும்' என்று நினைத்தது. உடனே, குல்லா, மேல் சட்டை, கால்சட்டையெல்லாவற்றையும் கழற்றி அங்கேயிருந்த ஒரு கால்வாயிலே தூக்கி எறிந்தது. ''இந்த உடுப்பும் வேண்டாம். நம்ம குரங்கு இனமும் வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு ஊருக்குள்ளே ஓடியது.

வழியிலே ஒரு கடைவீதி இருந்தது. அங்கே ஒரு பொரி கடலைக்கடை இருந்தது. கடையிலே யாருமே இல்லே. போன வேகத்திலே, அந்தக் கடைக்குள்ளே புகுந்தது. அங்கே கோபுரம் போல், கொட்டி வைத்திருந்த பொரியை இரண்டு கைகளாலும் அள்ளி வாயிலே திணிக்கப் பார்த்தது. அப்போது, சற்றுத் தூரத்திலிருந்த குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்த கடைக்காரர் பார்த்துவிட்டார். சும்மா இருப்பாரா? ''பிடி! பிடி!'' என்று கத்திக்கொண்டே கடையை நோக்கிப் பாய்ந்தோடி வந்தார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை! பொரியைக் கீழே எறிந்துவிட்டு ரங்கன் தலைதெறிக்க ஓடியது. கடைக்காரர் அப்போதும் சும்மா இருக்கவில்லை. தெருவிலே கிடந்த

ஒரு கல்லை எடுத்துக் குரங்கைக் குறி பார்த்து எறிந்தார். கல் ரங்கன் முதுகிலே பட்டதும், வலி தாங்காமல் 'கீ, கீ' என்று கதறிக்கொண்டே ஓடி விட்டது.

அன்று முழுவதும் ரங்கன் வெளியில் தலை காட்டவே இல்லை. சிறிது தூரத்தில் இருந்த மரத்தில் ஏறி, இரண்டு கிளைகளுக்கு நடுவே உட்கார்ந்து முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தது. பாவம், அன்று முழுவதும் பட்டினி!

மறுநாள் காலையிலே மரத்துக்கு மரம் தாவி, சுவர்கள் மீது ஏறி அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே வந்தது. ஒரு கிழவி, ஒரு மரப்பலகையில் தேங்காய்க் கீற்றுகளை அழகாக அடுக்கிவைத்து விற்றுக் கொண்டிருந்ததைக் கண்டது.

ரங்கன் சுவரிலிருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. தேங்காய்க்கீற்றை எட்டி எடுக்கப் போனது. மறுவிநாடி 'டங்'கென்று தலையிலே பலமாக ஓர் அடி விழுந்தது! அந்தப் பொல்லாத கிழவிதான் காக்கை விரட்டுவதற்காகப் பக்கத்திலே வைத்திருந்த தடியாலே ஓங்கி அடித்து விட்டாள்! வலி தாங்காமல், கத்திக்கொண்டே ரங்கன் வெறுங் கையோடு ஓடி மீண்டும் சுவரிலே ஏறிக் கொண்டது. அன்றைக்கும் பட்டினிதான்!

மூன்றாம் நாள் கோயில் பக்கமாகப் போய், மதில் சுவரிலே உட்கார்ந்து கூர்ந்து, கூர்ந்து பார்த்தது. கொஞ்ச தூரத்திலே ஒரு பழக்கடை தெரிந்தது. அங்கே ஆப்பிள், ஆரஞ்சு, மாம்பழம் எல்லாம் இருந்தன. சீப்புச் சீப்பாய் வாழைப் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கடைக்காரர் அசந்த சமயம் பார்த்து ஒரு சீப்பு வாழைப் பழத்தைக் கொண்டு வந்து விடலாமென்று நினைத்தது ரங்கன்.

கடைக்காரர் பின்புறமாகத் திரும்பி, கூடையிலிருந்த பழங்களை எண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுதுபார்த்து ரங்கன் ஒரே தாவாகத் தாவிப் பழக் கடைக்குள் புகுந்தது. ஒரு சீப்பு வாழைப் பழத்தைப் பிடித்து இழுத்தது.

அந்தச் சமயம், தெருவிலே நடந்து போன ஒருவர் சும்மா போகக் கூடாதா? ''ஐயோ! குரங்கு! குரங்கு!'' என்று கத்தினார். உடனே பழக்கடைக்காரர் சட்டென்று திரும்பிப் பார்த்தார். ரங்கன் பழத்தைப் போட்டு விட்டு ஓடியது: ஆத்திரத்திலே பக்கத்தில் கிடந்த பழம் நறுக்குகிற கத்தியை எடுத்து ரங்கனைப் பார்த்து எறிந்தார். ரங்கனின் வால் நுனியிலே கத்திபட்டு, ஓர் அங்குல நீளம் துண்டிக்கப்பட்டது!

ரங்கன் கதறிக்கொண்டே நாலு கால் பாய்ச்சலில் ஓடியது. வலி பொறுக்காமல் துடியாய்த் துடித்தது. வெகு தூரம் சென்று ஓர் ஆலமரத்தில் ஏறி வாலைப் பார்த்தது. வால் வெட்டுப்பட்டு இரத்தம் கொட கொடவென்று கொட்டுவதைக் கண்டு மிகவும் கலங்கி விட்டது. இரத்தம் மேலும் வழியாமல், வெட்டுப்பட்ட இடத்திலே கையை வைத்து, அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தது. வெகு நேரம் சென்று பார்த்தது. இரத்தம் கசிவது நின்று விட்டது.

ஆலமரக் கிளையில் அமர்ந்திருந்த ரங்கனுக்கு, அப்போதுதான் கோவிந்த சாமி நினைப்பு வந்தது.

''அவர் என்னிடத்திலே எவ்வளவு பிரியமாயிருந்தாரு! எப்படிப் பாசத்தைக் காட்டினாரு! நான் இந்த மூணு நாளாப் பட்டினி கிடக்கிறேனே, அவர் ஒரு வேளையாவது என்னைப் பட்டினி கிடக்க விட்டிருப்பாரா? ஒருத்தர் என் முதுகிலே கல்லால் அடிச்சாரு. ஒரு பாட்டி என் தலையிலே தடியாலே அடிச்சாள். கடைசியிலே, பழக்கடைக்காரர் என் வாலையே வெட்டிட்டாரே! என் எஜமான் என்னை ஒரு நாளாவது அடிச்சிருப்பாரா? திட்டினதுகூட இல்லையே! பிள்ளை மாதிரி வளர்த்தாரே! அவருக்

முதல் நிபந்தனை!

"முதல்லே என் பாக்கெட் டேப் ரிகார்டரைத் தூக்கி எறிந்தால்தான் உன்னை நாங்க கபடி ஆடச் சேர்த்துப் போம். தெரிஞ்சுக்கோ..."



குத் தெரியாமல் ஓடி வந்திட்டேனே! என்னைக் காணுமே அவர் துடிதுடிச்சிருப்பாரே! இந்தத் தள்ளாத வயசிலே அவர் எப்படி இருக்கிறாரோ? இனி ஒரு நிமிஷம்கூட இங்கே இருக்கப் படாது.''

மறுவிநாடி ரங்கன் மரத்திலிருந்து கீழே குதித்தது. குடுகுடுவென்று ஓடியது. முன்பு இருந்த கொட்டாம் பட்டிக்கு வந்து, கோவிந்தசாமி வழக்கமாயிருக்கிற மண்டபத்திலே பார்த்தது. அங்கே கோவிந்தசாமியைக் காணோம்! ஊரெல்லாம் தேடிப் பார்த்தது.

ஊருக்குக் கடைசியிலே யிருந்த ஓர் அரச மரத்தடியிலே கோவிந்தசாமி தூங்குவதைப் பார்த்து விட்டது! அதற்கு ஒரே ஆனந்தம்! மெதுவாக அவர் பக்கத்திலே போய் உட்கார்ந்தது.

''பாவம். நல்லாத் தூங்கறாரு. எழுப்பக் கூடாது'' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டது.

அரைமணி நேரம் அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டே, அருகிலே அமைதியாக இருந்தது. படுத்திருந்த கோவிந்தசாமி, ''ரங்கா! ரங்கா!'' என்று கத்திக்கொண்டே எழுந்தார். எதிரிலே ரங்கனைக் கண்டதும், ''ஆ! இப்பத்தானேடா உன்னைக் கனவிலே கண்டேன்! நேரிலே வந்துட்டியே!'' என்று கூறி அதைக் கட்டிப்பிடித்து மடியிலே தூக்கி வைத்துக்கொண்டு இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் கொடுத்தார்.

''எங்கேடா போனாய் என்னைத் தனியா விட்டுட்டு? உன்னைக் காணுமே எங்கெங்கே, தேடினேன்? யாரை, யாரையெல்லாம் விசாரிச்சேன்! நல்ல வேளை, நீயே திரும்பி வந்...'' கூறிக் கொண்டிருக்கும் போதே, ரங்கனின் வால் அவர் கண்களில் பட்டது.

''ஐயோ! இது என்ன? என் ரங்கனின் வாலை எந்தப் படுபாவி வெட்டிட்டான்?'' என்று ஆத்திரமும், கோபமும் கலந்த குரலில் கூறி, வாலைப் பிடித்து மெல்லத் தடவிக் கொடுத்தார்.

பிறகு, ரங்கனைத் தூக்கிக்கொண்டு பக்கத்திலே இருந்த ஒரு கடைக்குப் போனார். இரண்டு நாளாக மூட்டை தூக்கிச் சம்பாதித்து வேட்டியிலே முடிந்து வைத்திருந்த பணத்தை எடுத்தார். ஒரு டஜன் வாழைப்பழம் வாங்கி ரங்கனுக்கு அன்போடு ஊட்டி விட்டார். பக்கத்திலே கடலை விற்ற அம்மாளிடம், அரைப்படி கடலை வாங்கி ஆசையாகக் கொடுத்தார். ரங்கன் சாப்பிடுவதைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார்.

மறுநாளே கோவிந்தசாமி ரங்கனைத் தனக்குத் தெரிந்த ஒரு தையற்காரரிடம் அழைத்துச் சென்றார். துண்டு துண்டாக வெட்டிப் போட்டிருந்த வண்ண வண்ணத் துணிகளிலே உடை தைத்து ரங்கனுக்குப் போட்டுவிட்டார் அந்தத் தையற்காரர். அழகாக ஒரு குல்லாயும் தைத்துத் தலையிலே மாட்டினார்.

இப்போது ரங்கன் முன்னைவிட அருமையாக வித்தைகளெல்லாம்காட்டுகிறது. கூட்டமும் நிறையக் கூடுகிறது. பணமும் அதிகம் சேருகிறது!

''உன்னை ஜெயிலிலேயிருந்து தண்டனை காலம் முடியுறதுக்குள்ளே வெளியிலே விடப் போறாங்களாமே, என்ன விஷயம்?''

''நான் 'திருடன் திருந்தினான்' என்று ஒரு கதை எழுதிப் போட்டிக்கு அனுப்பினேன். முதல் பரிசு கிடைச்சது. அதனாலேதான்.''

—கீதா.



பிருந்தாவனக் கவியரங்கம்

சிங்கப்பூர் மாமா

சிங்கப்பூரு போன மாமா
திரும்பி நேற்று வந்தாரு.
சில்க்குச் சட்டை போட்டு என்னைச்
சிரிக்கச் சிரிக்க வைச்சாரு.

தங்கச் செயினைக் கழுத்தில் மாட்டித்
தாளம் போடச் சொன்னாரு.
'மங்க ளமாய் வாழ்க' என்றே
வாழ்த்துக் கூடச் சொன்னாரு.

இனிப்புப் பண்டம் பழவ கைகள்
எல்லாம் எனக்குத் தந்தாரு.
இனிய கதைகள் சொல்லிச் சொல்லி
என்னை மகிழ வைச்சாரு.

தங்கக் குணத்து மாமா அவரைச்
சந்திக் கத்தான் ஆசையோ?
எங்கள் வீட்டில் பார்க்க லாமே,
இன்றே ஓடி வாருங்கள்.

—அ. சுபதி (2680), கோவை-38.



கோமாளிக் குப்பன்

கோமாளிக் குப்பன் ஒருநாள்
குளத்தங் கரைக்குப் போனான்.
குள்ள நண்பன் ஒருவன் அங்கே
குறுக்கு வழியில் வந்தான்.

மரக் கிளையில் மந்தி ஒன்று
மாறி மாறிக் குதித்தது.
மக்குப் பயல்கள் இரண்டு பேரும்
வம்பு செய்தார் அதனிடம்.



இருவ ரையும் அந்த மந்தி
ஏற இறங்கப் பார்த்தது.
எட்டிப் பிடித்துக் கடித்து விட்டு
எங்கோ ஓடி மறைந்தது !

துள்ளித் துடித்துப் போன அவர்கள்
தொப்பென் றங்கே விழுந்தனர்.
மெள்ள எழுந்து அழுது கொண்டே
வீடு நோக்கித் திரும்பினர்.

—செ. இளஞ்செழியன் (3990),
திருவாரூர்.

காரணம் புரிந்தது!


கொள்ளுத் தாத்தா கேட்டதுமே
குடை யை எடுத்துக் கொடுப்பேனே.
பெரிய அண்ணன் கேட்டதுமே
போய் எடுத்து நீட்டுவேனே.



பாட்டி சாப்பிட உட்கார்ந்தால்
பல்செட் எடுத்துக் கொடுப்பேனே
அம்மா ஆணை இட்டாலே
அரிசியை அள்ளித் தருவேனே

என்றன் சொற்படி நடந்திடவே
எவரும் இல்லை; ஏனோதான்?
எனக்குப் புரிந்தது காரணமே.
எல்லோருக்கும் சிறியவன்நான்.!

—நெ. அன்புச்செழியன் (1727),
பண்ருட்டி.



குயிலும், மயிலும்

குயில்:
பாடல் ஒன்று நான்பாட — உடன்
பறவைகளெல்லாம் கூடிவரும்!

மயில்:
கழுத்தைச் சாய்த்து நான்ஆட —அதைக்
காணக் காடே ஓடிவரும்!

குயில்:
உன்றன் குரலைக் கேட்டாலே — உடன்
ஓடிப் போய்விடும் எல்லாமே!

மயில்:
உன்றன் அழகைப் பார்த்தாலே—அவை
உடனே முகத்தைச் சுளித்திடுமே!

(இவற்றைக்கேட்டுக் கொண்டிருந்த ஒரு கிளி பறந்து அருகில் வந்து கூறுகிறது.)

கிளி:
இறைவனின் குழந்தைகள் நாமெல்லாம்
ஏனோ இப்படி வீண்சண்டை?
காதுக் கினிதாய்க் குயில்பாட.
கண்ணைக் கவரும் மயில் ஆட.
ஆடலும் பாடலும் சேர்ந்தாலே
ஆஹா, அற்புத விருந்தன்றோ?

—ஏன். செந்தில்குமார் (131)
கோவை—10.

நாங்கள் கண்டவை

காட்டில் உள்ள மிருகங்கள்
கரடி, சிங்கம், அனைத்துமே
நாட்டில் வந்து இருப்பதை
நாங்கள் நேரில் கண்டோமே!


சிங்கம் சிலிர்த்து நின்றது.
சிறுமான் மிரண்டு பார்த்தது.
சிறுத்தை பாயப் பார்த்தது.
சிலை எலிகள் ஓடின.


கரடி எம்மைக் கண்டதும்
கர்ணம் போட்டு நின்றது.
குரங்கார் கையை நீட்டினார்;
கோணங் கியும் காட்டினார்.

கொக்கும் அங்கே நின்றது.
குருவிக் கூட்டம் இருந்தது.
கோல மயிலும் நின்றது.
கொஞ்சும் கிளியும் இருந்தது.

இவைகளெல்லாம் இருப்பது
எந்த இடத்தில் தெரியுமா?
மிருகக் காட்சி சாலையில்!
வேறு எங்கு காண்பதோ?

—இல. கல்பனா (3659), திருச்சி—4.







கருணை விழிகள்

8

ஆர். பொன்னம்மாள்

''**கே**லியா? நிஜமாத்தான் சொல்றேன். உனக்குப் பாடங்களை நான் படிக்கச் சொல்றேன். இதோ நோட்லே தான் இருக்கே! கேள்விகளை நான் படிச்சா விடைகளை நீ சொல்லு. தப்பா இருந்தாத் திருத்தறேன். கணக்கைப் படிக்கிறேன். எப்படிப் போடணும்னு நீ சொல்லிக் கொண்டே வா. நான் போடறேன். டாக்டர் சர்டிபிகேட் வாங்கித்தந்தால் பரீட்சை எழுதலாமே! அப்புறம், நிதானமா கண் புண் ஆறி ஆபரேஷன் பண்ணிக்கலாம். இப்போ, ஹெட்மாஸ்டர் கிட்டே நிலைமையைச் சொல்லி கிளாஸ் வாத்தியார்கிட்டே ட்யூஷன் எடுத்துக்கோ. காரிலே போயி வீல் சேரிலே மாத்திக்கணும். நான் வேகமா, சரியா எழுத மாட்டேன்னு நினைச்சா, உனக்குப் பிடிச்ச ஆளைப் பரீட்சைக்கு ஏற்பாடு பண்ணிக்கோ...''

பாபு கொஞ்ச நேரம் ஏதுவும் பேசாமல், மோகன் இருந்த பக்கமே திரும்பி இருந்தான். பிறகு, ''நான் படிக்கிறதிலே உனக்கென்ன அக்கறை?'' என்றான்.

''எனக்கு வசதி இல்லே. ஒரு வருஷம் வீணாயிடுத்து. உன் கையெழுத்து, டெஸ்ட் மார்க்கு எல்லாத்தையும் பார்த்தேன். வருஷம் வீணாகிறதே என்கிற உன் மனவருத்தத்தையும் உணர்ந்தேன். செய்யக்கூடிய உதவி செய்யலாமேன்னு நினைச்சேன். அதான்!''

''உனக்குப் படிக்க முடியல்லே! என் படிப்பும் வீணாப் போனால், நீ திருப்தியல்லவா அடையணும்!''

''உன் வீழ்ச்சியிலே எனக்கென்ன லாபம்? உனக்காக உன் நோட்டைப் படிச்சேன்னாலும், உனக்காகக் கணக்குப் போட்டேன்னாலும் எனக்கும் பாடமும் கணக்கும் வரும். அடுத்த வருஷம் எட்டாவது படிச்சாக்கூட உதவியா இருக்கும்!''

''அதோ அந்தக் காலண்டர்லே அப்பா ஆபீஸ் போன் நம்பர் இருக்கு. போன் போட்டு நம்பர் கிடைச்சதும் என்கிட்டே கொடு.''

மோகன் மன நிறைவோடு எண்ணைச் சுழற்றினான்.

✻ ✻ ✻

''**வி**டையை எடுத்து எழுதினாயா? சரி, கணக்குப் பாடம் போதும். அந்தக் காம்போசிஷனை ஒப்பிக்கறேன். சரியான்னு பாரு.''

ஒப்புவித்தான் பாபு.

''சரியா?''

''சரிதான்.''

''அப்போ நீ போகலாம்!'' கை, கால்களை நெட்டி முறித்துவிட்டு நீட்டி நிமிர்ந்து படுத்து விட்டான் பாபு.

மோகன் தயக்கத்துடன், ''ஏன் இரண்டு நாளா நேரே பேச மாட்டேங்கறே? படிப்பு முடிஞ்சதும் போங்கிறியே?''

''நீயெல்லாம் பெரிய மனுஷன். நிறைய வேலை இருக்கும். இந்தக் குருட்டுப் பயல்கிட்டே சதா இருந்தா போர் அடிக்காதா?''

''ஓ, முந்தா நாள் வரல்லேன்னு கோவிச்சுக்கறியா? அப்பாவுக்கு உதவியா பலகாரக்கடைக்குப் போயிட்டேன்.

அதோடே ஆஸ்பத்திரிக்குப் போற நாளா.... எல்லோரும் ஏமாந்துடுவாங்களேன்னு...''

''ஆறுதல் சொல்லப் போனே! டாக்டர் உனக்கு வக்காலத்து வாங்கிறார். நானும் நோயாளிதான்! எனக்குப் பார்வை இருந்ததாலே தான் இழந்த கண்ணை நினைச்சு இத்தனை வேதனைப்படறேன். பிறவிக் குருடனா இருந்துட்டா எதுவுமே தெரியாது பாரு... நீ என்னைச் சந்திக்காமலே இருந்திருக்கலாம். ஆசைகாட்டி மோசம் செய்கிறது ரொம்பக் கொடூரம்...!''

''தனிமை உன்னை வாட்டும்னு எனக்குத் தெரியும் பாபு. என்னை மன்னிச்சுக்க...'' அவன் கைகளை அன்புடன் எடுத்து வருடினான் மோகன்.

வெடுக்கென்று கையை இழுத்துக் கொண்ட பாபு, ''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். உன்னாலே முழு நேரமும் என்னோட இருக்க முடியும்னா வா. இல்லே... இதுவரை நீ காட்டின அன்புக்கு நன்றி. நீ போட்டுக் கொடுத்த வழியிலே பரீட்சை எழுதிக்கிறேன்'' வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு உறுதியாகச் சொன்னான்.

மாடிப் படிகளில் யாரோ வரும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். ராமபத்ரன்!

''மதன். பாடம், கணக்கெல்லாம் முடிஞ்சுதா. கொஞ்சம் கீழே வா. அதுக்குள்ளே பாபு உடம்பு துடைச்சு டிரஸ் மாத்திக்கிட்டும். அஞ்சலை, அறையைக் கிளீன் பண்ணிடு. பாபு, கொஞ்ச நேரம் கழிச்சு மதன் வருவான்.''

பாபு எதுவும் பேசாமல் மரக்கட்டையாய்க் கிடந்தான்.

திரும்பித் திரும்பிப் பார்த்தபடி கீழே இறங்கினான் மோகன். அதற்குள் ஜானகி பாலும், பிஸ்கட்டும் கொண்டு வந்து மேஜையில் வைத்தாள்.

''எடுத்துக்கப்பா.''

மோகன் தயங்கினான்.

''மோகன், பாதிக் கிணறு தாண்டிய கதையா இருக்கு. சதா முரண்டிக்கிண்டிருந்த அவன் புத்தியைப் படிப்பிலே திருப்பி விட்டதே நீதான்! காலையிலே ஒரு மணி நேரம் கணக்கு வாத்தியார் வரார். சாயங்காலம் இரண்டு மணி நேரம் வேறே பாடங்கள் நடக்குது. அந்த மூணு மணி நேரம்தான் அவனை விட்டுப் பிரிஞ்சிருக்கணும்னு சொன்னேன். நீயும் ஒத்துக்கிட்டே. ரெண்டு நாளா பாபு சரியாச் சாப்பிடவும் இல்லே. எக்சர்சைஸுக்கும் ஒத்துக்கல்லே... இதென்னப்பா நியாயம்! உங்க பாட்டியோடே அவுட் ஹவுஸுக்கு வந்துடுன்னேன். அதுக்கும் ஒத்துக்க மாட்டேங்கறே! நீயுமா எங்களைச் சித்திரவதை பண்ணணும்?'' என்றார் ராமபத்ரன்.

''சார்'' பதறிப் போய்க் குறுக்கே பேச வந்த மோகனைத் 'தடுத்து,



என் பெயர்?

குடந்தை புகழேந்தி.

திருமண வீட்டின் வாசலிலே
தெருவின் முகப்பில் நின்றிடுவேன்.
திருமண வீட்டில் நான்இன்றித்
தெய்வச் சடங்குகள் நடந்திடுமோ?

கோயில் உற்சவ காலத்தில்
கொட்டகை வாசலில் இருந்திடுவேன்.
வாயில் இரண்டு புறங்களிலும்
வழியைக் காட்டி வரவேற்பேன்.

காயும் பூவும் சமைப்பார்கள்.
கனியும் உண்டு மகிழ்வார்கள்.
சாயும் என்றன் இலைகளுமே
சாப்பிட உதவும் பந்தியிலே.

என்றன் தண்டும் உணவாகும்.
என்றன் சருகும் இலையாகும்.
என்றன் பட்டை நாராகும்.
என்றன் பெயரே... வாழைமரம்!

''உன் தேவை எனக்குத் தெரியும். உன் உதவியை நான் சங்கோஜமில்லாமல் கேட்கலியா? கடை போடப் பீச்சுக்குப் போக வேண்டாம். சொல்றதைக் கேளப்பா. ரோஷம் உனக்கு மட்டும் சொந்தமில்லே! நானும் ரோஷக்காரன்தான்! பாசம் உன்கிட்டே கெஞ்ச வைக்குது.''

''என்ன சார், பெரிய வார்த்தையெல்லாம் பேசறீங்க? அவுட்ஹவுஸுக்கு வந்துட்டா வேலைக்காரங்க மூலமா எனக்குப் பாட்டி மட்டுமே இருக்கிற விஷயம் பாபுவுக்குத் தெரிஞ்சுடும். பொய் சொல்லி ஏமாத்தினது தெரிஞ்சால், அவன் எரிமலையாயிடுவான்! அதோடே அவனுக்குப் பிடிக்காத பையன் மோகன். அவனைப் பொறுத்த வரை நான் மதன்தான். அதனாலே தான் அவுட்ஹவுஸுக்கு வரல்லே... அவனுக்குப் பார்வை திரும்பி, அப்போ அவன் என்னை ஏத்துக்கிட்டா, நிச்சயம் நாங்க இங்கே வந்துடறோம் சார்... நீங்க எல்லா உதவியும் பண்ணினாலும், சாயங்காலம் கொஞ்ச நேரம் என் நண்பர்களைச் சந்திக்கவும், வியாபாரத்தைக் கவனிக்கவும் அனுமதிக்கணும் சார். அதிலே ஒரு திருப்தி இருக்கு... பகல் பூரா நான் பாபுவோடேயே இருக்கேன்.''

''கூச்சப்படாமல் சகஜமாச் சாப்பிட மாட்டேங்கறான்'' — ஜானகி குற்றப் பத்திரிகை படித்தாள்.

''இனிமேல் அப்படி இருக்க மாட்டான்... அஞ்சாலே வந்துட்டா... நீ மேலே போ...'' ராமபத்ரன் ஆபீஸுக்குக் கிளம்ப, மோகன் மாடி ஏறினான்.

''எங்கப்பா வேப்பிலே அடிச்சாராக்கும்... என்ன முடிவு பண்ணினே.. ரேட்டைக் கூட்டித் தந்தாரா...?'' பாபு கடுரமாகக் கேட்ட முதல் கேள்வியே இதுதான்.

''பாபு, ஒரு காலத்திலே நிச்சயம் நீ என் மனசைப் புரிஞ்சுப்பே. நீ கேட்டதைத்தான் அவரும் சொன்னார். காலையிலே ஒன்பது மணிக்கு வந்துடறேன். சாயங்காலம் அஞ்சு மணிக்குப் போறேன். சரிதானே!''

''நோ, ட்யூஷன் வாத்தியார் ஏழு மணிக்குப் போறார். அப்புறம் ஒன்பது மணிவரை போரடிக்குது. ஏன் ராத்திரி இங்கேயே படுத்துக்கோ. அதிலே உனக்கென்ன ஆட்சேபணை? உங்க வீட்டை விட வசதியா கட்டில், மெத்தை, ஃபேன் எல்லாம் தரச் சொல்றேன்.''



எப்படி?

''எப்படி அடி பட்டது?''

''1 2 3 4 5 6 7 8 9 10 என்று மாடிப்படி ஏறி, 9, 7, 3 என்று படி இறங்கியதால்...'' -சுதர்ஸன்

''பாபு, என்னை மன்னிச்சுடு. ராத்திரி நீ தூங்கற வரை உங்கூட இருக்கேன். அப்புறம் நான் எங்க வீட்டுக்குப் போயாகணும். அதை மட்டும் மறுக்காதே! கட்டிலும், மெத்தையும், ஃபேன் காத்துமா பெரிசு... எங்கம்மா கூட கதையளந்துண்டு அவ மடியிலே தலை வைச்சுத் தூங்கற சுகம்தான் பெரிசு!''

''எனக்கும் அம்மா இருக்காங்க. தாயன்பைப் பத்தி நானும் நிறையப் படிச்சிருக்கேன். ஆனால், எங்கம்மாவுக்கு மைதிலி மேலேதான் ஆசை. அம்மாவும் அப்பாவும் அவளைத்தான் கொஞ்சுவாங்க. ஏன்னு, அவள் என்னைவிட சிகப்பா, அழகா இருக்கா. ஏதாவது சண்டை போட்டாக்கூட ''நீ பெரியவன் இல்லையா..? விட்டுக் கொடு''ன்னு அவளுக்குத்தான் பரிஞ்சு பேசுவாங்க...''

பாபு மனத்தில் ஓடும் எண்ணங்களின் கோவை மோகனுக்குத் தெளிவாகப் புரிந்தது. ''நீ நினைக்கறது தப்பு. வலது காலுக்குத் தினம் எண்ணெய் தடவுறோம். நீட்டி மடக்கிப் பயிற்சி கொடுக்கிறோம். அதனாலே இடது கால் மேலே அக்கறை இல்லேங்கறதா? அதோட இடது காலைத்தானே அதிகம் ஊனி நிற்கிறே... வலது காலைப் பொத்திப் பொத்தி வச்சுக்கிறோம்... கண்ணுக்குப் புண் ஆற மருந்து போட்டுக் கண் வரணுமேன்னு ஆவலா கண்ணைப் பத்தியே பேசறோம். அத

ணுலே வாயோ, கைகளோ முக்கியமில்லேன்னு அர்த்தமா? ஒரு மனிதனுக்கு எல்லா உறுப்புக்களும் எப்படி முக்கியமானவையோ அப்படித்தான் பெத்தவங்களுக்கு எல்லாக் குழந்தைகளும்... நாமளா நினைச்சுக்கிறது — அவ உசத்தி. நம்ம மட்டம்னு...! மைதிலியோ சின்னவ. அதிலேயும் பெண் குழந்தை. கொஞ்சம் கவனம் ஜாஸ்தியா இருந்திருக்கும். இப்போ உனக்கு அடிபடவும் பம்பாய் ஓடி வரல்லியா? உன் ரகளைகளைப் பொறுக்கல்லியா? உனக்காகச் செலவு செய்யல்லியா? நல்லா யோசிச்சுப் பாரு. அம்மா எப்பவும் என் பாபுவுக்குக் கண்ணைக் கொடுன்னு பூஜை அறையிலே அழுதுக்கிட்டே இருக்காங்க... அது எங்கே உனக்குத் தெரியப் போகுது? வெளியிலே ஆடம்பரமா காட்டிண்டாத்தான் அன்பா? இல்லே, ரோட்டிலே போறவங்க உன்னை இப்படி அக்கறையாய்க் காப்பாத்துவாங்களா? அப்பா, அம்மா இல்லாத வாழ்க்கையை ஒரு நிமிஷம் கற்பனை பண்ணிப் பாரு... அவ்வளவு ஏன்...! நான் அனாதைப் பள்ளிக்கூட ஆண்டு விழாவுக்குப் போயிருக்கேன்! கை, கால் எல்லாம் முழுசா இருந்தும், பெத்தவங்க இல்லாத ஏக்கம் அவங்க பார்வையிலே பேச்சிலே தெரியுது. உனக்கு வசதியையும் கொடுத்து அருமையான, அன்பான பெத்தவங்களையும் கொடுத்திருக்காங்க... அதுக்காகக் கடவுளுக்கு நீ நன்றி செலுத்தணும். நம்ம அம்மா நம்மைப் பெத்து ரோட்டிலே அனாதையா விடலே... யாராவது ஒரு சொல் சொன்னால் இவன் என் பிள்ளைன்னு பரிஞ்சுக்கிட்டு வர அப்பா இருக்காங்க... திரும்பி அவங்க கிட்டே அன்பா இருக்கறதிலே கஞ்சத்தனமா? இதுக்காக நீ என்மேலே கோபப்பட்டாலும் சரி, வருத்தப்பட்டாலும் சரி... நீ நடந்துக்கிறது சரியில்லே...''



அங்கே சற்றுநேரம் நிசப்தம் நிலவி இருந்தது. அமைதியைக் கலைத்தவன் பாபுதான்.

''அத்தைப் பாட்டி மாதிரி இவ்வளவு பேசறியே... இதெல்லாம் எங்கே படிச்சே?''

''முந்தா நாள் வரல்லேன்னு கோவிச்சுக்கண்டியே! வாரியார் சுவாமிகள் பிரசங்கம்னு பாட்டிக்கு ரொம்ப இஷ்டம். கண்ணு நல்லாத் தெரிஞ்சாலும், காது வீங்கி இருக்கா... ரோட்டைக் கிராஸ் பண்றதுக்கு நேரமாகும். அதுக்காகக் கூடப் போவேன். பாட்டி மட்டுமா சொற்பொழிவைக் கேட்பா... நானுந்தான். அன்னிக்கி அவர் பத்து விரல்லே எது உசத்தின்னார். ஆளுக்கொரு விரலைச் சொன்னாங்க... கண்டு விரலை யாரும் சொல்லலே... கண்டு விரல்லே நகச்சுத்து வந்தா எலுமிச்சம்பழம் வைக்கமாட்டீங்களான்னார். அது வலிக்காதான்னார். யாரும் பேசலே... அந்த விரலை உபயோகிக்காம, வேலைகளைச் செஞ்சு பாருங்கன்னார். செஞ்சு பார்த்தேன். ரொம்பக் கஷ்டமா இருந்தது. இப்படிப் பலவும் கேள்வி ஞானம்தான்! வாத்தியார் ஒரு கணக்கைச் சொல்லிக் கொடுத்தால் அந்த அத்தியாயத்தில எல்லாக் கணக்கையும் நாம போடறதில்லையா? அப்படி அதிலேயிருந்து பிறந்த யோசனைதான் எல்லாம்...''

''உனக்குப் பாட்டி இருக்காங்களா?''

மோகன் நாக்கைக் கடித்துக் கொண்டே 'உம்' என்றான்.

''அன்னைக்கு மாதிரி கொஞ்சநேரம் சொல் விளையாட்டு ஆடலாமா?''

கொஞ்ச நேரம் சொல் விளையாட்டு, க்விஸ் எல்லாம் நடந்தது. அப்புறம் ஹாலில் கொஞ்ச நேரம் காதுக்குப் பயிற்சி.

''போதும் மதன்... ஏதாவது கதை படியேன்''. ஹாஸ்யக் கதைக் கொத்து ஒன்றை எடுத்துப் படித்தான் மோகன்.

மோகன் எந்திரமாய்க் கதை படிக்க மாட்டான். ரேடியோ நாடகம் போல் படிப்பான். தானும் ரசித்துப் பிறரும் ரசிக்கும்படி வாசிப்பான்.

அறிவுக் கதைகளாயிருந்தால், இரண்டு பேருமாய், 'அப்படி நடந்திருக்கலாம்; இப்படி முடித்திருக்கலாம்' என்று விவாதிப்பார்கள். அறிவுச் சர்ச்சை, படிப்பு என்று வந்து விட்டால் மோகன் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் காரசாரமாய்ச் சர்ச்சை பண்ணுவது பாபுவுக்குப் பிடிக்கும்.

அப்போது படித்த நகைச் சுவைக் கதை பாபுவை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது. மோகனும் படிப்பதை நிறுத்திவிட்டுச் சிரித்தான்.

மகனைப் பார்க்க மாடியேறி வந்த ஜானகி அப்படியே மெய்ம்மறந்து நின்றாள். இதற்கு முன்பும் பாபுவின் அறையில் பாபு தன் நண்பர்களோடு அட்டகாசமாய்ச் சிரிப்பதைக் கேட்டிருக்கிறாள். அதெல்லாம் யாரையாவது நையாண்டி செய்து சிரிக்கும் அவலச் சிரிப்புகள்! பிறர் உடை, நடை, உணவு சாப்பிடும் முறை இப்படி மட்டமான உணர்வுகளில் பிறக்கும் சிரிப்பு! இதுவோ யாரையும் பாதிக்காத நகைப்பு!

''அம்மா நிக்கறாங்க பாபு.''

''என்னம்மா?'' சிரிப்பை நிறுத்திக் கொண்டு பாபு விசாரித்தான்.

''உனக்குப் பிடிக்குமேன்னு வெஜிடபிள் பிரியாணி பண்ணினேன். தொட்டுக்க பூண்டு சட்னி, வெங்காயப் பச்சடி... இரண்டு பேருக்கும் எடுத்துண்டு வரட்டுமா?'' அன்புடன் கேட்டாள் ஜானகி.

''வேண்டாம்மா... மெதுவா நானே வரேன். மதன் என்னைப் பிடிச்சுக்கோ.'' எழுந்து நின்றான் பாபு.

'பாபுவா! பாபுவா இத்தனை பதமாகப் பேசுகிறான்! அவன் வாயில் அன்பான வார்த்தைகளும் வருமா?' ஒருகணம் மெய்மறந்து நின்ற ஜானகி, மறுநிமிஷம் பிள்ளையின் இன்னொரு பக்கத்தில் போய்ப் பிடித்துக் கொண்டாள்.

பாபுவின் மனசுக்குள் ஒரு குளிர்ச்சி. தாயின் கைகளைத் தானும் பிடித்துக் கொண்டான்.

* * *

''அம்மா, நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்களுக்கு எத்தனை வேலை இருந்தாலும் நேரடிப் பார்வையா நீங்களே அவனுக்கு எல்



லாம் பண்ணுங்க... அவன் கொஞ்சங் கொஞ்சமா மாறினதா சார் சொன்ஞர். ஆனலும், 'மைதிலிதான் உசத்தி. அவளேத்தான் கொஞ்சறீங்க'ன்னு அவனுக்குக் கோபம்... சார் கிட்டேயும் சொல்லுங்க...''

அஞ்சலை வந்தாள். மோகனைப் பார்த்து:

''தம்பி, நீங்க வந்துட்டீங்களா? கார் வந்த சத்தம் கேட்டதேன்னு சின்ன ஐயா ரெண்டு வாட்டி கேட்டுட்டாருங்க...''

''இதோ மாடிக்குப் போகிறேன்.'' மோகன் விரைந்தான்.

''அப்பவே கார் வந்ததே... கீழே என்ன பண்ணினே?''

''கொஞ்சம் பூப்பறிச்சேன். அம்மா கிட்டே பேசிண்டிருந்தேன்...''

''பூவை வேலைக்காரன் பறிக்க மாட்டானு? எனக்கு ஒரே பசி... எவ்வளவு நேரம் காத்திண்டிருக்கிறது...?''

''இன்னும் நீ சாப்பிடலையா? கீழே போவோமா? பெல்லை அழுக்கட்டுமா...?''

''காலைத் தூக்கி வைக்க ரொம்பக் கஷ்டப்படறுனே... இங்கேயே கொண்டு வந்துட்டேன் டிபனை...'' என்று கூறியபடி ஜானகி மாடிக்கு வந்துவிட்டாள்.

''ஏம்மா, அவனுக்கு முன்னலேயே டிபன் கொடுத்திருக்கக் கூடாதா?''

''கொடுத்திருப்பேன். ஆனல், பாபு தனியாச் சாப்பிடுவானு? நீ வரட்டும் பான், தம்பி பாபு, உன் அப்பாகூட, 'டைனிங் டேபிளே மேலே போடச் சொல்லு... நாமளும் பாபுவோட சேர்ந்தே, அவனே அலைக்காமே சாப்பிடலாம்'னு சொன்னர். ஹாலிலே போடச் சொல்லட்டுமா?'' அன்புடன் ஜானகி கேட்கவும் மெய்மறந்து போனுன் பாபு.

நிஜமாகவா! அவனுக்கு அந்த வீட்டில் அத்தனை முக்கியத்துவமா?... மதன் சொன்னது போல நான்தான் எல்லோரையும் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறேனு? அம்மாவுக்கு அவன் மேலே இவ்வளவு பிரியமா!

''சரியம்மா.''

ஜானகி கீழே போகவும், பாபு, ''அம்மாகிட்டே என்ன பேசிக்கிட்டிருந்தே?'' என்ருன் அவசரமாக.

''உன் அம்மா 'ஏன் மதன், நீ சீக்கிரம் வரக் கூடாதா? பாபு எத்தனை நேரம் பசியைப் பொறுத்துக்கிட்டிருப்பான்?' அப்படின்னு சொன்னுங்க. முந்தாநாள் போண்டாவை வேண்டாம்னு சொல்லிட்டியாமே! அத்தனையும் வேலைக்காரங்களுக்குத்தான் போச்சாம்... அதான் கட்லெட் பண்ணினு சாப்பிடுவியான்னு மெதுவா விசாரிக்கச் சொன்னுங்க. ஐயா மூட் எப்படி?''

பாபு பதிலே சொல்லவில்லை.

'நான் போண்டா சாப்பிடாததால் யாருமே சாப்பிடவில்லையா? நான்தான் முட்டாள்தனமாய் எல்லோரையும் நோகடித்துக் கொண்டிருக்கிறேனு? சே, அவசர மடையன் நான்!' என்று மனத்திற்குள்ளே சொல்லிக் கொண்டான் பாபு.

''என்ன பாபு... கேட்டதுக்குப் பதில் சொல்லாமே என்ன சிந்தனை?''


''முந்தாநாள் ஏன் போண்டாவை வேண்டாம்னு சொன்னேன் தெரியுமா?''

''ஏன்?''

''இங்கிலீஷ் வாத்தியார்தான். உச்சரிப்பு சரியாயில்லேன்னு திருத்தினர். எத்தனை தரம் சொல்லிக் கொடுத்தாலும், அவர் மாதிரி எனக்குச் சொல்ல வரல்லே. நம்மகிட்டே சம்பளம் வாங்கறவர் நம்மைக் கோளாறு சொல்றதான்னு எரிச்சல் வந்தது. பழைய நாளா இருந்தா, ட்யூஷன் வேண்டாம்னு அடம் பிடிச்சு வெற்றியடைஞ்சிருப்பேன். உன் குரலுக்காகச் சகிச்சுக்கிட்டேன். 'குருவே தெய்வம். அவருக்கா சம்பாதிச்சுப் போடப் போறே'ன்னு ஒரு மணி நேரம் லெக்சர் அடிப்பே. 'இனி உன்னேட பேச மாட்டேன், வர மாட்டே'ன்னு நீ பயமுறுத்துவே. சரியா உச்சரிக்கத் தெரியாதவனுக்குப் போண்டா ஒரு கேடான்னு என்னையே நான் தண்டிச்சுக்கிட்டேன். இந்தச் சனியனுக்காகத்தான் கான்வெண்ட் படிப்புக்கு புல் ஸ்டாப் வைச்சேன்.'' எரிச்சலும், வேகமுமாய் மொழிந்தான் பாபு.

''கான்வெண்ட் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தாயா? அது என்ன கதை?'' என்று ஆவலாகக் கேட்டான் மோகன்.

(தொடரும்)




உலகப்புகழ் பெற்ற சிறுவர் கதை-18

அதிசய உலகில் ஆலிஸ்

மூலம்: லூயி காரல்

தமிழ்ச் சுருக்கம்:
எச். கிருஷ்ணமூர்த்தி



கோடைக்காலம். ஆலிசும், அவளுடைய அக்காவும் தோட்டத்தில் இளைப்பாறிக் கொண்டிருந்தனர். செல்லப் பூனைக் குட்டி 'தினா' அருகில் விளையாடிக் கொண்டிருந்தது. ஆலிஸ் ஒரு தாழ்ந்த மரக் கிளையில் உட்கார்ந்துகொண்டு பூனைக் குட்டிக்காக ஒரு மாலை தொடுத்துக் கொண்டிருந்தாள். அக்கா தரையில் உட்கார்ந்து கொண்டு, ஒரு கதையை உரக்கப் படித்துக் கொண்டிருந்தாள். புத்தகத்தில் படங்கள் இல்லை. கதையும் கவர்ச்சியாக இல்லை. ஆலிசின் மனம் கதையில் செல்லவில்லை. உறக்கம் அவளுடைய இமைகளை அழுத்தியது.

திடீரென ஒரு முயல் அவளைத் தாண்டி ஓடியது. வெள்ளை நிறம். சிவப்புக் கண்கள். சட்டைப் பையில் ஒரு கடிகாரம். முயல் கடிகாரத்தை வெளியே எடுத்துப் பார்த்தது. ''ஐயையோ! நேரமாகி விட்டதே!'' என்று பதறிக் கொண்டே அது தலை தெறிக்க ஓடியது. கடிகாரம் பார்க்கும் முயலை ஆலிஸ் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. 'அதற்கென்ன இவ்வளவு அவசரம்?' என்று அறிய விரும்பினாள். ஆகவே, முயலைத் துரத்திக் கொண்டு அவளும் ஓடினாள்.

முயல் ஒரு பெரிய வளைக்குள் குதித்தது. ஆலிசும் தொடர்ந்து குதித்தாள். அது ஆழமான பள்ளம். காற்று வீசியதால் அவளுடைய சட்டை ஒரு பாராசூட்டைப் போல விரிந்தது. ஆலிஸ் மெதுவாகக் கீழே கீழே, கீழே விழுந்து கொண்டே இருந்தாள். பள்ளத்தின்பாதை

நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவரில் பல படங்களும், விளக்குகளும், மாட்டப்பட்டிருந்தன. படங்கள் தலைகீழாகத் தொங்கின. தான் ஒரு விநோத உலகத்திற்குள் புகுவதை ஆலிஸ் உணர்ந்தாள். கடைசியாக அவள் சருகுகள் நிறைந்த தரையில் விழுந்தாள்.

நல்லவேளை; ஆலிசுக்கு அடிபட வில்லை. எழுந்து நின்றாள். எதிரே ஒரு சுரங்கப் பாதை தெரிந்தது. வெள்ளை முயல் அதில் ஓடிக் கொண்டிருந்தது. அவளும் தொடர்ந்தாள். பாதை ஒரு மண்டபத்தில் முடிந்தது.

மண்டபத்தைச் சுற்றிலும் பல கதவுகள் இருந்தன. அவை பூட்டப் பட்டிருந்தன. முயல் மாயமாய் மறைந்திருந்தது. மண்டபத்தின் மூலையில் ஒரு கண்ணாடி மேசை. அதன் மேல் ஒரு தங்கச் சாவி. அருகில் ஒரு திரை. ஆலிஸ் திரையை விலக்கினாள். பின்னால் ஒரு சின்னக் கதவு. தங்கச் சாவியை எடுத்து அந்தச் சின்னக் கதவைத் திறந்தாள்.

வெளியே அழகான பூந்தோட்டம் தெரிந்தது. வாசல் சின்னதாக இருந்ததால் அவளால் நுழைய முடியவில்லை. வருத்தத்தோடு கதவைச் சாத்திச் சாவியை மேசை மேல் வைத்தாள். திடீரென அங்கே ஒரு பாட்டில் தோன்றியது. அதன் மேல் ஒரு சீட்டு. 'என்னை அருந்து' என்ற வார்த்தைகள் அதில் காணப்பட்டன. ஆலிஸ் அருந்தினாள். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

ஆலிசின் உயரம் குறைந்து கொண்டே போயிற்று! அவள் ஒரு மரப்பாச்சியின் அளவில் சின்னப் பெண்ணாக மாறினாள். மறுபடியும் தங்கச் சாவியை எடுக்கப்போனாள் மேசை உயரமாக இருந்தது. அவள் சுமார் பத்து அங்குல உயரம்தான் இருந்தாள். ஆகையால் சாவி எட்ட வில்லை. ஏமாற்றமாகப் போயிற்று.

மேசையின் கீழே ஒரு கண்ணாடி ஜாடி தோன்றியது. அதன்மேல் 'என்னைச் சாப்பிடு' என்ற சீட்டு இருந்தது. ஆலிஸ் அந்த ஜாடியைத் திறந்தாள். உள்ளே ஒரு கேக் இருந்தது. சாப்பிட்டாள். உடனே அவள் 'கிடு கிடு'வென வளர்ந்தாள். பத்து அங்குலத்திலிருந்து பத்து அடி உயரம் ஆனாள். தலை கூரையைத் தொட்டது. மறுபடியும் அவளால் அந்தச் சின்ன வாசலுக்குள் நுழைய முடியவில்லை. அழத் தொடங்கினாள். அவளுடைய கண்ணீர் அருவி போலக் கொட்டிக் குளம் போலத் தேங்கி, ஆறு போல ஓடியது.

"இளவரசி காத்துக் கொண்டிருப்பாள். சீக்கிரம் போக வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே வெள்ளை முயல் மண்டபத்தில் தோன்றியது. ஆலிசின் பெரிய உருவத்தைப் பார்த்ததும் அது பயந்து போயிற்று. தான் வைத்திருந்த கையுறைகளையும், விசிறியையும் அங்கேயே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தது. ஆலிஸ் அந்தக் கையுறைகளை அணிந்தாள். விசிறியால் விசிறிக் கொண்டாள். "என் உருவம் சின்னதாக இருந்தால், நான் அந்த அழகியதோட்டத்திற்குப்போகலாமே" என்று எண்ணினாள். உடனே அவள் குறுகி, மிகச் சிறியவளாக மாறினாள்.

ஆலிஸ் தோட்டக் கதவை நோக்கி ஓடினாள். வழியில் தேங்கியிருந்த கண்ணீர்க் குளத்தில் விழுந்தாள். கையுறைகளும், விசிறியும் நீரில்



ஆசிரியர்: மூன்று ஆப்பிளை ஆறு பேருக்கு எப்படிப் பங்கிட்டுக் கொடுப்பாய்?"

மாணவன்: "ஜூஸ் செய்து கொடுப்பேன் சார்!"

—ஆர். எஸ். சுப்பிரமணியன்



தொலைந்து போயின. ஆலிஸ் நீந்தினாள். மண்டபத்தில் இருந்த பல பொருள்கள் நீரில் மிதந்து சென்றன. மேலும் எலி, கிளி, பருந்து, புறா, வாத்து ஆகிய பல பிராணிகளும் பறவைகளும் அந்த நீரில் விழுந்திருந்தன. அவை கரையை நோக்கி நீந்தின. எல்லோரும் கரை சேர்ந்தனர். உடம்பிலிருந்த ஈரம் காயும் வரை ஆலிஸும், மற்றப் பிராணிகளும் ஓர் ஓட்டப்பந்தயம் நடத்தி விளையாடினர். பிறகு ஆளுக்கு ஒரு கதை சொல்லினர். ஆலிஸ் தன் பூனைக் குட்டியைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள். எலியும், மற்றப் பிராணிகளும் பயத்தினால் ஓடி மறைந்தன.

வெள்ளை முயல் மறுபடியும் தோன்றியது. கையுறைகளையும், விசிறியையும் தேடிக் கொண்டு வந்தது. சின்ன உருவிலிருந்த ஆலிஸைப் பார்த்து அவளைத் தன் பணிப்பெண் மேரி என எண்ணியது. "மேரி! வீட்டுக்குப் போய்க் கையுறைகளையும், விசிறியையும் எடுத்து வா!" என உத்தரவிட்டது.

"நான் உன்னுடைய வேலைக்காரியில்லை. ஆனாலும் உனக்கு உதவி செய்வேன்!" என்று சொல்லிக்கொண்டே ஆலிஸ் முயலின் வீட்டை நோக்கி ஓடினாள்.

அது அழகான சிறிய வீடு. வாசலில் 'வெ. முயல்' என்ற பெயர்ப் பலகை இருந்தது. ஆலிஸ் கதவைத் திறந்தாள். படிகளில் ஏறி மாடிக்குச் சென்றாள். அங்கு கையுறைகளும், விசிறியும் இருந்தன. எடுத்துக் கொண்டாள். அருகில் ஒரு பாட்டில் நிறைய ஒரு திரவம் இருந்தது. அதன் மேல் ஒன்றும் எழுதப் படவில்லை. "இந்தச் சின்ன உருவம் எனக்குப் பிடிக்கவில்லை. நான் பெரியவளாக வளர்ந்தால் சௌகரியமாக இருக்குமே!" என்று சொல்லிக் கொண்டே அந்தத் திரவத்தைக் குடித்தாள்.

எண்ணியபடியே ஆலிஸ் மடமட வென வளர்ந்து ஒரு ராட்சச உருவத்தை அடைந்தாள். கைகள் ஜன்னல் வழியாக நீண்டு ஆகாயத்தில் தொங்கின. கால்கள் கதவுகளின் வழியாக நீளமாக வளர்ந்தன. உடம்பு பெருத்தது. கொஞ்சங்கூட அசைக்க முடியவில்லை. அசைத்தால், கண்ணாடிகள் படபடவென உடைந்து விழுந்தன. ஆலிசுக்கு உயிரே போவது போல இருந்தது.

கையுறைகளுக்காக வெள்ளை முயல் தன் வீட்டுக்கு வந்தது. வீட்டிற்குக் கையும், காலும் முளைத்திருந்தது! புகை போக்கி வழியாக ஒரு தலை நீண்டது! வீடே ஆடியது! முயல் பயந்து போய், ''பூதம்! பூதம்! என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!'' என்று கதறிக்கொண்டே வெளியே ஓடியது.

முயலின் கூச்சலைக் கேட்டு அருகிலிருந்த பிராணிகள் ஓடி வந்தன. அந்த ராட்சச உருவத்தை வீட்டிலிருந்து எப்படி வெளியேற்றுவது என அவை ஒன்று கூடி ஆலோசித்தன. புகை போக்கியின் வழியாக உள்ளே இறங்கி, பில் என்ற பல்லி அந்த உருவத்தை வெளியே இழுத்து வர வேண்டும் என்று அவை தீர்மானித்தன. பில் ஏணி வைத்து ஏற முயன்றது. ஆலிஸ் ஓர் உதை கொடுத்தாள். பில் குட்டிக் கரணம் போட்டுக் கீழே விழுந்தது. உடம்பு முழுவதும் காயம். பாவம்! பில்லினால் எழுந்திருக்க முடியவில்லை.

''வீட்டுக்கு நெருப்பு வைக்கலாம்'' என்று ஒரு பிராணி யோசனை கூறியது. ''பூனையைக் கூப்பிடுவேன்'' என்று ஆலிஸ் பயமுறுத்தினாள். அவை அமைதியாயின. சிறிது நேரங் கழித்து அவை ஆலிஸ் மீது கற்களை எறிந்தன. உள்ளே விழுந்ததும் அந்தக் கற்கள் கேக்குகளாக மாறின. ஆலிசுக்கு ஒரு யோசனை தோன்றியது. ''நான் இந்தக் கேக்கைச் சாப்பிட்டால் ஒருவேளை சின்னவளாக ஆகலாம்'' என்று நினைத்தாள்.

அவ்வாறே சாப்பிட்டாள். ஆலிசின் உருவம் சிறுத்தது. அவள் சந்தோஷமாக வாசல் வழியாக வெளியே ஓடினாள். பிராணிகள் துரத்தின. அருகில் இருந்த ஒரு காட்டுக்குள் ஓடி அவள் தப்பினாள்.

உருவம் மிகச் சிறியதாக இருந்ததால், அவளால் மரங்களைப் பார்க்க முடியவில்லை. பூச்செடிகள் அவளுடைய தலைக்கு மேல் ஓங்கி வளர்ந்திருந்தன! எத்தனை வண்ணங்கள்! எத்தனை வடிவங்கள்! மலர்களெல்லாம் காற்றில் அசைந்து ஆடின. ஆலிசைக் கண்டதும் அவை ஒன்று சேர்ந்து இனிய குரலில் பாடின. அந்த இசை ஆலிசுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவளும் கூடவே பாடினாள்.

பாட்டு முடிந்ததும், மலர்கள் ஆலிசைப் பார்த்துச் சரமாரியாகக் கேள்விகள் கேட்டன. ஆலிசின் சட்டையைப் பிடித்து இழுத்து, ''இது என்ன? புது மாதிரி இதழாக இருக்கிறதே?'' என்று ரோஜா மலர் கேட்டது. முரட்டுத்தனமாக ஆலிஸை முகர்ந்து பார்த்து, ''உன்னிடம் வாசனையே இல்லையே?'' என்றது ஒரு டெய்சிப் பூ. ''நீ எந்தத் தோட்டத்திலிருந்து வருகிறாய்?'' என்று கேட்டது ஒரு லில்லி.

''நான் மலர் இல்லை; நான் ஒரு சிறுமி'', என்றாள் ஆலிஸ்.


''மலராக இல்லாவிட்டால், நீ பயனற்ற ஒரு களைச் செடியாகத்தான் இருக்க வேண்டும்'', என்று அவை கூறின.

''உன் பெயரை நாங்கள் கேட்டதே இல்லை. எங்களோடு இங்கே வேரூன்றி நிற்காதே. ஓடு!' ஓடு!'' என்று எல்லா மலர்களுமாக அவளை விரட்டின. ''நான் மட்டும் என்னுடைய பழைய உருவில் இருந்தால் உங்களுக்கெல்லாம் சரியான பாடம் கற்பித்திருப்பேன்!'' என்று சொல்லிக்கொண்டே ஆலிஸ் நகர்ந்தாள்.

அந்தத் தோட்டத்தில் ஒரு பெரிய காளான் முளைத்திருந்தது. ஆலிஸ் அதன் அருகில் சென்றாள். ''நான் மறுபடியும் பழைய உருவத்தை அடைய வேண்டும்! அதற்கு ஏதாவது சாப்பிடவேண்டுமே!'' என்று சொல்லிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தாள். காளானின் மீது பச்சை நிறத்தில் ஒரு கம்பளிப் பூச்சி படுத்திருந்தது. ஒரு கையைச் சோம்பேறித்தனமாகக் கன்னத்தில் வைத்துக் கொண்டு, மற்ற இரண்டு கரங்களாலும் ஹுக்காவின் குழலைப் பற்றிப் புகை பிடித்துக் கொண்டிருந்தது.

ஆலிசும், கம்பளிப் பூச்சியும் ஒருவரை ஒருவர் மௌனமாக உற்று நோக்கினர். ''யார் நீ?'' என்று ஒரு வித மயக்கத்தோடு கம்பளிப் பூச்சி கேட்டது. ''இன்று காலை முதல் அநேக தடவை உரு மாறி விட்டேன்!'' என்றாள் ஆலிஸ்.

''விவரமாகச் சொல்?''



''இப்போது நான் யாரென்று எனக்கே தெரியவில்லை! நீயும் ஒருநாள் வண்ணத்துப் பூச்சியாக மாறுவாய். அப்போது உனக்கும் அது வினோதமாக இருக்கும் இல்லையா?''

''இருக்கவே இருக்காது!''

''உன்னுடைய உணர்ச்சிகள் வேறாக இருக்கலாம். ஆனால், எனக்கு இப்போது வினோதமாகத்தான் இருக்கிறது!''

''நீ யாரென்று சொல்லவே இல்லையே!... சரி, போனால் போகிறது. 'அப்பா, உனக்கு மூப்பு வந்தது' என்ற பாட்டைப் பாடு; பார்க்கலாம்'' என்று கேட்டது கம்பளிப் பூச்சி. ஆலிஸ் பாடினாள். பாட்டு சரியில்லை என்று வாதாடியது கம்பளிப் பூச்சி. ஆலிசுக்குக் கோபமாக வந்தது. அங்கிருந்து போகத் தொடங்கினாள்.

''கோபித்துக்கொண்டு போகாதே. உனக்கு என்ன கஷ்டம் என்று சொன்னால் உதவி செய்வேன்'', என்றது கம்பளிப்பூச்சி.

''எனக்குக் கொஞ்சம் உயரமாக வளர்ந்தால் தேவலை என்றாள் ஆலிஸ்.

''இந்தக் காளானின் ஒரு பக்கத்தைச் சாப்பிட்டால் உயரலாம்; மறுபக்கத்தைச் சாப்பிட்டால் குறுகலாம்,'' என்று கூறிவிட்டு அந்தக் கம்பளிப்பூச்சி ஒரு குட்டிக் கரணம் போட்டது. உடனே அது ஓர் அழகிய வண்ணத்துப் பூச்சியாக மாறி உயரப் பறந்தது.

ஆலிஸ் காளானிலிருந்து சில துண்டுகளை உடைத்து எடுத்தாள். இடது கையிலிருந்த துண்டைக் கொஞ்சம் உண்டதும் அவள் உயர்ந்தாள். வலது கைத்துண்டைச் சாப்பிட்டதும் அவள் குறுகினாள். அந்தக் கண்டுபிடிப்பு ஆலிசுக்கு ஆனந்தமாக இருந்தது.

ஆலீஸ் பழையபடி சாதாரண உயரத்தை அடைந்ததும் கொஞ்சதூரம் நடந்தாள். மரங்களடர்ந்த ஒரு மாளிகையைக் கண்டாள். அது இளவரசியின் இருப்பிடம். மீனைப் போன்ற ஒரு பணியாளன் ராணியிடமிருந்து இளவரசிக்கு ஒரு கடிதம் கொண்டு வந்திருந்தான். அவன் கதவைத் தட்டி அழைத்தான். உள்ளேயிருந்து தவளையைப் போன்ற மற்றொரு சேவகன் அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டான். இருவரும் வணங்கி விடை பெற்றனர். ராணி இளவரசியைக் கால்ஃப் பந்தாட்டத்திற்கு அழைத்திருந்தாள்.

ஆலிஸ் மாளிகையில் நுழைந்தாள். இளவரசி கையில் ஒரு குழந்தை இருந்தது. அடுப்பில் சூப் கொதித்துக்

கொண்டிருந்தது. அறைகள் புகை மயம். ஒரே குழப்பம். சமையல்காரி பாத்திரங்களை எறிந்து கொண்டிருந்தாள். மிளகுப்பொடி கொட்டிக் கிடந்தது. அந்த நெடியில் எல்லோரும் தும்மிக் கொண்டிருந்தனர். அருகிலிருந்த பூனை மட்டும் தும்மவில்லை. ஒரு காதிலிருந்து இன்னொரு காது வரைக்கும் அது வாயைப் பிளந்து, பல்லைக் காட்டிக் கொண்டிருந்தது.

''பூனை ஏன் அப்படிச் சிரிக்கிறது?''

ஆலிஸ் இளவரசியைப் பார்த்துக் கேட்டாள்.

''அது ஒரு இளிச்சவாய்ப் பூனை. அப்படித்தான் சிரிக்கும்'', என்று சொல்லிவிட்டு, ''பன்றியைப் போல் சும்மா என்னை நச்சரிக்காதே!'' என்று குழந்தையை அதட்டினாள். குழந்தை அழுது கொண்டே இருந்தது. ஆலிஸ் குழந்தைக்காகப் பரிதாபப் பட்டாள். இளவரசி குழந்தையை ஆலிசின் கையில் கொடுத்துவிட்டு, ''ராணி அழைத்திருக்கிறாள். போகிறேன்'', என்று சொல்லிப் புறப்பட்டாள்.

ஆலிஸ் குழந்தையை வெளியே எடுத்துப் போய்ச் சமாதானம் செய்தாள். அது கை, கால்களை உதைத்துக் கொண்டு வீறிட்டது. குரல் வினோதமாக ஒலித்தது. கண்கள் சின்னஞ் சிறிதாக மாறின. ஆலிஸ் அதை உற்றுப் பார்த்தாள். அது ஒரு பன்றிக் குட்டியாகவே மாறியிருந்தது. அதைக் கீழே விட்டாள். அது துள்ளிக் குதித்து ஓடிக் காட்டில் மறைந்தது.

ஆலிஸ் திகைத்து நின்றாள். எங்கே போவதென்று தெரியவில்லை. அப்போது மரக்கிளையிலிருந்து ஓர் இனிய இசை கேட்டது. ஆர்மோனியத்தின் கட்டைகளைப் போல் வெண் பல் வரிசைகள் பளிச்சிட்டன. பச்சைக் கண்கள் இரண்டு பிரகாசித்தன. முகம், பிறகு வரிவரியான உடல் — இளிச்சவாய்ப் பூனையின் முழு உருவமும் வெளிப்பட்டது! ஆலிஸ் அதனருகில் போய், ''பூனையே, பூனையே! இங்கிருந்து நான் எந்த வழியாகப் போக வேண்டும்?'' என்று கேட்டாள்.

''நீ எங்கே போகிறாய் என்பதைப் பொறுத்தது'' என்றது பூனை.

''குறிப்பாக எந்த இடத்துக்கும் இல்லை.''



முயற்சியால் முன்னேறியவர்கள்!

1. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கன் ஒரு சாதாரண விறகு வெட்டியின் மகனாகப் பிறந்தவரே.
2. இங்கிலாந்தின் பிரதமர் உட்ரோ வில்சன் வறுமையில் வாடி வதங்கிய ஒரு சாதாரண ஏழை ஆசிரியராகப் பணியாற்றியவரே.
3. வானிலே விமானத்தைப் பறக்கச் செய்த ரைட் சகோதரர்கள் சைக்கிள் கடை நடத்தி அதில் கிடைத்த பணத்தை வைத்து ஆராய்ச்சி செய்தவரே.
4. அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவர் பாத்திரம் கழுவி, துணி துவைத்து மாடு மேய்த்த ஒரு மாபெரும் சாதனையாளர்.
5. இருமுறை நோபெல் பரிசுபெற்ற தியாகச் செம்மல் கியூரி அம்மையார் சிறு வயதிலே வீடுகளில் வேலை செய்து பிழைத்தவரே.
6. சோவியத் ரஷ்யாவின் மாபெரும் தலைவர் ஸ்டாலின் ஒரு செருப்புத் தைத்துப் பிழைக்கும் தொழிலாளியின் மகனாகப் பிறந்தவரே.
7. பிரான்சு நாட்டின் சர்வசக்தி படைத்த இராணுவத் தளபதி நெப்போலியன், இளம் பருவத்தில் பசிக்கு உணவின்றி ஒரு கிழவியிடம் கடனுக்குப் பழம் வாங்கித் தின்று பல வருடங்களுக்குப் பின் அப்பணத்தைத் திருப்பியளித்தார்.
8. ரஷ்யப் பிரதமர் குருஷேவ் இளம் வயதில் மாடு மேய்த்தவரே.
9. பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சி நகரசபையில் சில காலம் எழுத்தர் வேலை பார்த்தவர்.
10. குடந்தைக் கல்லூரியில் ஆங்கிலப் பாடத்தில் தேர்ச்சி பெற இயலாது போய், பின் உலகப் புகழ் பெற்றவரே கணித மாமேதை இராமானுஜம்.

தொகுத்தவர்: சி. பழனியப்பன்

"அப்படியானால் நீ எந்த வழியாக வேண்டுமானாலும் போகலாம்."

"ஏதாவது ஓர் இடத்திற்குப் போக வேண்டுமில்லையா?"

"சிறிது தூரம் நடந்தால் நிச்சயம் அப்படி ஓர் இடத்தை அடையலாம். ஒரு வெள்ளை முயல்கூட இந்த வழியாகத்தான் போயிற்று..."

"வெள்ளை முயலை எனக்குப் பார்க்க வேண்டுமே!" ஆலிஸ் ஆர்வத்தோடு கேட்டாள்.

"இந்தப் பாதையில் போனால் ஒரு தொப்பி வியாபாரி இருக்கிறான். அவனைக் கேட்டால் சொல்லுவான். ஆனால், அவன் ஒரு பைத்தியக்காரன். அவன் வீட்டில் ஒரு தேநீர் விருந்து நடக்கிறது. ஒரு பழுப்பு முயலையும் அங்கே காணலாம்" - பூனை பதில் சொன்னது.

"நான்பைத்தியகாரர்களைப்பார்க்கப் போக மாட்டேன்", என்றாள் ஆலிஸ்.

"உன்னால் அதைத் தவிர்க்க முடியாது. ஏனென்றால் இங்கு அநேகமாக எல்லோருமே பைத்தியக்காரர்கள் தான்", என்று சொல்லிவிட்டுப் பூனை கலகலவென்று சிரித்தது; குதித்தது; கூத்தாடியது. முதலில் தலையிலிருந்து வால் வரைக்கும் அது கொஞ்சங் கொஞ்சமாக மறைந்தது. மறுபடியும் அது தோன்றி, வாலிலிருந்து தலை வரைக்கும் மறைந்து கொண்டே வந்தது. கடைசியில் அதனுடைய இளிச்சவாய் மட்டும் நெடு நேரம் பளிச்சென்று காட்சி அளித்தது. அது வரை ஆலிஸ் சிரிப்பே இல்லாத பூனையைப் பார்த்திருந்தாள். ஆனால், அன்று பூனையே இல்லாத சிரிப்பைப் பார்த்து அதிசயித்தாள். இவ்வாறு பூனை. தனக்குத் தெரிந்த வித்தைகளை எல்லாம் செய்து காட்டியது. அதற்கு நன்றி சொல்லிவிட்டு, ஆலிஸ் தொப்பி வியாபாரி வீட்டை நோக்கி நடந்தாள்.

அந்த வீட்டில் ஆலிஸ் விநோதமான மக்களைச் சந்தித்தாள். பைத்தியக்காரத் தொப்பி வியாபாரி, பழுப்பு முயல், தூங்கும் எலி — ஆகிய மூவரும் காணப்பட்டனர். அறை ஒழுங்கு இல்லாமல் இருந்தது. மேசைமேல் தட்டுகளும், கோப்பைகளும் தாறுமாறாகக் கிடந்தன. எலி தன்னுடைய கோப்பையிலேயே படுத்துக் கொண்டு குறட்டை விட்டது. அவை சில முட்டாள்தனமான புதிர்களைக் கூறி ஆலிஸிடம் விடை கேட்டன. பிறகு அவளை அலட்சியப்படுத்தி விட்டு அவை தங்களுக்குள்ளேயே உரை



பெற்றோர்

1. கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது. ஆதலால் தாய்மார்களை சிருஷ்டித்தார்.
—யூதப் பழமொழி.

2. உலகம் அனைத்தையும் ஒரு தட்டிலும் என் தாயை மறுதட்டிலும்வைத்து நிறுத்தால், உலகின் தட்டுத்தான் மேலே இருக்கும்.
—லாங்டேல் பிரபு.

3. நான் இப்பொழுதுள்ள நிலைக்கும், இனி அடைய நம்பிக் கொண்டிருக்கும் நிலைக்கும் என் தெய்வீகத் தாய்க்கே நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
—ஆபிரகாம் லிங்கன்.


4. கடவுளுக்கு அடுத்தபடியாக உங்கள் பெற்றோர்களைப்பேணுங்கள். -பென்.

5. நமது பெற்றோர்களிடத்தில் நாம் எவ்வளவு நன்றி செலுத்துகிறோமோ அவ்வளவு நன்றியை நமது குழந்தைகளிடத்திலும் எதிர்பார்க்கலாம்.
—தாலெஸ்.

6. தாயை யாருடனும்ஒப்பிடலாகாது. அவள் ஒப்பற்றவள்.
—பெல்ஜியப் பழமொழி.

7. பத்து ஆசிரியர்ஒரு குருவுக்குச் சமம்; நூறு குருக்கள் ஒரு தந்தைக்குச் சமம்; ஆயிரம் தந்தையர் ஒரு தாய்க்குச் சமம்.
—மனுநீதி.

தொகுத்தவர்: **என். விக்னேஷ்.**



யாடின. எலி ஒரு கதை சொல்லத் தொடங்கிப் பாதியிலேயே உறங்கியது. அந்தப் பைத்தியக்காரக் கூட்டத்திலிருந்து தப்பித்து ஆலிஸ் வெளியே ஓடினாள்.

அடுத்து அவள் ஒரு ரோஜாத் தோட்டத்தை அடைந்தாள். வெள்ளை ரோஜாச் செடிகள் அவளை வரவேற்றன. ஆட்டச்சீட்டுகளில்(Playings Cards) மூவர் செடிகளைச் சுற்றிச் சுற்றிக் குதித்துக் கொண்டிருந்தனர். கைகளில் அவர்கள் வண்ணக் குவளையையும், தூரிகையையும் ஏந்தியிருந்தனர். கிளாவர் மூன்று (clubs three) என்பவன் ஓர் ஏணியில் ஏறி உயரத்தில் இருந்த வெள்ளை ரோஜாவுக்குச் சிவப்பு வண்ணம் பூசிக்கொண்டிருந்தான். கிளாவர் இரண்டும், ஏகம் (clubs two and ace) செடியைச் சுற்றி நடனமாடிக் கொண்டிருந்தனர். அந்த மூவரும் பாட்டுப் பாடிக் கொண்டே மலர்கள் மீது சிவப்பு வண்ணத்தை வாரி இறைத்துக்கொண்டிருந்தனர்.

அருகில் சென்று ஆலிஸ் காரணம் கேட்டாள். ''அரசி இங்கு சிவப்பு ரோஜாவை நடச் சொல்லியிருந்தாள். மறந்து போய் நாங்கள் வெள்ளை ரோஜாவை நட்டு விட்டோம். விஷயம் தெரிந்தால், நிஜமாகவே அரசி எங்கள் தலைகளை வாங்கி விடுவாள்'', என்று பயந்து கொண்டே ஒரு தோட்டக்காரன் சொன்னான். அவர்கள் சாயம் பூசி முடிப்பதற்குள் ஆர்ட்ஸ் அரசி (Queen of Hearts) அங்கு வந்து விட்டாள். ஆர்ட்ஸ் அரசனும், ஈட்டி தாங்கிய மற்ற சீட்டு வீரர்களும் புடைசூழ வந்தனர். கூட்டத்தின் நடுவில் வெள்ளை முயல் ஊது கொம்பை முழக்கிக் கொண்டு கம்பீரமாக வந்தது. தோட்டக்காரர்கள் செய்த தவறை அறிந்ததும் அரசி கோபமடைந்தாள். ''தவறு செய்தவர்களின் தலையை வெட்டுங்கள்'' என்று கடுமையாக உத்தரவிட்டாள். ஆலிஸ் அந்தத் தோட்டக்காரர்கள் மீது இரக்கப்பட்டாள். ஒரு பெரிய பூந்தொட்டியில் அவர்களை மறைத்து வைத்து அரசியின் தண்டனையிலிருந்து அவர்களைக் காப்பாற்றினாள்.

கால்ஃப் ஆட்டம் தொடங்கியது. சீட்டு ராஜ்யத்தின் சீமான், சீமாட்


டிகள் பலர் அதில் ஆடினர். அத்தகைய வேடிக்கையான ஆட்டத்தை அது வரையில் ஆலிஸ் கண்டதில்லை. உயிருள்ள பிராணிகளை விளையாட்டுக் கருவிகளாக உபயோகித்தனர். நாரை தடியாகவும் (Stick), முள்ளெலி பந்தாகவும் பயன்பட்டது. ஆலிசையும் அழைத்தனர். கலந்து கொண்டாள். நாரையின் கால்களைப் பிடித்துக் கொண்டு ஆலிஸ் அதை வீசியபோது அந்த நாரை பந்தை அடிக்காமல் கழுத்தை வளைத்து ஆலிசை வினோதமாகப் பார்த்தது. எல்லோரும் சிரித்தனர். ஆலிசும் சிரித்தாள். அது அவளுக்குக் கடினமான ஆட்டமாகத் தோன்றியது.


எல்லோரும் ஒரே சமயத்தில் ஆடினர். ஒழுங்கு இருக்கவில்லை. அரசிக்குக் கோபம் வந்தது. ''இவனுடைய தலையை வெட்டுங்கள்! அவனுடைய தலையை வெட்டுங்கள்!'' என்று நிமிஷத்திற்கு ஒரு தரம் உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள். ''இப்படி வெட்டிக் கொண்டே இருந்தால் கடைசியில் யார்தான் மிஞ்சுவார்கள்?'' என்று ஆலிஸ் ஆலோசித்தாள்.

ஆட்டம் நடந்து கொண்டிருக்கையில் இளவரசி ஆலிசைச் சந்தித்தாள். இருவரும் கடற்கரைக்குச் சென்றனர். அங்கு பெரிய சடலாமைகளையும், கிரிபன் (gryphon.) என்னும் பெயருள்ள கழுகுத் தலையும், சிங்க உடலும் கொண்ட வினோதப் பிராணியையும் கண்டு உரையாடினர். அப்போது அரண்மனையிலிருந்து ஒரு செய்தி வந்தது.

அரசி புது மாதிரியான கேக்குகள் செய்திருந்தாள். சீட்டு வீரன் ஒருவன் குறும்புத்தனமாகச் சில கேக்குகளைத் திருடி விட்டான். அவனைக் கைது செய்து விசாரணைக்கு அழைத்து வந்தனர். வேடிக்கை பார்ப்பதற்காக ஏராளமான சீட்டு மனிதர்களும்

ஓவியராகலாம்





பிராணிகளும் நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர்.

ஆர்ட்ஸ் அரசியும், அரசனும் தங்கள் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். அறையின் மத்தியில் ஒரு பெரிய தட்டு நிறைய புதிய கேக்குகள் வைக்கப்பட்டிருந்தன. வேல் தாங்கிய சீட்டு வீரர்கள் வரிசை வரிசையாக நின்றனர். கைகள் கட்டப்பட்டுக் குற்றவாளி சோகமே உருவாக ஒரு மூலையில் நின்றிருந்தான். பன்னிரண்டு சிறிய பிராணிகளும், பறவைகளும் ஜூரர்கள் பகுதியில் வீற்றிருந்தனர். அவர்கள் சிலேட்டை வைத்துக் கொண்டு சாக்பீசால் (Chalkpiece) எழுதிக் கொண்டிருந்தனர்.

வெள்ளை முயல் ஊது கொம்பை முழக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தது. அரசிக்கு வணக்கம் தெரிவித்து விட்டுக் கையிலிருந்த சுருள் கவடியைப் பிரித்தது. "...குற்றவாளி முன்கூட்டியே திட்டமிட்டுக் கால்ஃப் ஆட்டத்தில் குழப்பத்தை உண்டாக்கி அரசியின் பொறுமையை இழக்கச் செய்தான்..." என்ற பகுதிகளை வெள்ளை முயல் தெளிவாகப் படித்தது.

"த ண் ட னை யை நீ ஏற்கத் தயாரா?" அரசி கைதியைப் பார்த்துக் கேட்டாள்.

"தண்டனையா? முதலில் தீர்ப்பு அல்லவா வழங்க வேண்டும்", என்று ஆலிஸ் குறுக்கிட்டாள்.

"அந்த வழக்கமெல்லாம் கிடையாது. இங்கு தண்டனை முன்னால், தீர்ப்பு பின்னால்", என்று அரசி அடித்துக் கூறினாள்.

"சில சாட்சிகளை விசாரிக்கலாமே" என்று அரசர் ஆலோசனை கூறினார்.

சீட்டு வீரர்கள் சில சாட்சிகளை அழைத்து வந்தனர். அவர்கள் வேறு யாரும் அல்ல. பைத்தியக்காரத் தொப்பி வியாபாரி, பழுப்பு முயல், தூங்கு மூஞ்சி எலி, இளவரசியின் சமையல்காரி—ஆகியோர் தான். வெள்ளை முயல் வழக்கம் போலக் குழலை ஊதியது. அர்த்தமில்லாத கேள்விகள், அர்த்தமில்லாத பதில்கள். ஆனால் ஜூரர்கள் அவற்றைக் கவனமாக எழுதிக்கொண்டனர். ஒவ்வொரு சாட்சியும் பேசி முடித்ததும், "சாட்சியின் தலையை வெட்டு!" என்று அரசி ஆணை பிறப்பித்தாள்.

"அடுத்த சாட்சி யார்?" என்று அரசன் கேட்டான். வெள்ளை முயல் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்துகொண்டே, பட்டியலைப் பார்த்து, 'ஆலிஸ்' என்று உரக்கப் படித்தது. ஆலிஸ் ஆச்சரியத்தில் மூழ்கினாள். மற்ற சாட்சிகளின் விசாரணையின் போதே ஆலிஸ் கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பித்திருந்தாள். இப்போது திடுதிடுவென்று உயர்ந்து விட்டாள்.

"இதோ வந்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே துள்ளி எழுந்த ஆலிஸ் ஜூரர்களின் பகுதியில் மோதிக் கொண்டாள். ஜூரர்கள் தூக்கி எறியப்பட்டனர். சிலேட்டும், சாக்பீசும் நாலாப் புறமும் சிதறின. நீதிமன்றம் அமைதியடையக் கொஞ்ச நேரம் ஆனது. வழக்கம் போல அர்த்தமற்ற கேள்விகள் ஆலிஸிடமும் கேட்கப்பட்டன. ஏற்ற பதிலை அளித்தாள்.

அரசன் குறுக்கிட்டு, "கைதி கேக்குகளைத் திருடினானா, இல்லையா?" என்று கேட்டார். "முதலில் தலையை வெட்டுங்கள். பிறகு கேள்வி கேளுங்கள்" என்று அரசி உத்தரவிட்டாள்.

"இது என்ன முட்டாள்தனமாக இருக்கிறதே! முதலில் கேள்வி கேளுங்கள்." என்றாள் ஆலிஸ்.

"வாயை மூடு", அரசி கோபமாகக் கூறினாள்.

"மாட்டேன்!"

"இவளுடைய தலையை வெட்டுங்கள்!" என்று அரசி உத்தரவிட்டாள்.

"நீங்கள் சாதாரண ஆட்டச் சீட்டுத் தானே? உங்களுக்கு யார் பயப்படுவார்கள்?" என்று ஏளனமாகச் சொன்னாள் ஆலிஸ்.


கூரிய வேல் தாங்கிய சீட்டு வீரர்கள் கூண்டிலிருந்த ஆலிசை நோக்கிப் பாய்ந்து வந்தனர். அவள் கண்களை இறுக மூடிக் கொண்டு 'ஓ'வென அலறினாள்.

இமைகளைத் திறந்ததும் ஆலிஸ் ஆற்றங்கரையில் மரநிழலில் படுத்திருந்தாள். மாலைக் கதிரின் ஒளிபட்டு மலர்ச்செடிகள் பிரகாசித்தன. "எவ்வளவு நேரம் தூங்குவாய்? எழுந்திரு ஆலிஸ்!" என்று அக்கா அவளை எழுப்பினாள். ஆலிசின் மீது விழுந்திருந்த சருகுகளைத் தட்டினாள். அருகிலிருந்த செல்லப் பூனை, 'மியாவ்' என்று தாவிக் குதித்தது. மாதா கோவிலின் மணி 'டண், டண்' என்று அடித்தது. மாலைத் தேநீர் நினைவுக்கு வந்தது. தான் கண்ட அதிசயக் கனவை அக்காவுக்குச் சொல்லிக் கொண்டே ஆலிஸ் வீட்டை நோக்கி நடந்தாள்.

Lewis Carroll எழுதிய Alice in Wonderland என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.

மரியாதை

வசந்தா கோவிந்தன்



''சார் போஸ்ட்...!''

வீட்டு வாயில் முன்பு தரையில் சுழன்ற பம்பரத்தைக் கயிற்றால் அலாக்காகத் தூக்கி உள்ளங்கையில் பிடித்துச் சுழல வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் முரளி. இரண்டு வீடு தள்ளித் தபால்காரரின் குரல் கேட்டு வீட்டின் உட்புறம் பார்த்து,

''அம்மா, தபால்காரன் வரான் அம்மா.'' என்று சத்தமாகக் குரல் கொடுக்கவும், தபால்காரர் முரளி வீட்டு வாசலை அணுகி நிற்கவும் சரியாக இருந்தது. அதேசமயம் உள்ளிருந்து முரளியின் தாய், ''அவனிடம் போஸ்ட் ஏதாவது இருக்கா கேள்'' என்று பதில் குரல் கொடுத்தாள்.

முரளி தபால்காரரைப் பார்த்து, ''போஸ்ட் ஏதாவது எங்க வீட்டுக்கு இருக்கா?'' என்று கேட்டான்.

''இல்லை தம்பி. ஆனால், உன்கூட கொஞ்சம் பேச வேண்டும்'' என்றார் தபால்காரர்.

முரளிக்கு வியப்பு! தன்னிடம் பேசத் தபால்காரருக்கு என்ன விஷயம் இருக்கும்?

அதற்குள் தபால்காரர், ''தம்பி, நீ எந்த வகுப்பு படிக்கிறாய்?'' என்று கேட்டார்.

''இந்த வருடம் ஆறாம் வகுப்பு போகிறேன்'' என்றவன் தொடர்ந்து, ''இப்போது கோடை விடுமுறை'' என்றான்.

''தம்பிக்கு என்ன வயசு இருக்கும்?'' - இது தபால்காரர்.

''பத்து முடிந்து பதினொன்று'' என்றான் பையன்.

''எனக்கு என்ன வயசு இருக்கும், சொல்லு பார்ப்போம்...?'' என்றார் தபால்காரர், ஏதோ புதிர் போடுபவர்போல.

முரளிக்குச் சொல்லத் தெரியவில்லை. விழித்தான்!

தம்பி, எனக்கு 45 வயது ஆகிறது. உன்னைவிட எனக்கு எவ்வளவு வயது அதிகம் இருக்கும்?''

தலையைச் சொறிந்தவாறே, ''நாற் பத்தைந்திலே பத்து போச்சுன்னா, அஞ்சுக்கு அஞ்சு, நாலில் ஒண்ணு போனா மூணு. அப்போ முப்பத்தஞ்சு வயசு'' என்றான் உரக்க, விடை கிடைத்த மகிழ்ச்சியில்.

''அப்போ, உன்னைவிட நான் பெரியவன்தானே?'' என்றார் தபால்காரர்.

'ஆமாம்' என்பது போல் தலையை ஆட்டினான் முரளி.

''அப்படி இருக்க, 'தபால்காரன் வரான்' என்று மரியாதை இல்லாமல்

பேசலாமா தம்பி? நான் உனக்குச் சொந்தக்காரனாக இல்லாமல் இருக்கலாம். தினம் காக்கிநிறக் கசங்கிய உடையில் வியர்வை சொட்டச் சொட்ட, கால்களின் செருப்பு கணிசமாகத் தேய உன் உறவுக்காரர்களின் கடிதங்களைச் சுமந்துகொண்டு வந்து கொடுக்கும் ஒரு எளிய ஊழிய நண்பனப்பா நான். உன்னைப்போல, இப்படிப் பம்பரம் விளையாடிய சிறுவனாக இருந்துதான் இப்போது பெரியவனாகி இருக்கிறேன். என்னைப்போல இன்னும் 60 வயதிலும் கண்கள் மங்கிய நிலையில் அதோ போகிறாரே காய்கறிக்காரர் அவரையும், காலையும் மாலையும் உங்கள் வீட்டில் பால் ஊற்றுகிறாரே அவரையும், ஏன் இது போல் உங்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்ளும் நடமாடும் எளிய நண்பர்களையும், உங்களைப் போல் கோலி விளையாடும் சிறுவர்கள் மட்டுமல்ல, எல்லாம் அறிந்த பெரியவர்கள்கூட — உன் அம்மாவைப் போல் — மட்டு மரியாதை இல்லாமல் அழைக்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே, மற்றவர்களின் வயது; தோற்றத்துக்குரிய மரியாதை தராமல் 'வா, போ', 'அவன், இவன்' என்று பேசுகிறார்கள். போகட்டும்! கல்வி கற்கும் உன்னைப் போன்றவர்களாவது மற்றவர்களை மரியாதையாக அழைத்துப் பேசுவது நல்லது தம்பி. நீயும் இது போன்ற சின்னத்தவறுகளை உணர்ந்து இருந்த வேண்டும் தம்பி. நான் சொன்னது எல்லாம் உனக்குப் புரிந்ததா? புரியவில்லை என்றால் ஆற அமர உட்கார்ந்து யோசித்துப்பார். அப்போது புரியும். நாளை நான் மீண்டும் வருவேன் அல்லவா? அப்போது நான் கூறியவை சரியா, தவறா என்பதைச் சொல். வரட்டுமா தம்பி? நேரம் ஆகிவிட்டது. இன்னும் இந்தத் தெருவில் பல வீடுகளில் 'இன்னும் இந்தத் தபால்காரனைக் காணோமே' என்று திட்டிக் கொண்டிருப்பார்கள். போய் வருகிறேன் தம்பி'' என்று முரளியின் கன்னத்தில் செல்லமாகத் தட்டிக் கொடுத்துவிட்டு அவ்விடம் விட்டு அகன்றார் தபால்காரர்.

முரளி தன் தவற்றை நன்றாக உணர்ந்தான்.

தன் வீட்டில் ஓர் அங்கமாக அல்லாத தபால்காரர், பால்காரர், கேஸ் சிலிண்டர் கொண்டு வந்து வைப்பவர், எலெக்ட்ரிக் ரீடிங் எடுப்பவர், பேப்பர் போடுபவர், குழாய் ரிப்பேர் செய்ய வருபவர், சலவை செய்து தருபவர் இவர்களை எல்லாம் —வீட்டுப் பெரியவர்கள் பேச்சு வழக்கில் 'அவன், இவன்' என்று பேசுவதைக் கேட்டு, பசு மரத்தாணி போல் பதிந்த அவனின் பிஞ்சு மனம் இன்று மிகவும் வருந்தியது.

மறுநாள் முரளியும் அவன் தாயும் தபால்காரரின் வருகைக்காகக் காத்திருந்தார்கள். அவர் தலையைக் கண்டதுமே அவரை நோக்கி, 'தபால்கார மாமா' என்றபடி ஓடினான் முரளி.

''சபாஷ், உறவில்லாத ஒருவரை 'மாமா' என்று உறவாக்கி விட்டாயே!'' என்றபடி அவன் கையைப் பிடித்தபடி நடந்து வந்த தபால்காரர் முரளி வீட்டின் வாயிலில் அவன் தாயாரையும் கண்டு, ''வணக்கம் அம்மா'' என்றார்.


''வணக்கம் போஸ்ட்மேன். நேற்று ராத்திரி முழுவதும் முரளி சரியாகத் தூங்காமல், தன் தவற்றுக்காக மிகவும் வருந்தினான். எங்களிடமும் சண்டை பிடித்தான். உண்மைதான். வீட்டுப் பெரியவர்களின் நடைமுறைப் பேச்சைத்தான் பிள்ளைகளும் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை நானும் உணர்ந்து விட்டேன். இனி இது போன்ற தவறு நேராது. நாங்கள் உணர்ந்தது மட்டுமில்லாமல், உங்களைப் போன்ற ஊழியர்களை மரியாதையுடன் மற்றவர்களும் அழைக்க வைக்கும் முயற்சியை நானும் என் பிள்ளையும் எடுத்துக் கொள்வோம்'' என்றாள் முரளியின் தாய், தவற்றை உணர்ந்த உணர்ச்சி நிறைந்த குரலில்.

''ரொம்ப சந்தோஷம் அம்மா. ஆங்கிலத்தில் 'போஸ்ட் மேன்' என்று எங்களை அழைக்கும்போது வராத கோபம், 'தபால்காரன்' என்கிறபோது வந்து விடுகிறது அம்மா. என்ன செய்ய? தமிழில் உள்ள பல மரியாதையற்ற சொற்களை ஆங்கிலத்தில் சொன்னால் மரியாதையாகி விடுகிறது'' என்று சொல்லிச் சிரித்தார் தபால்காரர்.

''என் மனத்தில் இருந்த பல நாளைய வேதனையை — சார் போஸ்ட் என்று மரியாதையுடன் அழைத்துத் தரும் எங்களைப் போன்றவர்களைப் பலரும் மதிக்காத இந்த வேதனையை — நீங்களும் முரளியும் இன்று தீர்த்து வைத்து விட்டீர்கள். அம்மா, மிகவும் நன்றி. வருகிறேன்; வரேன் தம்பி'' என்று கைகூப்பி விடை பெற்றார் தபால்காரர்.

அவர் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றார்கள் முரளியும், அவன் தாயாரும்!

கட்டி வைத்தது காட்டிக் கொடுத்தது!



எம்.ஆர்.ராஜன்

தயாநந்தன் ஒரு வியாபாரி. வியாபாரி என்றால் கடை வைத்து—தொழிற்சாலை எல்லாம் வைத்து வியாபாரம் செய்பவனல்ல. சில பொருள்களை மொத்த விலையில் வாங்குவான். வேறு சில்லறை வியாபாரிகளுக்கு விற்பான். மார்க்கெட்டில்—சந்தையில் ஏதாவது பொருளுக்குத் தட்டுப்பாடு வரும்போலத் தெரிந்தால் போதும்; அந்தப் பொருளை நிறைய வாங்கித் தன் வீட்டில் பதுக்கி வைத்துக்கொண்டு, அதிக விலைக்கு விற்று லாபம் பெற்று வந்தான். நிறையப் பணம், கணக்குக் காட்டாமலேயே வைத்திருந்தான். கொஞ்சம் தங்க, வைர, நகைகளாகவும் வாங்கிப் பதுக்கி வைத்திருந்தான்.

அவனுடைய நண்பர்கள் சிலர், அவனுடைய ஆசையை மேலும் வளர்த்து விட்டனர். ''பணத்தைச் சேர்த்து வச்சு என்ன செய்யப் போறே? சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடெல்லாம் போய் வாயேன். நிறையப் பொருள்களெல்லாம் வாங்கி வந்தால் இங்கே கொண்டு வந்து நல்ல விலைக்கு விற்கலாம்'' என்று ஆசையூட்டினர்.

''வெளிநாடெல்லாம் சுற்றினமாதிரியும் இருக்கும் — வியாபாரம் செய்து லாபம் பெற்ற மாதிரியும் இருக்கும்'' என்ற எண்ணம் வந்தது தயாநந்தனுக்கு. தன்னிடம் உள்ள தங்க, வைர நகைகளை யாரிடம் கொடுத்து வைப்பது? யோசனை செய்தான்.

மயில்வாகனத்தின் நினைவு வந்தது அவனுக்கு. மயில்வாகனம் தயாநந்தனுடன் ஆறாம் வகுப்பு வரை படித்தவன். தான் உண்டு, தன் வேலையுண்டு என்றிருப்பவன். அதனால், அவனை நம்பினான். தன்னிடமிருந்த நகைகளையெல்லாம் நன்றாகக் காகிதங்களில் தனித்தனியாகச் சுற்றி, ஓர் அட்டைப் பெட்டிக்குள் வைத்தான். மேலே ஒரு பேப்பரைப் போட்டு நன்றாகக் கட்டினான். அப்பெட்டியை மயில்வாகனத்திடம் கொடுத்தான். தான் சிங்கப்பூர் போவதாகவும், ஒரு மாத காலத்தில் திரும்பி வருவதாகவும் அதுவரை அந்தப் பெட்டியைப் பத்திரமாக வைத்திருந்து திருப்பித் தருமாறும் கேட்டுக் கொண்டான். பெட்டியைக் கொடுத்ததற்குச் சீட்டு எழுதி வாங்கிக் கொண்டான். பிறகு மயில்வாகனம் பெட்டியை வாங்கி உள்ளே பீரோவில் வைத்தான். அப்படியே கிடந்தது அந்தப் பெட்டி.

சிங்கப்பூர் போன தயாநந்தம் குறித்த நேரத்தில் வரமுடியவில்லை. ஒரு கடிதம் எழுதிப்போட்டான் மயில்வாகனத்திற்கு. கடிதம் கிடைப்பதற்கு முதல்நாள் மயில்வாகனம், மாரடைப்பால் இறந்து போனான். அவன் மனைவி மருதாயிக்கு இந்தப் பெட்டி விஷயம் எதுவும் தெரியாது. தயாநந்தத்தின் கடிதம் கண்டதும், பீரோவைத் திறந்து பார்த்தாள். பெட்டி இருந்தது. அந்தப் பெட்டியில் என்னதான் இருக்கிறது பார்க்கலாமே என்று அதைத் திறந்து பார்த்தாள். நகைகள் இருந்ததைக் கண்டாள். நகை ஆசை அவளைத் திருடச் சொல்லியது. மிகவும் அழகாயிருந்த விலை உயர்ந்த ஒரு ஜோடி வைரத் தோட்டை எடுத்து வைத்துக்கொண்டாள். மறுபடியும் முன்பு இருந்தது போல் பேப்பரைப் போட்டுச் சுற்றிப் பெட்டியை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டாள்.

பதினைந்து தினங்கள் கழித்து தயாநந்தம் ஊர் வந்து சேர்ந்தான். மயில்வாகனம் இறந்து போனது கேட்டு அதிர்ச்சி அடைந்தான். அவன் மனைவியைப் போய்ப் பார்த்தான். அவளோ கடிதத்தைப் பார்த்ததாகவும், பெட்டி இருப்பது பிறகுதான் தெரிய வந்தது என்றும் சொல்லிப் பெட்டியைக் கொடுத்தாள்.

தயாநந்தம் பிரித்துப் பார்த்தான். ஒரு செட் வைரத்தோட்டைக் காணவில்லை! பெட்டியும்கூட தான் கட்டிக் கொடுத்தது போல் இல்லை.

மயில்வாகனத்தின் மனைவி மருதாயியை விசாரித்தான். அவள் எதுவும் தனக்குத் தெரியாது என்றும்— உள்ளே இருந்தபடியே எடுத்துத் தந்ததாகவும் கூறினாள்.

'சரி, ஒரு பெண்மணியிடம் பேசிப் பயனில்லை' என்று பஞ்சாயத்திடம் போனான் தயாநந்தம்.

பஞ்சாயத்து விசாரித்தது.

மருதாயி தான் சொன்னதையே சொன்னாள். தான் எதுவும் எடுக்கவில்லை என்றும் — பெட்டியைத் தன் கணவன் வைத்திருந்தபடியே கொடுத்ததாகவும் சொன்னாள்.

பெட்டிக்குள் என்னென்ன வைத்திருந்தான் என்று தயாநந்தம் மயில்வாகனத்திடம் எழுதித் தரவில்லை. பெட்டியைக் கொடுத்ததாக மட்டுமே எழுதி வாங்கிக் கொண்டிருந்தான். விலையுயர்ந்த பொருட்கள் உள்ளே இருப்பது தெரிந்தால், ஏதாவது கடந்து விடுமோ எனப் பயந்துதான் பெட்டியின் உள்ளே என்னென்ன இருக்கின்றன என்று எழுதிக்கொடுக்காமல் விட்டான். அவன் பயந்தது போலவே நடந்தும் விட்டது.

பஞ்சாயத்துக்காரர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சின்னான் வரவழைக்கப்பட்டான்.

சின்னான் பெட்டியை வாங்கி, 'அப்படி, இப்படி'த் திருப்பிப் பார்த்தான்.

மருதாயியை விசாரித்தான். அவள் தன் கணவன் இறந்த பின்பே இது போல ஒரு பெட்டி இருக்கிறது என்பதை — அதுவும் சிங்கப்பூரிலிருந்து தயாநந்தத்தின் கடிதம் வந்த பின்னரே தெரிந்து கொண்டதாகவும் — அவர் வந்து கேட்டதும், இருந்தது இருந்தபடியே தந்து விட்டதாகவும் சொன்னாள்.

சின்னான் சிரித்தான். பஞ்சாயத்துக்காரர்கள் விழித்தார்கள். ''எம்மா பெரியம்மா. எந்தப் பேப்பரில் இந்தப் பெட்டி சுற்றியிருந்தது? சொல்ல முடியுமா?'' — சின்னான் கேட்டான்.

''ஓ... இதோ... உங்க கையிலே இருக்கே... அதே பேப்பர்தான். இதிலேதான் சுத்தியிருந்தது.''

''அப்படியா! அப்ப நீ எடுத்து வச்சிருக்கிற வைரத்தோட்டை சார் கிட்டே கொடுத்துடு!'' என்றான் சின்னான்.

''இல்லையானால் திருட்டுக் குற்றத்துக்கு ஆயிரம் ரூபா அபராதம் விழும் — ஜாக்கிரதை!'' என்று மிரட்டினார் நாட்டாண்மை.

தான் திருடியதை ஒப்புக்கொண்டாள் மருதாயி. ஏற்கெனவே கணவனை இழந்து கஷ்டப்படும் அவளைத் துன்புறுத்த வேண்டாம் என்றும் அபராதம் விதிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டான் சின்னான். பஞ்சாயத்துக்காரர்கள் ஒப்புக்கொண்டார்கள். வீட்டிலே ஒளித்து வைத்திருந்த தோட்டை எடுத்துவந்து உடனே கொடுத்தாள் மருதாயி.

ஆமாம்! சின்னான் எப்படித் திருட்டைக் கண்டுபிடித்தான்? தயாநந்தம் பெட்டியின் மேல் சுற்றியிருந்தது இரண்டு மாதத்துக்கு முந்தையச் செய்தித் தாள். மருதாயி தோட்டைத் திருடிவிட்டு மறுபடி கட்டியபோது அன்றைய தினசரி பேப்பரைப்போட்டுக் கட்டிவிட்டாள்! தேதி மாறியிருக்கிறதல்லவா?

பாவம், பேப்பர் காட்டிக்கொடுத்து விட்டது!

விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி

''சார் தந்தி!'' என்றாலே நம் வீடுகளில் நடுக்கம்தான்! ஆனால், ஒலி நடுக்கங்களின் பொருள் கூட்டியே தந்தி மொழி இயங்குகிறது என்பதும் உங்கட்குத் தெரியுமல்லவா?

தந்தி வசதியுடன் கூடிய தபால் ஆபீசுக்குப் போயிருக்கிறீர்களா?

தந்தி மொழியின் அடிப்படை இரண்டே வடிவங்கள்தான்! ஒருபுள்ளி • ஒரு கோடு — புள்ளி என்பது தொடிப் பொழுது அல்லது தமிழ் இலக்கணப் படி ஒரு மாத்திரையளவு நேரம். கோடு என்பது மூன்று புள்ளி நேரம்.

புள்ளிக்கு ஒரு தட்டு என்றால், கோட்டுக்கு மூன்று தட்டு நேரம். இப்போது தந்தி முறையில் புள்ளிக்கு வெகு லேசாக ஒரு தட்டு... கோட்டுக்கு மூன்று மடங்கு அழுத்தமுடன் அழுத்தி ஒரு தட்டு.

புள்ளிக்கு லேசாக 'கட'என்று தட்டு.

கோட்டுக்கு அழுத்தி 'கட்டு' என்று ஒரு தட்டு!

''கட்டு கட்டு கட,கட்டு கட்டு கட்டு, கட்டு கட கட்டு, கட கட கட்டு, கட கட்டு கடகட, கட கட்டு,கட்டு கட்டு.'' என்று எழுதுவது கஷ்டமாயிருக்கலாம். தட்டுவதும் கலபம்தான்! பென்சிலை வைத்துத் தட்டிப் பழகிப் பாருங்களேன். ஆமாம்! மேலே உள்ள கடாபுடா ஒலிக்குள் அடங்கியிருப்பது என்ன? கீழே உள்ள விளக்கக் குறிப்புகளைக் கொண்டு நீங்களே கண்டுபிடியுங்கள்!

இதே முறையில் தமிழ் எழுத்துக்களையும், கோடு, புள்ளிகளில் அடக்கி எழுதவும் எளிய முறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தந்தி மொழியை இருவர் நன்றாக மனப்பாடம் செய்துகொண்டு விட்டால் பென்சில் தட்டுக்களிலேயே பேசிக் கொள்ளலாம். ஒளித் தந்தி மாதிரி செய்தும் பழகலாம். கட்டு கட ஒலி தலைவலி என்றால் பளிச் = புள்ளி என்றும் பளிச் பளிச் பளிச் = கோடு என்றும், சாக்கெட் பல்பை எரிய அணைய வைத்தும் பழகலாம்!

ஒலித்தந்தி, ஒளித் தந்தி இரண்டு மாதிரிகளையும் செய்தே பார்ப்போமா?

எழுத்து- விளக்கங்களைக் கொண்டு செய்வதைவிட படத்தைப் பார்த்தே செய்து பாருங்கள்!

ஒலித்தந்தி முறை: இதை இரண்டு பகுதிகளாகச் செய்யலாம்.

முதலில் A பகுதி. செய்வது மிக எளிது.

8 × 8 × .5 கன செ.மீ. அளவில் ஒரு மரக்கட்டை. அதன் ஒரு புறத்தில் 6 × 1 ச. செ.மீ. அளவான தகட்டின் ஒரு பாகத்தை ஸ்க்ருவால் பொருத்தவும். தகட்டின் இன்னொரு பக்கத்தில் ஓட்டையிட்டு ஒரு ஸ்க்ருவைச் செருகி வைப்போம். அதற்கு நேர்கீழே மரப் பலகையில் ஓர் ஆணி அடித்துப் பொருத்துவோம். தகட்டை அழுத்தினால் ஸ்க்ரு ஆணியின் தலையில் பட்டு

= •— கட கட்டு	G = ——•	M = ——	T = —
= —••• கட்டு கடகடகட	H = ••••	N = —•	U = ••—
= —•—• கட்டுகடகட்டுகட	I = •••	O = ———	V = •••—
= —•• கட்டு கடகட	J = •———	P = •——•	W = •——
= • கட	K = —•—	Q = ——•—	X = —••—
= ••—• கடகடகட்டுகட	L = •—••	R = •—•	Y = —•——
னிமேல் நீங்களே ட்டுக் கடவெல்லாம் திப்பாருங்களேன்!..		S = •••	Z = ——••

கட ஒலியோ கட்டு ஒலியோ எழுப்ப வேண்டும். B பகுதிதான் சற்று சிக்க லானது. கவிழ்த்த ப அதாவது ட வடி வில் மேலே சொன்ன அளவில் மூன்று கட்டைகள் இணைக்கப்பட் டிருக்க வேண்டும். மூடியில்லாத சாக்குப் பெட்டியையும் பயன்படுத்த லாம்.

செப்புக் கம்பி சுற்றிய ஆணி ஒன்று ஒரு பக்கத்தில் துளையிட்டு இறுக்க மாகச் செருகப்பட வேண்டும். தேவை யானால் ஆணி நழுவாதிருக்க, ஒரு நட். (பலகை வெளிப் பக்கத்தில்) அதன் நேர் எதிர்ப் புறத்திலிருந்து கம்பி சுற்றப் படாத ஆணி இறுக்க மாகச் செருகப்படட்டும்! இந்த ஆணி யின் கூர்மைப் பகுதியில் 'எல்' (L) வடிவில் வளைக்கப்பட்ட இன்னொரு தகடு செருகப்பட வேண்டும் இறுக்க மாக! தகட்டின் மேல் இறுதி முனைக் கருகே துளையிட்டு ஒரு ஸ்க்ருவும் பொருத்தித் தொங்கட்டும். அந்த ஸ்க்ரு செப்புக் கம்பி சுற்றிய ஆணியைத் தொடாமல் ஆனால் தொடத் தயாராக அமையட்டும்! B பகுதியும் ரெடி!

A யையும், B யையும் மின்சக்தியால் இணைக்க வேண்டும். தூரத்துக்கேற்ப நான்கு துண்டுகளாக வெட்டப்பட்ட ஒயர்... 1.5 செல் போதும்! செல்லின் ஒரு முனையிலிருந்து A பகுதி பலகை தகடு பொருத்திய ஸ்க்ருவின் ஒரு பகு திக்கு ஒரு ஒயர் இணைப்பு!

செல்லின் மறுமுனையிலிருந்து B பகுதி ஆணியில் செருகிய தகட்டில் தொங் கும் ஸ்க்ருவின் தலைப்பகுதியுடன் ஒரு ஒயர் இணைப்பு!

B பகுதியின் பக்கங்களின் செருகிய இரு ஆணிகளின் தலைப்பகுதிகளையும் சேர்த்து ஒரு ஒயர் இணைப்பு!

கடைசி நான்காம் மின் இணைப்பு A பகுதிக்கும் B பகுதிக்கும்தான்! A பகுதி யில் ஆணிக்கு மேல் பட்டும் படாமலு மிருக்கும் தகட்டின் ஸ்க்ருவிலிருந்து B பகுதியில் செப்புக் கம்பி சுற்றிய ஆணியின் இன்னொரு பகுதிக்கு...அதா வது தகட்டிலிருந்து ஸ்க்ரு தொங்கும் பகுதிக்கு!


A பகுதியில் தகட்டை 'கட' என்று மெல்லவோ 'கட்டு' என்று அழுத் தியோ ஆணி மீது பட வைத்தால், மின்சாரம் பாய்ந்து செப்புக் கம்பி ஆணி காந்தமாகி மேலே ஸ்க்ரு வுடன் இணைந்த தகட்டை இழுக்கும். பழகப் பழக அழுத்த வேக ஒலி 'கட'வா, 'கட்டு'வா என்பது புரியும்!


மின்னொளித் தந்தியில் B பகுதியே தேவை இல்லை. ஆணிகள், தகடு காந்த மாற்றம் தேவையில்லை!


படத்தில் உள்ளது போல் ஒரு சாக்கெட் பல்பை இணைத்தாலே போதும். தகட்டை மெதுவாகவோ, அழுத்தியோ ஆணிமீது படவைத்து பல்பை எரிய வைத்து ஒளிக்கு ஒலி வடிவம் பெறலாம். ஒளியில் மெல்ல, அழுத்தி என்பது புரிவது கடினம் என் றால் 'பளிச்' புள்ளி என்றும், 'பளிச், பளிச், பளிச்' கோடு என்றும் கொண் டால்தான் என்ன? ஒலி, ஒளி இரண்டு முறைகளிலும் முயன்று பாருங்கள்!


கட்டுரை ஆரம்பத்தில் கட்டு கட்டு கட என்று ஆரம்பித்தோமே... அது என்ன? கண்டுபிடித்தீர்களா!

'Gokulam — சரிதானே'







ஸ்ரீமதி சுயம்வரம்
கதை: ஆனந்தி ; படம்: வினு
திரிசங்கு சக்கரவர்த்தியின் பத்தினி பத்மாவதி. வெகு நாட்களாக இவர்களுக்குக் குழந்தையில்லை. எனவே இருவரும் காட்டுக்குச் சென்று ஸ்ரீ மகாவிஷ்ணுவை நினைத்துத் தவம் செய்தார்கள். கடவுள் பிரத்யட்சமானார்.
உங்களுக்கு ஒரு மகன் பிறப்பான். அவனுடைய புதல்வியை நான் மணந்து கொண்டு உங்களை மகிழ்விப்பேன்.
கடவுள் அருளால் குழந்தை பிறந்தது.
பத்மாவதி! என் மகன் அம்பரீஷன் புத்திமானாக இருப்பதோடு பக்திமானாகவும் இருக்க வேண்டும்.
தங்களைப் போலவே இருப்பான் சுவாமி!
பல ஆண்டுகள் அரசாண்ட அம்பரீஷன் ஒரு நாள் அமைச்சரை அழைத்து...
என் தந்தையைப் போல நானும் பகவானைத் தரிசிக்க வேண்டும். நான் திரும்பும் வரையில் ராஜ்ய நிர்வாகத்தைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன்.


பல ஆண்டுகள் கடுந் தவம் செய்தான் அம்பரீஷன். இந்திரன் தோன்றினான்.
அம்பரீஷா! நாடாள்வது அரசனின் கடமை. ஏன் தவம் செய்கிறாய்?
பகவானைத் தரிசிக்கத் தவம் செய்கிறேன்.
குபேர சம்பத்தை நீ பெறுவாய். தவம் போதும். நாட்டுக்குத் திரும்பு.
தேவராஜனே! நன்றி. ஆனால் என் மனம் மகாவிஷ்ணுவின் தரிசனத்தையே விரும்புகிறது.
விஷ்ணு தோன்றி...
உன் மன உறுதியைக் கண்டு மகிழ்ந்தேன். உன் பூஜையில் எப்போதும் ஸ்ரீ சுதர்சன சக்கரமாக இருப்பேன்.
அம்பரீஷனுக்குப் பெண் குழந்தை பிறந்தது...
மகாலக்ஷ்மியாகப் பிறந்திருக்கும் இந்தக் குழந்தைக்கு ஸ்ரீமதி என்று பெயர் வைக்கலாம்.
ஸ்ரீமதி வளர்ந்து தந்தைக்குப் பூஜையில் உதவினாள்.
ஓம் ஸ்ரீ சுதர்சனாய நம: ஓம் சக்ர ராஜாய நம:


வட்டமாக இருக்கே அது என்னப்பா?
ஸ்ரீமந் நாராயணனுடைய சுதர்சன சக்கரம்.
நடுவிலே இருக்கிறது யாருப்பா?
அவர்தான் பகவான். உலகத்தையெல்லாம் காப்பாற்றுகிறவர்.
எனக்குப் பகவானைப் பார்க்கணும்னு ஆசையா இருக்குப்பா.
பக்தியோடு தினம் பூஜைக்குப் பூக்கொண்டு வந்தாயானால் பகவானைப் பார்க்கலாம்.
பகவானை அடைய பிரார்த்தித்த ஸ்ரீமதி தினமும் பூப்பறித்து பூஜைக்கு மாலை கட்டிக் கொடுத்தாள்.
ஆண்டுகள் பல சென்றன... அம்பரீஷன் அரசவையில் ஒரு நாள்...
வாருங்கள்! முனிவர்களே! சதா நாராயண நாமத்தை ஜபித்து வரும் உங்களைக் காண்பதே பாக்கியம்
ஜெய விஜயீ பவ.



முனிவர்களுக்குப் பாத பூஜை செய்தான் அம்பரீஷன்.
இருவரும் சில நாள் தங்கி எனக்குப் பகவானின் கதை களைச் சொல்ல வேண்டும்.
மனைவி, மகளை அறிமுகம் செய்தான்.
இவள் என் அருமை மகள் ஸ்ரீமதி. குழந்தாய்! முனிவர்களை உபசரிப்பது உன் பொறுப்பு.
சிறிது நேரம் சென்று... அந்தப்புரத்தில்...
இன்று வந்த முனிவர்கள் யாரம்மா?
அவர்கள் தேவ ரிஷிகள், ஸ்ரீமதி! ஒருவர் நாரத முனிவர். மற்றவர் அவருடைய நண்பர்- பர்வத முனிவர்.
சிரித்தாள் ஸ்ரீமதி.
அப்பா உபசரிக்கும் போது அவர்கள் என்னையே உற்றுப் பார்த்துக் கொண் டிருந்தார்கள் அம்மா!
அசடே! தபஸ்விகளைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது!
சில தினங்கள் சென்றன. அம்பரீஷன் தனித்திருக் கையில் நாரதர் அணுகினர்.
தவசிரேஷ்டரே! ஸ்ரீமதி உங்களை ஒருகுறை யும் இல்லாமல் கவனித் துக் கொள்கிறாளா?
ஆகா! அவளுடைய உபசரிப்பில் மகிழ்ந்தேன். அதிதிகளைக் கவனித்துக் கொள்ளவும், யாக காரியங்களுக்கு உதவி செய்யவும் மனைவியைத் தேடிக் கொண்டிருந்தேன். உம் மகளே எனக்கு ஏற்றவள் என்றுணர்ந்தேன்.


சுவாமி! தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்விக்க எனக்கும் விருப்பம் தான். ஆனால்?
ஆனால் என்ன?...? ஏன் தயங்குகிறீர்?
சற்று முன்னால் தான் பர்வதர் வந்தார். அவரும் ஸ்ரீமதியைத் தமக்குத் திருமணம் செய்து தரும்படி கேட்டார்.
அப்படியா?
ஸ்ரீமதியே தன் கணவனைத் தேர்ந்தெடுக்கட்டும். நாளை இரண்டு பேரும் சுயம்வர மண்டபத்துக்கு வந்து விடுங்கள்.
நாரதர் மனம் நொந்தார்.
என்னுடைய நண்பராக இருந்து கொண்டே பர்வதர் எனக்குத் தெரியாமல் அரசனிடம் மகளைத் தரும்படி கேட்டிருக்கிறாரே!
தவ வலிமையால் உடனே வைகுண்டத்தை அடைந்தார் நாரதர். மகாவிஷ்ணுவிடம்...
சுவாமி! ஒரு வரம் தரவேண்டும். நாளைய தினம் ஒரு சுயம் வரம். அந்த நேரத்தில் பர்வதரின் முகம் குரங்கின் முகம் போலத் தோன்ற வேண்டும்.
இவ்வளவுதானே! அப்படியே தோன்றும்.
நாரதர் சென்றதும் பர்வதர் வந்தார். பகவான் புன்னகைத்துக் கொண்டார்.
பர்வத முனிவரே வருக! என்ன வேண்டும்?
சுவாமி! நாளைய தினம் ஒரு சுயம் வரம். அப்போது நாரதரின் முகம் குரங்கு போலக் காட்சியளிக்க வேண்டும்.
அப்படியே ஆகட்டும்!


திரிசங்கு மகாராஜாவுக்குக் கொடுத்த வரத்தை நினைவூட்டிக் கொண்ட பகவான் கருடனை அழைத்தார்.
ஸ்ரீமதி எனக்காகவே பிறந்து வளர்ந்து வருகிறாள். அதை இம் முனிவர்கள் அறிய மாட்டார்கள்.
சுயம் வர மண்டபத்தில்....
ஸ்ரீமதி என்னைத் தான் வரிப்பாள்!
குரங்குக்கா ஸ்ரீமதி மாலையிடுவாள்! என்னைத் தான் தேர்ந்தெடுப்பாள்.
மண்டப வாசலை நெருங்கினாள் ஸ்ரீமதி.
பகவானே! இப்படி ஒரு சோதனையா?
உள்ளே சென்றதும் குரங்கு முகத்துடன் இருவரையும் பார்த்துத் திடுக்கிட்டாள்.
ஸ்ரீமந் நாராயணா! எனக்கு ஒரு வழி காட்டுங்கள்.
அப்போது வாசலருகே திடீரென்று தோன்றிய ஸ்ரீமந் நாராயணனுக்கு ஓடிச் சென்று மாலை சூட்டினாள் ஸ்ரீமதி.


ஸ்ரீமதியின் கரம் பற்றி அழைத்துச் சென்று விட்டார் பகவான். ரிஷிகள் இருவரும் திகைத்தனர்.
விஷ்ணுவும் ஸ்ரீமதியும் மறைந்ததும் முனிவர்கள் சுயரூபம் அடைந்தனர்.
அம்பரீஷா! இது என்ன எங்களை மோசம் செய்து விட்டாய்?
நாம் நாராயணனிடம் சென்று நியாயம் கேட்போம்.
இருவரும் உடனே வைகுண்டம் சென்றனர்.
பிரபுவே! உங்களை நம்பிய எனக்குப் படுதோல்வி! இது நியாயமா?
நீங்கள் இரண்டு பேரும் கேட்ட வரம் கொடுத்தேன். மூன்றாவது மனிதனை அம்பரீஷன் ஏன் அழைத்தான்? அவனைக் கேளுங்கள்.
சுவாமி! எங்கள் இரண்டு பேரையும் விட்டு மூன்றாவது மனிதனுக்கு மாலை யிட்டு விட்டாளே! எங்களுக்கு இப்படி அவமானம் நேரலாமா?


அரண்மனை திரும்பிய முனிவர்கள்.
அரசனே! நீ எங்களுக்கு மட்டும் சுயம் வரம் என்று கூறி மூன்றாவது மனிதனை ஏன் அழைத்தாய்?
நான் வேறு யாரையும் அழைக்க வில்லை. இது நாராயணன் செயல்.
தவத்தில் சிறந்த எங்களை நீ ஏமாற்றினாய். உன்னை இருள் விழுங்கும்.
முனிவர்கள் சாப மிட பயங்கரமான கருமேகம் போன்ற இருட்டு பூதம் அம்பரீஷனை விழுங்க வந்தது.


அம்பரீஷன் பயந்து பூஜை அறைக்கு ஓடினான்.
சக்கர பாணி! என்னைக் காப்பாற்று.
பூஜை அறைக்கு ஓடி வந்து விழுந்து வணங்கி பிரார்த்தித்தான் அம்ப ரீஷன். சுதர்சனம் ஒளி வீசிச் சுழன்றது.
ஓம் விச்வ ரூபாய நம: ஓம் விஷ்ணு பக்திதாய நம: ஓம் ஸ்ரீ சுதர்சனாய நம:
சுதர்சன சக்கரத்தின் ஒளி இருள் பூதத்தை விரட்டியது. முனிவர்கள் திகைத்தார்கள்.
சுதர்சனம் இருள் பூதத்தைத் துரத்த இருளைக் கண்டு முனிவர்கள் பயந்து ஓடினார்கள். ஓடியவர்களை விடாமல் துரத்திற்று இருள்.


ஆபத்பாந்தவா! அநாத ரக்ஷகா! எங்களைக் காப்பாற்றுங்கள்.
மகா விஷ்ணு தோன்ற ரிஷிகள் அவர் பாதங்களைப் பிடித்துக் கொண் டார்கள்.
பயப்பட வேண்டாம். எழுந்திருங்கள்.
சுவாமி! சாபம் கொடுத்து விட்டுத் தவிக்கிறோம். ஐயோ! அதோ இருள் பூதம்.
நீங்கள் இருவரும் ஆத்திரப் பட்டு யோசிக்காமல் என் பக்த னுக்குச் சாபம் கொடுத்து விட்டீர்களே! சக்கரராஜனிடம் மன்னிப்புக் கேளுங்கள்.



சுவாமி! தாங்கள் வேறு; சுதர்சனம் வேறா!.... ஹே! சுதர்சனரே! எங்கள் அறியாமை இருளை விலக்க வேண்டும்.
முனிவர்களே! கோபத்தை விட்டவனே முனிவன். நீங்கள் கொடுத்த சாபத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.
இருளை ஏற்றுக் கொண்ட ஸ்ரீமந் நாராயணன் கருநீல மேனியுடன் கதிரவனை உள்ளடக்கிய கார்மேகம் போல ஜொலித்தார்.
அம்பரீஷன் மனம் மகிழ பக்தர்கள் கொண்டாட ஸ்ரீமதியைத் திருக்கல்யாணம் செய்து கொண்டார் ஸ்ரீமந் நாராயணன்.




வைகுண்டத்தில் பள்ளி கொண்ட பெருமான் முன் ஒரு சமயம் தும்புரு கானம் செய்தார்.
ஆகா! என்ன கானம்! தும்புரு! உம்முடைய இசையைக் கேட்ட தேவர்கள் அனைவரும் பாக்கியசாலிகள்.
நாரத கானம்
சித்திரக் கதை 2
நாரதர் மனத்தில் போட்டியும் பொறாமையும் உருவாயிற்று.
தும்புருவின் இசையில் பகவான் சொக்கிப்போய் விட்டாரே! நானும் தும்புருவை மிஞ்சிப் பாட வேண்டும்.
பகவானுக்குத் தெரியாமல் இசை கற்க நினைத்தார் நாரதர். தும்புருவிடம் கேட்டுக் கற்றுக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை. ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தார். அசரீரி ஒலித்தது.
மானஸரோவரம் என்ற ஏரிக் கரையில் உள்ள புறவையை உன் குருவாக ஏற்றுக் கொள்.



குறிப்பிட்ட ஏரிக் கரையை நாரதர் அடைந்தார். கந்தர்வர்கள் கான பந்து என்ற பெரிய பக்ஷியிடம் பாட்டு, கற்றுக் கொள்வதைப் பார்த்தார்.
என்ன ஆச்சரியம்? ஒரு கிழக் கோட்டான் எவ்வளவு நன்றாகப் பாடுகிறது!
கானபந்து விடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார் நாரதர்.
என் பெயர் நாரதன். என்னை உன் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.
ஆகா! இப்போதே தொடங்கலாம்.
நாரதருக்கு ஒரு தம்புராவை அளித்தான் ஒரு கந்தர்வன். நாரதர் பாடத் தொடங்கினார்.
சில நாட்கள் சென்றதும்...
இவ்வளவு நன்றாகப் பாடுகிறீர். கந்தர்வர்களுக் கெல்லாம் குருவாக விளங்குகிறீர். நீர் ஏன் இப்படி ஒரு பறவையாக இருக்கிறீர்?


கானபந்து பறவை கதையைத் தொடர்ந்தது.....
நாரதரே! என் பூர்வ ஜன்மத்தை நினைவு படுத்துகிறேன். .. புவநேசன் என்று ஒரு அரசன்... ஒரு நாள் ஆணை பிறப்பித்துத் தண்டோரா போட்டான்....
புருஷர்கள் யாரும் பாடக் கூடாது. வேத மந்திரங்களினாலேயே பகவானை ஆராதிக்க வேண்டும். பெண்கள்தான் பாடலாம். இது சக்கரவர்த்தியின் ஆணை.
ஹரி மித்திரர் புதிய புதிய பாடல்களால் ஸ்ரீமந் நாராயணனை ஆராதித்து வந்தார். ஒரு நாள் அவர் பாடுவதைக் கேட்டுவிட்ட ஒற்றன் அரசரிடம் சொல்லி விட்டான்.
அரசவைக்கு அழைத்து வரப்பட்டார் ஹரி மித்திரர்.
சட்டத்தை மீறிப் பாடுகிறீரே! ஆண்கள் வேதம் ஓதித்தான் பூஜை செய்ய வேண்டும் என்பது தெரியாதா?
அரசே! மனத்தின் ஆழத்திலிருந்து என்னையுமறியாமல் ஸங்கீதம் பெருகி வருகிறது. பாடுபவன் நான் அல்ல. ஸ்ரீ கிருஷ்ணனே!
சட்டத்தை மீறியதுமல்லாமல் தன்னையே பகவான் என்றும் கூறும் இவனை நாடு கடத்துகிறேன்!


நாமு நீங்க நடந்த போது கோயில் வாசலில் அவரை அழைத்துச் செல்ல தெய்வீக விமானம் வந்தது.
சில காலம் சென்று..
கானபந்து கதையை முடித்தது.
சில காலத்துக்குப் பின் மன்னன் புவநேசன் இறந்து போனான். சுவர்க்கத்தில் அமைதி கிடைக்கவில்லை. இப்போது கானபந்து என்ற பறவையாகப் பிறந்திருக்கிறான்!
நாரதர் வியந்தார்.
ஆகா! பூர்வ ஜன்மத்தில் நீங்கள் மன்னரா! அது சரி, இந்த இசை ஞானம் எப்படி அடைந்தீர்?
பொன் விமானத்தில் ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டே இருக்கின்ற ஹரிமித்திராரிடம் பல காலம் சீடனாக இருந்து பயின்றேன்.
நாரதரே! உம்முடைய பயிற்சி முடிந்தது. நீர் இனிமேல் துவாரகை சென்று கிருஷ்ண பரமாத்மாவின் பத்தினிகளான ருக்மிணி, ஜாம்பவதி இருவரிடமும் சங்கீதத்தை அபிவிருத்தி செய்து கொள்ளுங்கள்.
நாரதர் துவாரகை சென்றார். அவருக்கு ஸ்வர ஞானம் உண்டாவதற்காக ருக்மிணி ஏழு ஸ்வர தேவதைகளை அழைத்தாள்.
முனிவரே! இவர்களிடம் ஸ்வரப் பிரஸ்தார முறைகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.



ஒரு நாள் கண்ணன் வந்து...
நாரதரே! கானத்தில் நீர் தும்புருவை மிஞ்ச வேண்டும் என்று ஆசைப் பட்டீர் அல்லவா?
சுவாமி! தும்புருவோ நானோ அல்லது வேறு யாரானாலும் உங்களுடைய அருள் இல்லாமல் எதுவுமே முடியாது என்பதை உணராமல் கஷ்டப் பட்டேன். தாங்களே இனி எனக்குக் குரு
பகவானுக்குத் தெரியாமல் இசை பயில நினைத்த நாரதர் பகவானையே குருவாக ஏற்றார். கர்வம் அடங்கியது. கானம் பிறந்தது.
கஸ்தூரி திலகம்.... லலாட பலகே....
நாரத கானம் என்றே அவருடைய ஸங்கீதம் புகழ் பெற்றது. வைகுண்டத்தில் தும்புருவும் நாரதரும் என்றென்றும் இசையினால் பகவானை மகிழ்வித்து வருகிறார்கள்.



ஒலிம்பிக் தாத்தா ஓடுகிறார்!

– ஜெயசீலன் –

ஒலிம்பிக் தாத்தாவிற்கு ஒரே உற்சாகம்!

லாஸ் ஏஞ்சல்சில் கோலாகலமாக நடைபெற இருக்கும் ஒலிம்பிக் பந்தயச் செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கப் படிக்க அவர் உடல் முறுக்கேற ஆரம்பித்து விட்டது.

வெண்மையான தனது தாடியைத் தடவிக்கொண்ட போது அவருடைய முகத்தில் கம்பீர ஒளி வீசுவது தெரிகிறது.

மாஸ்கோ ஒலிம்பிக் முடிந்த பின் ஆசிய விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்க இந்தியாவிற்குப் புறப்பட்டபோது, ரஷ்யப் 'பனித் தாத்தா', 'நீங்கள் சிறந்த நாட்டிற்குச் செல்கிறீர்கள். இந்தியாவில் உங்களுக்கு வரவேற்பு இனிதாக இருக்கும்... கொடுத்து வைத்தவர் நீங்கள்' என்றார்.

ஒலிம்பிக் தாத்தா இந்தியா வந்த போது பனித் தாத்தா சொன்னது அத்தனையும் உண்மை என்பதை உணர்ந்தார்.

(பனித் தாத்தாவின் வாய்க்கு நல்ல 'கோன் ஐஸ்கிரீம்' போட வேண்டும்.)

அடடா! ஒலிம்பிக் தாத்தாவிற்குத் தான் எத்தனை நல்ல வரவேற்பு!

ஆசிய விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்து அசந்து விட்டார் ஒலிம்பிக் தாத்தா.

'இந்த இந்தியர்களுக்குத்தான் எவ்வளவு திறமை! உலகமே வியக்கும் வண்ணம் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி விட்டார்களே! கெட்டிக்காரர்கள்...' என்று பாராட்டிக் கொண்டார், அவர்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் முடிந்தவுடன் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தார் ஒலிம்பிக் தாத்தா.

முதலில் இந்தியாவின் வட மாநிலங்களைச் சுற்றிப் பார்த்த அவர், பின் தென் மாநிலங்களில் வலம் வந்தார்.

எங்கு சென்றாலும் அவருக்கு உற்சாகமான வரவேற்புதான்!

தமிழகத்தை நன்கு சுற்றிப்பார்த்துப் பரவசமடைந்த அவர், இப்போது புதுவை மாநிலம் போக ஆயத்தமானார்.

இந்தியாவில் அவர் கடைசியாகப் பார்க்க வேண்டிய இடம் இதுதான்!

* * *

அதோ ஓடிக் கொண்டிருக்கிறானே அவனைத் தெரியுமல்லவா உங்களுக்கு...?

தெரியாது...?

பத்திரிகைகளில் அவன் புகைப் படத்தைப் பார்த்திருக்கலாமே...?

ம்... நினைவுக்கு வந்து விட்டதா?

அவனேதான்... மணியேதான்...!

அவன் மணியான ஓட்டக்காரன்!

எதற்காக இப்படி மைதானத்தில் ஓடிக்கொண்டிருக்கிறான்...?

போட்டிகளில் கலந்து கொள்ளப் பயிற்சி எடுத்துக் கொள்கிறான்.

மணியின் அப்பா விளையாட்டில் நல்ல ஆர்வமுள்ளவர்.

அவன் ஆரம்பப் பள்ளியில் படிக்கும்போதே விளையாட்டில் ஊக்கம் கொடுக்க ஆரம்பித்தார்.

விளையாட்டுப் பந்தயங்கள் எங்கு நடந்தாலும் மணியை அவனுடைய

அப்பா கூட்டிச் சென்று விடுவார். தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்து உயர்நிலைப் பள்ளியில் மணி சேர்ந்த போது அங்கு அவனை மிகவும் கவர்ந்த இடம் விளையாட்டு மைதானம்தான்!

அடேயப்பா! எவ்வளவு பெரிய இடம்!

நேரம் கிடைக்கும் போதெல்லாம் மைதானத்திலேயே இருந்தான் மணி.

அவனது உடல் அமைப்பு, ஆர்வம் ஆகியவற்றைக் கவனித்த பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் அவனை உற்சாகப்படுத்தினார்.

நூறு மீட்டர், இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயங்களிலும், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் முதலியவற்றிலும் சிறப்புப் பயிற்சி கொடுத்தார்.

மணி அக்கறையோடு கற்றுக்கொண்டான்.

அவ்வருடப் பள்ளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமான போது மணியின் உள்ளத்தில் இனந் தெரியாத புத்துணர்வு ஏற்பட்டது!

ஜூனியர் பிரிவில் மணி கலந்து கொண்டான்.

நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தின் இறுதிப் போட்டி ஆரம்பமானது.

அவனோடு ஐந்து பேர்கள் ஓடுகிறார்கள்.



இதோ பந்தயக் குதிரைகள் போல் பாய்கிறார்கள் அந்தச் சிறுவர்கள்!

அடடா! என்ன வேகம்... என்ன வேகம்!

சிட்டுகள் பறக்கின்றனவோ!

சிறுத்தைக் குட்டிகள் ஓடுகின்றனவோ!

மூச்சைப் பிடித்துக்கொண்டு மணி ஓடுகிறான்.

அவனை முந்த இளங்கோ என்ற சிறுவன் முயலுகிறான்.

இரண்டு பேரும் சிறிது நேரம் ஒன்றாகவே ஓடுகிறார்கள்.

மணியிடம் முடியுமா?

ஒரே உந்து உந்தி இளங்கோவை முந்தி... நாடாவில் நெஞ்சை மோத விட்டான்.

எங்கும் கரவொலி! வாழ்த்து முழக்கங்கள்!

வெற்றி மேடையில் கம்பீரமாக நின்றான் மணி.

அடுத்து நடந்த நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், இருநூறு மீட்டர் ஓட்டப்பந்தயம் — அனைத்திலும் மணி முதலிடம் பெற்றான்!

அந்த வருட 'சாம்பியன்' அவன் தான்!

மறுநாள் பள்ளியில் பாராட்டு விழா ஒன்று நடந்தது. அதில் ''நம் பள்ளிக்குப் பெருமை தேடித்தந்த மாணவன் மணிக்கு எனது அன்பான பாராட்டுதல்கள்'' என்று பலத்த கைதட்டல்களுக்கு இடையே மணிக்கு மாலை அணிவித்தார், தலைமை ஆசிரியர்.

மணியின் உடல் சிலிர்த்துக் கொண்டது.

மேடையிலிருக்கும் தன்னைக் கூட்டத்திலிருந்து பெருமையாகப் பார்க்கும் தன் அப்பா, அம்மாவைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டான் மணி.

...கடந்த ஆண்டு நிகழ்ச்சிகளின் பசுமையான நினைவுடன் இதோ மணி பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறான்.

இவ்வருட விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாக இன்னும் ஒரு வாரம் தானே இருக்கிறது!

* * *

காரைக்கால் பகுதியைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் புதுவைக்குள் நுழைகிறார் ஒலிம்பிக் தாத்தா.

கம்பன் கலை அரங்கின் முன் நின்ற போது அண்ணா திடலிலிருந்து ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புச் செய்வது கேட்கிறது.

'பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் முடிந்தவுடன் பெரியவர்களுக்கான ஓட்டப் பந்தயம் ஒன்று நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ஐம்பது வயதிற்கு மேற் பட்ட பெரியவர்கள் அனைவரும் போட்டியில் கலந்து கொள்ளலாம்'

உள்ளம் மகிழ்ச்சியால் துள்ள, அண்ணா திடலுக்கு ஒலிம்பிக் தாத்தா சென்றார்.

தன்னை யார் என்று காட்டிக்கொள்ளாமல் ஓர் ஓரத்தில் நின்று நிகழ்ச்சிகளைக் கவனிக்க ஆரம்பித்தார்.

✻ ✻ ✻

''மணி, இந்த வருடமும் நீ சாம்பியனாக வந்து பள்ளிக்குப் பெருமை சேர்க்க வேண்டும்'' என்று தலைமை ஆசிரியர் கூறினார்.

''நிச்சயமாக நான்தான் சார் சாம்பியன்'' என்றான் மணி.

''வாழ்த்துக்கள்... வாழ்த்துக்கள்.'' என்றார் அவர்.

ஜூனியர் பிரிவிற்கான நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தின் இறுதிப் போட்டிக்கு அழைப்பு வந்தது.

போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு அலட்சியமாகப் போனான் மணி.

சில புதுமுகங்கள் தென்பட்டன.

இளங்கோவும் இருந்தான்.

போட்டி ஆரம்பமானது.

மணி பறக்கிறான்...

இளங்கோவும், மற்றவர்களும் அவனை ஓட்டி ஓடுகிறார்கள்.

ஊ...ஹூம். மணியிடம் ஒன்றும் நடக்கவில்லை.

கடந்த ஆண்டு போலவே மணிக்கு முதல் இடம். யாரோ முத்துவாம். அவனுக்கு இரண்டாவது இடம்; இளங்கோவுக்கு மூன்றாவது இடம்.

அடுத்து நீளம் தாண்டுதல் போட்டி.

வெற்றிப் பெருமிதத்தில் மிதந்த மணி மிடுக்குடன் ஓடிவந்து தாண்டினான்.

இளங்கோ, முத்து இன்னும் பலரும் தாண்டினார்கள்.

முடிவு அறிவிக்கும் போது மணிக்கு அதிர்ச்சியான அதிர்ச்சி!

இளங்கோ முதலிடம்.

மணிக்கு இரண்டாவது இடம்!

வியர்த்துக் கொட்டியது மணிக்கு.

உடற்பயிற்சி ஆசிரியர் கூறினார்.

''மணி, இன்னும் இரண்டு போட்டிகள் இருக்கின்றன. இரண்டிலும் நீ முதலிடம் பெற்று விட்டால், நீ தான் சாம்பியன்.''



பள்ளி விழாவில் அறிவிப்பாளர்:

''வருஷம் பூராவும் நாள் தவறாமல் வகுப்புக்கு லேட்டாக வந்ததோடல்லாமல், ஒருநாள் சொன்ன காரணத்தை இன்னொரு நாள் சொல்லாமல், புதுப் புதுக் காரணங்களைக் கற்பனை செய்து சொல்லி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திய செல்வன் கணேஷுக்கு இந்தச் சிறப்புப் பரிசு அளிக்கப்படுகிறது!''

புதிய தெம்போடு குண்டெறியும் போட்டியில் கலந்து கொள்ளச் சென்றான் மணி.

ஆனால் அந்தோ...

குண்டெறியும் போட்டியிலும் மணி கோட்டை விட்டு விட்டான்.

மணியை விட, அரை மீட்டர் தூரம் அதிகம் போட்டு இளங்கோ முதலிடம் பெற்றான்.

இடிந்து போய் விட்டான் மணி.

''மணி, நன்றாகக் கவனி... உனக்கு இதுவரை பதினொரு புள்ளிகளும், இளங்கோவிற்குப் பன்னிரண்டு புள்ளிகளும் கிடைத்திருக்கின்றன. அடுத்து நடைபெறப் போகும் இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் நீ முதலிடம் வந்து, இளங்கோ இரண்டாவது இடம் வந்தால், இளங்கோவை விட ஒரு புள்ளி உனக்குக் கூடக் கிடைத்து விடுகிறது... நீ சாம்பியன் ஆகிவிடுகிறாய்...'' உடற்பயிற்சி ஆசிரியரின் விளக்கம் மணிக்கு நம்பிக்கை கொடுத்தது.

இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயம் ஆரம்பமானது.

மணி ஓடுகிறான்... ஓடுகிறான்...

இதோ... இதோ... பாதித் தூரம் அவன்தான் முதலாவதாக ஓடுகிறான்.

அதற்குமேல்...



யாரோ ஒருவன் முந்துவது போல் தெரிகிறதே!

இளங்கோதான்...! அடடா! மணியை முந்தி விட்டானே...!

வெற்றி... வெற்றி...

யாருக்குத் தெரியுமா?

இளங்கோவுக்குத்தான்!

மணிக்கு உலகமே இருண்டு விட்டது போன்ற ஓர் உணர்வு.

'சாம்பியன் ஷிப்' அவனுக்கு இல்லை.

வாழ்த்தும் இல்லை!

எல்லோரும் அவனைக் கேலியாகப் பார்த்துச் சிரிப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

மைதானத்தை விட்டு வெளியேறினான்.

* * *

பெரியவர்களுக்கான ஓட்டப் பந்தயம் அப்போதுதான் நடந்து முடிந்திருந்தது.

எதிர்பாராத விதமாக ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்ட ஒலிம்பிக் தாத்தாவை மேடைக்கு அழைத்துச் செல்கிறார்கள், சிறுவர், சிறுமியர்—பெரியவர்களும் கூடத்தான்.

அவர் மேடை ஏறியபோது,

''ஒலிம்பிக் தாத்தா வாழ்க...! வாழ்க!'' என்ற வாழ்த்தொலி முழங்கியது.

கம்பன் கலை அரங்கின் சுற்றுச் சுவரில் சோர்வுடன் சாய்ந்திருந்த மணிக்கு 'ஒலிம்பிக் தாத்தா வாழ்க!' என்ற ஒலி வியப்பைக் கொடுத்தது.

விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் குழுவின் தலைவருடைய குரல் கேட்கிறது...

''அன்பார்ந்த மாணவச் செல்வங்களே, பெரியோர்களே... தாய்மார்களே...! யாரும் எதிர்பாராத விதமாக நம்மிடையே வந்திருந்து, போட்டியிலும் பங்கு பெற்றுப் பெருமைப் படுத்திய — உலகிற்கே சொந்தமான ஒலிம்பிக் தாத்தா அவர்களுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் தகும்... அன்னாரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.''

அப்படியென்றால் அடுத்து வருவது ஒலிம்பிக் தாத்தாவின் குரலாகத்தான் இருக்கும்!

கூர்மையாகக் கேட்க ஆரம்பித்தான் மணி.

''அனைவருக்கும் வணக்கம்...''

அவர் தமிழில் பேச ஆரம்பித்தவுடன் கைதட்டல் வானைப் பிளந்தது.

அதைப் புரிந்து கொண்ட ஒலிம்பிக் தாத்தா, ''உலகிலுள்ள அனைத்து மொழிகளும் எனக்குத் தெரியும். தொன்மைமிக்க தமிழ் மொழியை எனக்கு மிகவும் பிடிக்கும்...''

மீண்டும் கைதட்டல்.

தொடர்ந்து பேசினார் ஒலிம்பிக் தாத்தா: ''இங்கு நடந்த விளையாட்டுப் போட்டியிலும், நடந்து கொண்டிருக்கும் பரிசளிப்பு விழாவிலும் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

''சற்றுமுன் வயதானவர்களுக்கான ஓட்டப் பந்தயம் நடந்தது... நானும் கலந்து கொண்டேன்... ஆனால், நான் அதில் முதலாவதாகவோ, இரண்டாவதாகவோ வந்தேனா?... இல்லையே... மூன்றாவதாகக்கூட வரவில்லையே!''

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மணிக்குச் 'சுருக்'கென்றது.

''...போட்டிகளில் பங்கு பெற வேண்டும் என்பதுதான் நமது நோக்கமாக இருக்க வேண்டும்... முழுமூச்சுடன் ஈடுபட்டும் கிடைக்காவிடில் சோர்ந்துவிடக் கூடாது. முயற்சி திருவினையாக்கும்... விளையாட்டில் மட்டுமல்ல, வாழ்க்கையில் கூட வெற்றி கொள்வதை விட வாழ்வின் பிரச்னைகளை எதிர்த்துப் போராடுவதே முக்கியம்...'' என்றார்.

மணியின் உள்ளத்தில் ஓங்கி அறைந்தது போல் இருந்தது.

அவன் உள்ளத்தில் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டது.

மைதானத்தை நோக்கி மணி ஓடுகிறான்.

அவனுக்குரிய பரிசுகளை ஒலிம்பிக் தாத்தாவின் கரங்களில் பெற்றபோது அவனுக்குத்தான் எத்தனை இன்பம்!

'சாம்பியன் ஷிப்'பிற்கான கோப்பையை இளங்கோ பெற்ற போது மணி மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் கைதட்டினான்.

விழா முடிந்தது.


ஒலிம்பிக் தாத்தா லாஸ் ஏஞ்சல்ஸ் புறப்படுகிறார்.

சிறுவர், சிறுமியர், பெரியோர் அனைவரும் கைகளை அசைத்து அவருக்கு விடை கொடுக்கிறார்கள்.

மணியும் கையாட்டுகிறான்.

ஏனோ அவன் கண்களிலிருந்து நீர் கசிகிறது...!

('ஒலிம்பிக் தாத்தா' ஒரு கற்பனைப் பாத்திரம்.)





ஒரு பாடம்

பொன்.மணிதாசன்

குமார், மணலி உயர் நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவன் தினமும் பேருந்தில் சென்று வருவதற்காகச் சலுகைக் கட்டணத்தில் சோழன் போக்குவரத்தில் 'பாஸ்' வாங்கிக் கொடுத்திருந்தார் அவனது தந்தை.

வழக்கம் போல் பள்ளிக்குச் செல்லப் புத்தக மூட்டையைத் தூக்கிக்கொண்டு வாசலுக்கு வந்த குமார், திண்ணையில் மாட்டப்பட்டிருந்த தன் தந்தையின் சட்டையைக் கண்டதும் ஒரு சபலம். சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் இல்லையெனத் தெரிந்ததும் கைவரிசையைக் காட்டியதில் சட்டைப் பையிலிருந்த ஒரு ரூபாய் கிடைத்தது. பத்திரமாக அந்த ஒரு ரூபாயைப் பைக்குள் திணித்துக் கொண்டு பேருந்தைப் பிடித்து ஏறி, இருக்கையில் அமர்ந்துகொண்டான்.

பேருந்து மணலியை நெருங்கிக் கொண்டிருந்தது. குமார் அந்த ஒரு ரூபாயில் இன்று என்னென்ன வாங்கித் தின்னலாம், எப்படியெல்லாம் செலவழிக்கலாம் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தபோது—

நடத்துனர், ''டிக்கட், டிக்கட், டிக்கட்'' என்று கூறிக்கொண்டே அவனுக்கு அருகிலிருந்த பெரியவர் ஒருவரிடம் வந்து நின்றார்.

பெரியவர் பணம் எடுக்க அவசரமாகச் சட்டைப் பைக்குள் கையை விட்டவர் திடுக்கிட்டார். அவர் முகமோ பேயறைந்தது போலானது. காரணம், சட்டைப் பையில் பணம் இல்லாமலிருந்ததுதான்! சிறிது நேரத்தில் பெரியவர் மடியைப் பார்த்து, மீண்டும் மீண்டும் சட்டைப் பையைத் துழாவினார். பலன் இல்லை. ''இந்தச் சட்டையில் வச்கத்தானே வீட்டிலே மாட்டினேன்? யார் எடுத்தாங்களோ! வர்ர அவசரத்திலே கவனிக்காம வந்துட்டேன்'' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த பெரியவரை முறைத்துப் பார்த்தார் நடத்துனர்.

''யோவ், நீங்களெல்லாம் மனுஷன்னு கிளம்பி வந்துடுறீங்களே! யாரையய்யா ஏமாற்றப் பார்க்கிறே! இறங்கய்யா கீழே!'' என்று விசில் கொடுத்த மறுநிமிடம் பேருந்து நின்றது. பேருந்திலிருந்த அனைவருடைய பார்வையும் பெரியவரையே கேலி செய்து கொண்டிருந்தது. பெரியவர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். ''நீர் ஒண்ணும் சொல்ல வேண்டாம். இறங்கு முதலிலே'' என்று பிடித்துத் தள்ளாத குறையாக இறக்கி விட்டார் நடத்துனர். மீண்டும் விசில் கொடுக்கப் பேருந்து உறுமிக் கொண்டு கிளம்பியது

இதுவரை பெரியவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு நடந்த எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த குமாருக்கு அதிர்ச்சி மட்டுமல்ல; தான் செய்த தவறால் தன் தந்தையும் இப்படிச் சட்டையைப் பார்க்காமல் எங்காவது மாட்டிக் கொண்டு அவமானப்படுவாரோ என்ற பயமும் பற்றிக்கொண்டது.

அன்று மாலை பள்ளி இறுதி மணி ஒலித்தபோது, தன் தவற்றைத் தன் தந்தையிடம் கூறி மன்னிப்புக் கேட்கப் புறப்பட்டான் குமார்.

கொடியில் கிடந்த பச்சைப் பாவாடையை எடுத்து உடுத்திக் கொண்ட வள்ளி, சீப்பினால் தலையை வாரிக்கொண்டே தன் அம்மாவிடம் வந்தாள்.

''அம்மா! சோறு இருக்குதா?''

''இருந்ததை உப்புப் போட்டுக் கரைச்சு வச்சிருக்கேன். எடுத்துக்கடி. அப்புறமா குழாயண்டை போய் நாலு பானை தண்ணி புடிச்சா!'' என்றாள் அம்மா.

''அம்மா! அம்மா! ஸ்கூலுக்கு நேரமாயிடிச்சம்மா... நீ போய்த் தண்ணி புடிச்சுக்கோ...'' என்று அவசரம் அவசரமாகக் கஞ்சியைக் குடித்தாள் வள்ளி.

''இஸ்கூலுக்குப் போறியா?''

''ஆமாம்மா! இன்னைக்குத் திறக்கிறாங்களாம்... நான்தான் அஞ்சாவதுலேயிருந்து ஆறுவதுக்கு மாறிட்டேனே... நான் போறேம்மா...'' கெஞ்சினாள் வள்ளி.

''சும்மா கிடடி... பொட்டைக் கழுதைக்கு அடுப்படி வேலை தெரிஞ்சா போதும்டி. அஞ்சு வருஷம் படிச்சுக் கிளிச்சது போதும். அதுவே திமிரு ஏறிப் போடும்... போய் வேலையைப் பார்ப்பியா... படிக்கிறாளாம்...படிக்க. பெரீ...ய மாடிவூட்டுப் பொண்ணுங்கிற நினைப்பாங்காட்டியும்...'' படபட வென்று பொரிந்து கொட்டினாள் அங்கம்மா.

''அம்மா! பாவாடை, சட்டை, புத்தகமெல்லாம் கொடுப்பாங்கம்மா''

''மெய்யாலுமா பாவாடை சட்டைங்க கொடுக்கிறாங்க...''

''போன வருஷம் கொடுத்தாங்களே...''

''அப்படின்னா நீ போயி அதுங்களை மட்டும் வாங்கிட்டு வந்துடு. நாளையிலேந்து நீ இஸ்கூலுக்குப் போகத் தேவையில்லை. அந்த மாடி வூட்டுக்காரம்மா மகள் வூட்டுக்கு, உன்னை மாதிரி ஒரு பொண்ணு வேலைக்கு வேணுமாம். பங்களூரிலிருந்து வந்திருக்காங்க. நாளைக்கு அனுப்பி வைக்கிறதாகச் சொல்லிட்டு வந்திருக்கேன்.''

வள்ளிக்குத் துயரம் தொண்டையை அடைத்தது. அவளுக்கு மேலே படிக்க வேண்டும் என்று மிகவும் ஆசையாக இருக்கிறது. அம்மாவோ, வீட்டு வேலைக்கு அதிலும் வெளியூருக்குப் போகச் சொல்கிறாள். அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

கவலையோடு வள்ளி பள்ளிக்கூடத்திற்குச் சென்றாள்.

பள்ளிக்கூடத்திலிருந்து அப்போதுதான் வீட்டுக்கு வந்தாள் வள்ளி.



வள்ளியின் ஆசை

கே. ஜெயலக்ஷ்மி

''இன்னுடி... புதுச் சொக்காய்.. பாவாடை, எல்லாம் கொடுப்பாங்க, அப்படி, இப்படின்னு சொல்லி ஒரே யடியா அளந்தியே... எங்கேடி.... பாவாடையும் சொக்காயும்...?'' என்று கேட்டாள் அங்கம்மா.

''இன்னும் தைச்சு வரலியாம். பத்து நாள் கழிச்சுத்தான் தருவாங்களாம்...'' சொன்னாள் வள்ளி.

''அதெல்லாம் வேணும். இப்பவே என் கூட வா'' என்றாள் அங்கம்மா.

''எங்கேம்மா போகப் போறே?''

''பேசாமல் வாடி கழுதை!''

இருவரும் மௌனமாக நடந்தார்கள்.

அங்கம்மாவும், வள்ளியும் அந்தப் பெரிய மாடி வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

''என்ன அங்கம்மா... காலையிலேயே வருவதாகச் சொன்னாயே...'' என்று கேட்டாள் அந்த வீட்டின் எஜமானி.

''இதுக்குப் பெரிய இடத்துப் புள்ளேங்கிற நினைப்பு. காலையிலே எழுந்திரிச்சு இ ஸ் கூ லு க் கு ப் போறேன்னு அடம் .பிடிச்சது. அது தான் வரமுடியாமப் போயிடிச்சு'', என்றாள் அங்கம்மா குழைவான குரலில்.

''படிக்கிற பெண்ணையா வேலைக்குக் கொண்டு வந்து விடுகிறாய்?'' என்று கேட்டாள் அந்த எஜமானியம்மாளின் மகள் வேதவல்லி.

''சட்டி, பானை கழுவப் போற கழுதைக்குப் படிப்பு எதுக்கம்மா...? உங்க வீடுகளிலே வேலை செய்தாலும் நல்லாக் கொடுப்பீங்க. எங்க கஷ்டம் தீரும். படிப்பு சோறு போடுமா?''



''எங்களோடே பெங்களூருக்கு வந்து எங்க வீட்டிலே வேலை செய்ய சம்மதமா?'' வள்ளியைப் பார்த்துக்கேட்டாள் வேதவல்லி.

வள்ளிக்கு அழுகை வந்து விட்டது. தன் அம்மாவின் முகத்தைப் பார்த்தாள்.

''அவளை எதுக்கம்மா கேக்கறீங்க? வாடின்னு வர்ரா!'' என்றாள் அங்கம்மா.

''சரி, காலையிலே ஆறு மணிக்கு அனுப்பிவிடு. பிருந்தாவனம் எக்ஸ்பிரஸிலே கூட்டிப் போகிறோம்'' என்றாள் வேதவல்லி.

''அப்படியே செய்யுங்கோம்மா...'' என்ற அங்கம்மா வள்ளியை அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்கு வந்துவிட்டாள்.

பக்கத்து வீட்டுச் சேவல் 'கொக்கரக்கோ...' என்று குரல் கொடுத்தது. அங்கம்மா திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். வள்ளியையும் எழுப்பினாள்.

''எழுந்திருடி... மாடி வூட்டுக்குப் போக வேணுமா?''

''நான் ஸ்கூலுக்குப் போறேம்மா..'' கெஞ்சினாள் வள்ளி.

''சரிதான் போடி! இங்கே பட்டினி கிடந்து சாகணுமா? பங்களூரு நல்ல ஊராம். வேதவல்லி அம்மாளும் ரொம்ப நல்லவங்க. அங்கே காபி, பலகாரமெல்லாம்கொடுப்பாங்க:..வாங்கித் தின்னுப்புட்டு வேலையைப் பார்ப்பியா.. இஸ்கூலுக்குப் போகிறளாமில்லே.... இஸ்கூலுக்கு...'' உரத்த குரலில் கத்தினாள் அங்கம்மா.

அழுது கொண்டே புறப்பட்டாள் வள்ளி.

பங்களூருக்கு வந்த மறுநாள்; காலை நேரம். அழுது கொண்டே துணிகளைக் காயப் போட்டுக் கொண்டிருந்தாள் வள்ளி.

''வள்ளி! ஏன் அழுகிறாய்...?'' என்று கேட்டாள் அங்கே வந்த வேதவல்லி.

''ஒன்னுமில்லீங்க...'' என்றாள் வள்ளி அழுகைக்கு நடுவிலே.

''இங்கே வேலை செய்ய உனக்கு இஷ்டமில்லை. அப்படித்தானே?''

''அப்படி யெதுவுமில்லீங்க. படிக்கணும்னு ஆசை. அவ்வளவுதாங்க'' தைரியமாகச் சொல்லி விட்டாள் வள்ளி.

''அழாதே வள்ளி! இந்தத் தெருக் கோடியிலே ஒரு பள்ளிக்கூடம் இருக்

கிறது. தமிழும் சொல்லிக்கொடுப்பாங்க. அதிலே 'ஷிப்ட்' முறைதான். அரைநாள் போனால் போதும். மீதி அரை நாள் இங்கே வேலை செய்...'' என்று அன்புடன் கூறினாள் வேதவல்லி.

''அம்மாவுக்குத் தெரிஞ்சாத் திட்டும்.''

''உன் அம்மாவுக்குத் தெரிந்தால் திட்டுவாள் என்றால் அவளுக்குத் தெரிய வேண்டாம். நான் கவனித்துக் கொள்கிறேன். கவலைப்படாதே!'' தைரியம் கூறினாள் வேதவல்லி.

வேதவல்லி மிகவும் நல்லவள். சொன்னபடியே செய்தாள். ஐந்து வருடம் போனதே தெரியவில்லை. வள்ளி எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றாள். பிறகு அவளை 'டைப் ரைட்டிங்' பயிற்சிக்கும் அனுப்பி இரண்டு தேர்வுகளிலும் தேர்ச்சி பெறச் செய்தாள். அது மட்டுமல்ல. வள்ளிக்கு ஒரு 'டைப்பிஸ்ட்' வேலையும் வாங்கிக் கொடுத்தாள். வள்ளி முதல் மாதச் 'சம்பளத்தை வாங்கிக்கொண்டு வந்து வேதவல்லியின் காலடியில் வைத்து வணங்கினாள்.

''ரொம்ப சந்தோஷம் வள்ளி. நாலு நாள் லீவு போட்டுட்டு நாளையே நீ ஊருக்குப் போ. உன் அம்மாவிடம் இந்த முதல் மாதச் சம்பளத்தைக் கொடு இனிமேல் நீ இங்கே வீட்டு வேலை செய்ய வேண்டாம். ஆபீஸ் வேலைக்குப் போக வேண்டுமே! திரும்பி வரும்போது உன் அம்மாவையும் கூட்டிக்கொண்டு வந்து எங்க வீட்டிலே தங்கலாம். என் அம்மாவுக்கும் லெட்டர் தாரேன்.''

அரைமனத்துடன் ஊருக்குப் புறப்பட்டாள் வள்ளி.

குடிசை வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் அங்கம்மா.

''அம்மா!'' மெள்ள அம்மாவின் அருகில் வந்தாள் வள்ளி.

''ஆ! என் வள்ளி! ஆளே மாறிட்டியேடி! எப்ப வந்தே?''

''இப்பத்தாம்மா. ஒரு நல்ல சேதி சொல்லத்தான் வந்தேன். இந்தாங்க என் முதல் மாதச் சம்பளம்...'' என்று தன் கையிலிருந்த நானூறு ரூபாய்களைத் தன் அம்மாவின் கைகளில் வைத்தாள் வள்ளி.

அங்கம்மாவின் முகமெல்லாம் பல்லாயிற்று. ''ஏதுடி... இம்புட்டு ரூவாய்? என்ன வேலைடி பாக்குறே நீ?''

''டைப்பிஸ்ட் வேலையம்மா. வேதவல்லி அம்மாதான் வாங்கிக் கொடுத்தாங்க!''



''உனக்கு அடிக்கத் தெரியுமாடி?''

''ம்.... அந்தம்மா தான் படிக்கவச்சாங்க... அதுமட்டுமில்லே... நான் பத்தாவதுகூட பாஸ் பண்ணிட்டேன். அம்மாதான் என்னைத் தினமும் அரைநாளு ஸ்கூலுக்கு அனுப்பிப் படிக்கச் சொன்னாங்க...''

''அடி ஆத்தே! அந்த அம்மா நல்லாயிருக்க... எம்புட்டு நல்லகாரியம் செஞ்சிருக்காங்க...''


''ஆமாம்மா... வேதவல்லியம்மா ரொம்ப நல்லவங்க. பெங்களூருக்கு நம்ம ரெண்டு பேரையும் வரச் சொல்லியிருக்காங்க. மூணு நாளிலே புறப்படணும். அவுங்க அம்மாவுக்கும் கடுதாசி தந்திருக்காங்க''.

''அடடே. அப்படியா! ஆனால், வள்ளி, நீ பெரி...ய நெஞ்சழுத்தக்காரிதான். அஞ்சாறு வருஷமாப் படிச்சிருக்கே... வருசத்துக்கு ஒரு வாட்டி இங்கே உன்னைக் கூட்டி வருவாங்க. அப்ப என்னண்டே மூச்சுக்கூட விட்டல்லியே...!'' என்றாள் அங்கம்மா ஆச்சரியமாக.


''சொன்னால் நீ 'பொட்டச்சிக்கு எதுக்குடி படிப்புன்னு' திட்டுவே...''

''என் ராசாத்தி... நீ நல்லாயிருக்கணும்...வா, மாடி வீட்டு மகராசி வீட்டுக்குப் போவோம்...'' என்று மகளை அன்புடன் அணைத்தபடி அழைத்துக் கொண்டு சென்றாள் அங்கம்மா.

உங்களுக்குத் தெரியுமா?




பறவை இனங்களில் "டௌகான்" என்னும் பெயர் கொண்ட இப்பறவைக்கு மட்டுமே "கோடரி" போன்ற அலகு காணப்படுகிறது.



முதன் முதலாக நீரில் மிதக்கும் வீடுகளே அமைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள் ஸ்காட்லாந்து மக்கள்தான்.

நேபாளிகள் முத்துக்கள் பதித்த, பறவைகளின் இறகுகள் சொருகப்பட்ட "கிரீடங்களை" முக்கிய விழாக்களில் அணிந்து கொள்வர்.





பூமியின் தன்மைகள் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் ஏறக்குறைய 23 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரேவிதமான பருவ நிலைகள் ஏற்படும் என்கிறார்கள்.

— செந்தமிழ்ச்செல்வன் —



தேடி வரும் தெய்வ அருள்

கமல வேலன்

இரட்டை மதகடி மிகச் சின்ன கிராமம். ஊருக்குள் ஏதேனும் அதிசயமாய் நடந்துவிட்டால், கண் திறந்து கண் மூடுவதற்குள் எல்லோரது வீடுகளிலும் செய்தி பரவிவிடும்.

மோகனுக்கு அவன் அப்பா அனவரதம்பிள்ளை 'மொபட்' வண்டி வாங்கிக் கொடுத்துவிட்டார். அந்த ஊரைப் பொறுத்த வரையில் அது மாபெரும் அதிசயம்தான்! மோகன் தேலூர் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது வருஷமாக ஒன்பதாவது படிப்பவன். இரட்டை மதகடியிலிருந்து தேலூர் சுமார் நான்கு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அந்தக் கிராமத்திலிருந்து நிறைய மாணவர்கள் நடந்து சென்று படித்து வருகிறார்கள். மோகன் ஒரே பிள்ளை; செல்லப் பிள்ளை. அப்பாவிடம் அழுது அடம் பிடித்து 'மொபட்' வாங்கித் தரச் சொல்லி, சாதித்தும் விட்டான்! தமது அந்தஸ்துக்குத் தனது மகன் மொபட்டில் சென்று படிப்பதுதான் சரி என்று அனவரதம் பிள்ளையும் நினைத்தார். மோகன் படிப்பிலும் இதனால் முன்னேற்றம் தென்பட்டது. முன்பெல்லாம் வாரத்தில் இரண்டு நாள் பள்ளிக்கு மட்டம் போட்டுவிடுவான். மொபட் வாங்கியதிலிருந்து பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று வருகிறான். இது ஒருவகையில் முன்னேற்றம்தானே!

''மோகன்... டேய்... டேய்... நான் உன் பின்னாலே உட்கார்ந்து வர்றேண்டா...''

''அதெல்லாம் முடியாது. வண்டி கெட்டுப் போயிடும்'' மொபட்டை நிறுத்தாமல் மெதுவாக ஓட்டிக் கொண்டே பதில் சொன்னான் மோகன்.

''டேய்... டேய்... இன்னிக்கு ஒருநாள் மட்டும் ஏறிக்கிறேண்டா...'' அந்தோணி வண்டி கூடவே ஓடிக் கெஞ்சினான்.

''சரி, அப்படின்னா அறிவியல்லே ஆறு பாடம் கேள்வி - பதில் எழுதல்லே. நீ எழுதித் தர்ரதாயிருந்தால் சொல்லு, ஏத்திக்கறேன்.''

புதுவண்டி. அதில் ஜம்மென்று உட்கார்ந்து போக வேண்டும். எல்லா மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முன்னால் மோகனுடன் போய் இறங்கினால் பெருமையாகவும் இருக்கும்.

அந்தோணியின் மனம் இப்படியெல்லாம் ஆசைப்பட்டது. ஆறு பாடங்களையும் எழுதித் தர அவன் சம்மதம் சொல்லிவிட்டான். பிறகென்ன? ''குஷி''யான மொபட் சவாரிதான்!

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நண்பனாக மோகன் வண்டியில் வரத் தொடங்கினார்கள். வீட்டுக் கணக்கு செய்து கொடுப்பவன், கையெழுத்து நோட்டு எழுதித் தருபவன், பூகோளப் படம் வரைந்து தருபவன்... இப்படியாக உதவுகிற எல்லோரையும் அவன் ஏற்றிச் செல்லத் தொடங்கினான்.

லாட்டரிச் சீட்டுக் கடையைச் சுற்றி நிற்கும் கூட்டம் போல், மோகனைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் நின்றது. அவனுக்கு அது பெருமையாகவும் இருந்தது. ஆனால், ஜெயராமன் மட்டும் அதற்கு விதிவிலக்கு!

அவன் ஒருநாள்கூட இவன் வண்டியில் ஏற வேண்டும் என்று விரும்பியதே கிடையாது!

ஜெயராமன் நன்றாகப் படிப்பவன். வகுப்பிலே முதல் 'ராங்க்' மாணவன். அவன் பொது அறிவு — வினா—விடைகளிலும் முதலில் நிற்பவன். படிப்பைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்க மாட்டான். சிறந்த சாரணனும்கூட. மோகனுக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது. எப்படியாவது ஜெயராமனை மட்டம் தட்ட வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தான்.

அப்படி ஒரு வாய்ப்பு அன்று கிடைத்தது. ஜெயராமன் அம்மாவுக்கு ஒத்தாசையாக வேலைகள் செய்துவிட்டு, வீட்டை விட்டுப் புறப்படும் போது நேரம் ஆகிவிட்டது. வேகவேகமாக நடந்தான். அந்தச் சமயம் வழியில் மோகனின் 'மொபட்' வந்தது.

''டேய்... மோகன், நான் உன் மொபட்டில் வர்றேன்டா. நேரமாயிட்டுது'' என்று கேட்டான்.

மோகனுக்கு உள்ளூர மகிழ்ச்சி. இவனை மட்டம் தட்ட இதுவே நல்ல தருணம் என நினைத்தான்.

''ஓ... தாராளமா வாயேன். ஆனால், வீட்டுப் பாடம் எழுதித் தரணும். செய்வியா?'' — மோகன் வலையை விரித்தான்.

''சொல்லி வேணாத் தர்றேன். எழுதித் தர மாட்டேன். அது தப்பு'' ஜெயராமன் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான்.

''போடா... பிச்சாத்து! பெரிய படிப்பாளின்னு திமிரு... சொந்தமா.. ஒரு சைக்கிள் வாங்கக்கூட வகையத்த பயல்... 'மொபட்' சவாரி கேக்குதோ?'' மழைக் காலத்தில் சேற்றை வாரி இறைக்கும் பேருந்து போல, வார்த்தைகளை அள்ளி வீசி விட்டுச் சென்றான் மோகன்.

வசைமாரி பள்ளியிலும் தொடர்ந்தது.

''அல்பப் பயல்...''

''இந்த மூஞ்சியை என் மொபட்டிலே ஏத்திக்கிட்டு வரணுமாம்!''

''நீயெல்லாம் எப்பவும் கால்நடை தான்டா'' — இன்னும் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினான். ஓசிச் சவாரி நண்பர்கள் மோகனுக்கு ஒத்துப் பாடினார்கள். நரிக்கூட்டத்தில் அகப்பட்ட முயல் மாதிரி ஜெயராமன் திகைத்துப் போனான்!

''ஜெயராமா... நம்ப மாதிரி நிர்க்கதியா யிருக்கிறவங்களுக்குத் தெய்



வம்தான் துணை. நீ படிப்பிலே கவனத்தைச் செலுத்து. சரஸ்வதி அருள் பூரணமாயிருந்துட்டா... உலகிலே எல்லோரும் உன்னைத் தேடி வருவாங்கடா. படி. கஷ்டப்பட்டு நல்லாப் படி'' — தந்தையை இழந்த அவனுக்குத் தாயார் அடிக்கடி சொல்லும் தாரக மந்திரம் இதுதான். அந்தத் தாயின் அன்புக் கட்டளையை அப்பொழுது நினைத்துக் கொண்டான். கேலி பேசியவர்களைப் பற்றி வருத்தப்படவேயில்லை. வழக்கம் போல வகுப்பில் பாடங்களைக் கவனித்தான்.

பள்ளித் தலைமை ஆசிரியர் அன்று மிகவும் மகிழ்ச்சியில் மிதந்தார். பள்ளிப் பிரார்த்தனையின்போது அதற்கான காரணமும் தெரிந்தது.

''அன்பு மாணவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்பு பள்ளி மாணவ, மாணவியருக்காக... ஒரு சேவைச் சங்கம் விறுவிறு வினா — விடைப் (Quiz) போட்டி, மற்றும் கட்டுரைப் போட்டி நடத்தியதை நினைவிருக்கிறதா? அந்தப் போட்டிகளில், மாநிலத்திலேயே முதல் மாணவனாக நமது பள்ளியைச் சேர்ந்த ஒன்பதாம் வகுப்பு மாணவன் ஜெயராமன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான்.''

மாணவர்களின் கரவொலி விண்ணை எட்டியது.

தலைமை ஆசிரியர் தொடர்ந்தார்:

''தமிழகத்தில்.. தஞ்சை மாவட்டத்தில் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் நம் பள்ளியைப் பார் அறியச் செய்த அந்த மாணவனுக்கு மனம் நிறைந்த பாராட்டுதல்கள்!''

''அறிவை வளர்த்துக் கொள்கிறவர்களிடம் தெய்வ அருள் தேடி வரும் என்பதற்கு ஜெயராமனே சிறந்த உதாரணம். மாணவர்களே, அவனுக்கான முதல் பரிசு என்ன தெரியுமா?''

மாணவர்கள் முகத்தில் ஆர்வம்.

''வருகிற முழு ஆண்டு விடுமுறையில் லண்டன், பாரிஸ் ஆகிய நாடுகளில் பதினைந்து நாட்கள் சுற்றுலாவாக அவனை அழைத்துச் செல்லுகிறார்கள். இதற்கான செலவு முழுவதையும் அந்தச் சேவைச் சங்கம் ஏற்றுக் கொள்கிறது. மேல்நாடுகள் செல்லவிருக்கும் ஜெயராமனுக்கு மீண்டும் பள்ளியின் சார்பில் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' தலைமை ஆசிரியர் பூரிப்புடன் கூறினார்.

பள்ளி எங்கும் மகிழ்ச்சி வெள்ளம். எல்லா ஆசிரியர்களும் அவனைத் தனித் தனியே அழைத்துப் பாராட்டினார்கள்.



ஜெயராமன் தன் அன்னை சொன்ன வார்த்தைகளை நினைத்துக் . கொண்டான்.

''சரஸ்வதி அருள் பூரணமாயிருந்துட்டா... உலகிலே எல்லோரும் உன்னைத் தேடி வருவாங்க...'' அம்மா சொன்னது எவ்வளவு பெரிய உண்மை!

மோகனைச் சூழ்ந்து நின்ற மாணவர்கள் இப்பொழுது ஜெயராமனைச் சூழ்ந்து நின்று பாராட்டினார்கள்.

மோகனுக்கு அழுகை முட்டி நின்றது.

''ஜெயராமா.., சைக்கிளுக்கே வகையத்தவன்னு உன்னைக் கேலி பேசி, உன் மனசைப் புண்படுத்திட்டேன்... ஆனா... நீ உன் திறமையாலே இப்போ ஆகாய விமானத்திலேயே பறக்கப் போறே! உன்னாலே நம்ப ஊருக்கே பெருமை. என்னை மன்னிச்சுடு ஜெயராமா!'' மோகன் தன் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டான்.

''எப்பவுமே நீ என் நண்பன் தான்!'' ஜெயராமன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

'' அது உண்மைன்னா... இன்னிக்கு நீ என் மொபட்டிலேதான் ஊருக்கு வரணும்...'' என்றான் மோகன்.

''சரி, வர்றேன். சந்தோஷம் தானே!''

மோகனின் மொபெட்டில் ஏறி மாலையில் வீட்டிற்குச் சென்றான். தன் அம்மாவிடம் மகிழ்ச்சிச் செய்தியையும் சொன்னான்.

''எல்லாம் அம்பாள் அருள். நீங்க ரெண்டு பேரும் மீண்டும் நண்பர்களானது அதைவிட எனக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.''; அந்தத் தாயுள்ளம் வாஞ்சையுடன் வாழ்த்தியது.

சறுக்கு விளையாட்டு

குண்டுமணி

'ஸ்கேட்டிங்' என்ற சறுக்கு விளையாட்டில் மூன்று வகை உண்டு. தனி நபர் சறுக்கல், இரட்டையர் சறுக்கல், ஐஸ் நடனம் ஆகியவை. சறுக்கு விற்பன்னர்கள் தங்கள் தங்கள் கோணத்தில் தனித் திறமைகளோடு அசைவுகளைச் செய்வார்கள். கலைத்திறனோடு செய்யப்படும் 'ஸ்கேட்டிங்'குக்கு மார்க் உண்டு. பெரும்பான்மை மார்க்குகளைப் பெறும் விற்பன்னருக்கு முதல் இடம் வழங்கப்படும்.

66 கஜ நீளம் 33 கஜ அகல முள்ள பரப்பளவில் சறுக்கு விளையாட்டு நடைபெறும். சறுக்கு விளையாட்டுக்குச் சங்கீதம் வைப்பதுண்டு. சறுக்கு விளையாட்டுப் போட்டிக்கு ஒரு ரிபரி, ஒன்பது நீதிபதிகள், இரு அறிவிப்பாளர்கள், இரு நேரக் கணிப்பாளர்கள் இருப்பார்கள்.

இரட்டையர் சறுக்கல், தனி நபர் சறுக்கலுக்கு இரண்டு நிமிஷங்கள் ஒதுக்கப்படும்.

போட்டியாளருக்குப் பந்தய நடுவில் இடையூறு நிகழ்ந்தால், அதற்கு அவர் பொறுப்பில்லை என்றால் ரிபரி மறுபடியும் அந்தப் போட்டியாளர் சறுக்குப் பந்தயத்தைத் தொடரச் செய்யலாம். ஸ்கேட்டிங் கருவி ஒரு தனி எஃகுப் பட்டை 3 மில்லி மீட்டர் அகலம் கொண்டதாயிருக்கும்.

ஒரு பெண்ணோடு கைகோத்துச் சறுக்குப் போட்டியில் கலந்து கொள்ளும் போது குதிக்கக் கூடாது. மற்றவரது காலையோ, கையையோ கழுத்தையோ சுற்றி வளைத்துக் கொண்டு சறுக்கக் கூடாது. ஒருவரை உயரத் தூக்கக் கைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். 'Figure' என்பது ஸ்கேட்டிங் போட்டியில் முக்கியமானது. வட்டமான குறியீடுகள் அதனைக் குறிக்கும். மூன்று வட்டங்களைத் தொடர்ச்சியாகச் சறுக்கிக் கடக்க வேண்டும். ஒவ்வொரு நீதிபதியும் போட்டியாளரின் ஆட்டத் திறனுக்கும், கலைத் திறனுக்கும் தகுந்தபடி மார்க் அளிப்பார். அதிக அளவு மார்க் பெற்றவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்.

நவீன சறுக்கு விளையாட்டு, கலிபோர்னியாவில் 1960–ம் வருஷம் நடைபெற்றிருக்கிறது. சறுக்குச் சக்கரங்களைக் கால்களில் அணிந்துகொண்டு நடுத்தெருவில் வேகமாகச் செல்லும் போது பாதசாரிகளுக்குப் பயம் ஏற்







பட்டது. பல விபத்துக்களும் ஏற்பட்டன. இதனால் இந்தச் சறுக்கு விளையாட்டுக்கு ஆதரவு குறைந்தது. அமெரிக்கா நடுத்தெருக்களில் சறுக்கு விளையாட்டுக்கள் செய்வோருக்குத் தடை விதித்தது.

1973–ம் வருஷம் பிராங்க்தோஸ் வொர்த்தி என்பவர் பிளாஸ்டிக் மூலம் 'உரித்தேன்' சக்கரம் படைத்த சறுக்குப் பலகையைத் தயாரித்தார். இந்தப் புதிய தயாரிப்புக்குப் பிறகு சறுக்கு விளையாட்டு பிராபல்யமாயிற்று.

பிரிட்டனில் இந்தச் சறுக்கு விளையாட்டு 1976–ல் பரவியது. ஸ்கேட் போர்டு பூங்காக்கள் தொடங்கப்பட்டன. அமெரிக்காவில் மிகத் தீவிரப் பயிற்சி ஏற்பட்டு அந்த விற்பன்னர்களுக்கு நிறையவருமானமும் கிடைத்தது.

கலிபோர்னியாவிலுள்ள டோரன்ஸில் 'ஸ்கேட்டிங்' ரொம்ப 'பாபுலர்'! மூன்று ஏக்கர் நிலப் பரப்பிலுள்ள 'ஸ்கேட்டிங் உலகம்' 1977–ல் தயாராகியது. இங்கு சரிவுகள், குழாய்கள், கரைகள், அற்புதமானவை. ஐந்நூறு சதுர அடி பரப்பிலுள்ள சறுக்குப் பிரதேசம், பாதாளச் சுரங்க இசை, சறுக்கு விற்பன்னர்களுக்குச் சொர்க்கம்.

1970–ம் வருஷம் இந்தச் சறுக்கு விளையாட்டு ஜப்பான், தென் ஆப்பிரிக்கா, சௌதி அரேபியா, ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களுக்குப் பரவியது. சூரிச்சில் நடைபெற்ற சறுக்குப் போட்டியில் ஸ்விட்சர்லாந்து நாடும், ஜெர்மனி நாடும் முன்னணியில் நின்றன. கிரிஸ்டல் பாலஸில் நடைபெற்ற சறுக்குப் போட்டியில் டாம் ஹாயின் வெற்றி பெற்றார்.

பனிக்கட்டியிலும் சறுக்கு விளையாட்டு உண்டு. இந்தச் சறுக்கு விளையாட்டில் துடுப்புப் போன்ற பலகையை ஐஸ் கட்டியில் சறுக்கிக் கொண்டு செல்வார்கள். இந்தப் பனிச் சறுக்கு விளையாட்டு முதன் முதலில் ஸ்காண்டிநேவியாவில் தோன்றியதாக இருக்கக் கூடுமென்று சொல்கிறார்கள். ஆனால், எங்கு முதலில் பயிற்சி செய்யப்பட்டது என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. இந்த மாதிரி பனிச்சறுக்கு விளையாட்டு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே இருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஐஸ் ஸ்கேட்டிங் கிளப் 1901–ம் வருஷம் ஸ்விடனிலுள்ள ஸ்டாக்ஹோமில் தொடங்கப்பட்டிருக்கிறது. லண்டன் ஸ்கேட்டிங் கிளப்பும் 1890–லிருந்து 1900 ஆண்டு வரை இந்தப் பனிச் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறது.

அமெரிக்காவில்ஜேனட்லின்என்பவர் புரொபஷனல் சாம்பியன். டோக்கியோவில் நடைபெற்ற சறுக்கு சாம்பியன் போட்டியில் 15,000 டாலர்கள் பரிசு பெற்றார். இவர் ஐந்து வருஷங்கள் அமெரிக்காவில் அமெச்சூர் பட்டத்தினைப் பெற்ற பிறகுதான் 1973ம் ஆண்டில் புரொபஷனலாக மாறினார்! சறுக்கு விளையாட்டு கண்ணுக்கு விருந்து மட்டுமல்ல; பொருள் ஈட்டித் தரும் விளையாட்டாகவும் திகழ்கிறது!



''அப்பா!...'' கண்களில் மகிழ்ச்சி பொங்க, தந்தையை வரவேற்றாள் காயத்ரி.

காயத்ரி, தங்கம் நடுநிலைப் பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கிறாள்.

''செல்லக் கண்ணு...'' கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு உள்ளே சென்றார், அவள் தந்தை.

''அப்பா! எங்க கிளாஸிலே புதுசா சேர்ந்திருக்காளே சுசி, அவள் தினம் தினம் கனவு காண்பாளாம். தான் கண்ட கனவைப் பத்தி அழகழகாச் சொல்லு அப்பா. எவ்வளவு சுவையாயிருக்கு தெரியுமா?'' கண்கள் அகல விரிய ஆச்சரியத்துடன் கூறினாள்.

''ஓ... அப்படியா?'' சின்னதாய்ப் புன்னகைத்தார் சிவராம் - காய்த்ரியின் தந்தை.

''அப்பா, சுசி கண்ட கனவு மாதிரி எனக்கு ஒருநாள்கூட வரமாட்டேங்குதே! அவள் கனவிலே பெரிய தீவு—

பெரிய கப்பல்—

கலர் கலரா ஏரோப்ளேன்—

பெரிசா பலூன்கள்—

அழகான சின்ன யானைக்குட்டி—

...இப்படி இன்னும் நிறைய வருதாம். என் கனவிலே ஒண்ணும் வரல்லியே அப்பா...''

காயத்ரியின் குரலில் தொனித்த வருத்தத்தைக் கண்டு கவலைப்பட்டார் சிவராம்.

''அப்படியா! சரி. அவள் கண்ட கனவுகளைப் பத்தி நீ கேட்டதையெல்லாம் சொல்லு'', என்று சிவராம் தூண்ட, காயத்ரி ஒவ்வொன்றாய்ச் சொல்ல ஆரம்பித்தாள்.

ஒவ்வொன்றும் ஒரு கதை போல் இருந்தது.

மறுநாள் சிவராமின் அலுவலகம் விடுமுறை —

நூலகத்தில் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த அவரின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன!

நேற்று காயத்ரி சொன்ன கனவுக் கதைகள் அந்தப் புத்தகத்தில் வரிசையாக இடம் பெற்றிருந்ததே அதற்குக் காரணம்.

அப்படியென்றால்?

அந்தச் சிறுமி இந்தக் கதைகளைப் படித்துவிட்டு, தான் கனவு கண்டதாகப் பொய் சொல்கிறாளோ?

அந்தப் புத்தகத்தைத் தம் பெயரில் பதிவு செய்து, அதை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

அன்று மாலை வீடு திரும்பிய தன் மகளிடம் சுசியின் அன்றைய கனவுக் கதையைப் பற்றிக் கேட்டார்.

அந்தப் புத்தகத்தில் இடம் பெற்ற நான்காவது கதையைச் சொன்னாள் காயத்ரி.

தம் ஊகம் சரியென்று அனுமானித்துக் கொண்டார் சிவராம்.

''காயத்ரி! இப்போ நான் ஒரு கதை சொல்லப் போறேன். அதைக் கனவில் கண்டதாக நீ சுசியிடம் சொல்லணும். சொல்றியா?''

காயத்ரி வேகமாய்த் தலையாட்டினாள், சந்தோஷம் பளிச்சிட.

அந்தப் புத்தகத்தின் ஐந்தாவது கதையை சிவராம் உணர்ச்சி பூர்வமாய்ச் சொல்ல, விருப்பமுடன் கேட்டாள் காயத்ரி.

மறுநாள் காயத்ரி கனவுக் கதை சொல்லப் போவதையும் அதைக் கேட்டு சுசி அதிர்ச்சி அடையப் போவதையும் காட்சியாய் மனக்கண்ணில் கொண்டு வந்து பார்த்தார், சிவராம். அவர் முகத்தில் புன்னகை அரும்பியது.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



கப்பலோட்டிய தமிழர்

பிறந்த நாள்: 5-9-1872 மறைந்த நாள்: 18-11-1936

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka